# ஒன்றுபட்ட உள்ளங்கள்

ரமணிசந்திரன்



# ஒன்று பட்ட உள்ளங்கள்

ரமணிசந்திரன்

அருணோதயம்
3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை :: சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : ஒன்று பட்ட உள்ளங்கள் |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : டிசம்பர் 2004 |
| இரண்டாம் பதிப்பு | : செப்டம்பர், 2006 |
| மூன்றாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2007 |
| நான்காம் பதிப்பு | : டிசம்பர், 2008 |
| ஐந்தாம் பதிப்பு | : மே, 2010 |
| ஆறாம் பதிப்பு | : செப்டம்பர், 2011 |
| ஏழாம் பதிப்பு | : மார்ச், 2013 |
| தாளின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 184 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |



# ஒன்று பட்ட உள்ளங்கள்

# ஒன்று பட்ட உள்ளங்கள்

1



**வீ**ட்டினருக்குப் பரிசுகளாக வாங்கி வந்த வற்றோடு, அன்றாடம் மிகவும் தேவைப் படும் சில பல பொருட்களையும் அடைத்ததில் சற்றுப் பெரிதாகி விட்ட தோள்பையும், கைப்பையுமாகப் பஸ்சை விட்டுச் சுந்தரி இறங்கியபோது, வெளிச்சத்தை விட்டு விட்டு, வெக்கையைத் தன்னோடு இழுத்துக் கொண்டு மாலைக் கதிரவன் மறையத் தொடங்கியிருந்தான்.

இளந் தென்றல் இதமாக வீசியது.

எல்லாம், இந்த அழகான சின்னக் கன்னி சுந்தரிக்குச் சுகமாக இருக்கட்டுமே என்றுதானே! தன்னையறியாது, சுந்தரியின் முகத்தில் புன்னகை மலர்ந்து விரிந்தது.

ஒரு வழியாக வீடு வந்தாயிற்று.

படிப்பு, ப்ராஜெக்ட் என்று வெளியூரில் தங்கவோ, சுற்றவோ தேவையில்லை.

நகரத்தின் போக்குவரத்து நெரிசலின் தூசு, வாகனப் புகை எதுவும் கலவாத சுத்தமான காற்றைச் சுகமாக உள்ளிழுத்தவள், சாலையிலிருந்து திரும்பித் தன் வீடு

இருந்த குடியிருப்புப் பகுதியை விழி விரித்து ஆராய்ந்தாள்.

இந்திர புரி என்று பெரிய போர்டு.

சற்றுத் தொலைவில் தெரிந்த குடியிருப்புப் பகுதி, முன்னைக் கிப்போது பக்கவாட்டிலும், பின்புறத்திலும் பெரிதாக விரிந்திருப்பது நன்றாகவே தெரிந்தது.

சாலையை ஒட்டி இருப்பது, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம். அல்லது, அதுவும் இப்போது வீடுகளாகியிருக்கக் கூடும்.

எத்தனை புதிய கட்டடங்கள்!

இந்த விரிதல், அவர்களது குடும்பத் தொழிலுக்கு நல்லதுதான்.

ஆனால், சுவாசிக்க இப்படிச் சுத்தமான காற்றுக்குத் தான் பஞ்சமாகி விடும்.

'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' என்பது இதைத்தான் போலும்...

எண்ணமிட்டவாறே தோள்ப் பையைத் தூக்கியபோது மற்றப் பொருட்களைப் பார்சலில் கொண்டு வர ஏற்பாடு செய்த தன் கெட்டிக்காரத்தனத்தைச் சுந்தரி உள்ளூர மெச்சிக் கொண்டாள்.

இன்னும் மூன்று பெட்டிகளையும் சேர்த்து, இந்த இடத்தில் இருந்து வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது எப்படி?

சொல்லிவிட்டு வந்திருந்தால், வீட்டிலிருந்து ஆள் அனுப்பியிருப்பார்கள். ஆனால், இந்தத் திடீர் மகிழ்ச்சியைத் தர முடியாது.

அம்மா, அத்தை, அப்பா எல்லாரின் முகங்களையும் கற்பனையில் ரசித்தவாறு, பெரிய பையைத் தோளில் மாட்டினால், அதுவும் கனமாகத்தான் இருந்தது. ஆனால், கொஞ்சம் சிரமப்பட்டுக் கொண்டு போய் விடலாம்.

கைப்பையைக் கழுத்தில் முன்புறமாகத் தொங்கவிட்டுக் கொண்டு, அவள் நடக்க முயன்றபோது, ''நீங்கள் செல்வது இந்திரபுரிக்கு என்றால், பெரிய பையை நான் தூக்கி வந்து தர முடியும்!'' என்றது ஓர் ஆண் குரல்.

சிறு திகைப்புடன் திரும்பிப் பார்த்தால், ஓர் இளைஞன் - வயது பின் இருபதுகளில் இருக்கக் கூடும் - அருகில் இருந்த மழை நீர்ப் பாலத்தின் அருகிலிருந்து அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

குரலைப் போலவே, சற்று மரியாதைக் குரிய தோற்றம்தான்.

ஆனால், தோற்றத்தை வைத்து, இந்தக் காலத்தில் யாரையும் கணிக்க முடியாதே!

அவனை ஏற இறங்கப் பார்த்த சுந்தரிக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. இவன்..

இவன், அவனாக இருந்தால், எதற்கு வம்பு?

ஆனாலும், நீள அகலங்களைப் பார்த்தால், சிரமப் படாமலே இவனால் பையைத் தூக்கி வந்து தர முடியும்.

''என்ன? இந்திரபுரிதானா அல்லது அடுத்த பஸ்சுக்கு நிற்கிறீர்களா?''

''இந்திரபுரிதான்.''

''பின்னே என்ன தயக்கம்?'' என்று, பைக்காகக் கையை நீட்டினான் அவன்.

"அதில்லை.." என்று இழுத்தவளின் கண்களில் குறும்பு எட்டிப் பார்த்தது. "பையைத் தூக்கி வந்து தருவீர்கள்தானே? தூக்கிக் கொண்டு ஓடிவிட மாட்டீர்கள்தானே?" என்று கேட்டபடி, தோளில் மாட்டியிருந்த ஸ்டிராப்பைக் கழற்றத் தொடங்கினாள் சுந்தரி.

இளைஞனின் நீட்டிய கரங்கள் சட்டெனக் கீழிறங்கிக் கொண்டன.

உதட்டைப் பிதுக்கி உச்சுக் கொட்டிவிட்டு, "நல்லதற்குக் காலமில்லை என்பது, இதைத்தான் போலும்! அவ்வளவு அவநம்பிக்கையோடு என்னிடம் தருவானேன்? நிம்மதியாக, நீயே தூக்கிக் கொண்டு போ!" என்றுவிட்டு, இந்திரபுரியை நோக்கி நடக்கத் தொடங்கினான் அவன்.

"ஐயோ, ஐயோ, சார் சார், சாரி, சார்! சும்மா, ஒரு வேடிக்கையாகச் சொன்னேன், சார்! அதற்குள் இந்தத் தொட்டால் சுருங்கிச் செடி மாதிரியே, நீங்களும் முகத்தைத் திருப்பிக் கொள்கிறீர்களே!" என்று, அங்கே தரையோடு படர்ந்து வளர்ந்திருந்த தொட்டால் சுருங்கிச் செடிகளைக் காட்டிச் சொன்னாள் அவள்.

கால் செருப்பால் லேசாகத் தொடுமுன் தன் சிறு இலைக் கொத்துகளை அந்தச் செடி மூடிக் கொள்வதும், காலை நகர்த்தியதும், சில வினாடிகளிலேயே இலைகளை மீண்டும் விரிப்பதும், அவளைப் போலவே, அவனுக்கும் பார்க்கப் பிடித்தது போலும்!

ஆனால் எரிச்சலை விடவும் மனமில்லாமல், "என்ன செய்வது? நான் இங்கேயே இருப்பவன் என்பதால், இந்தச் செடிகளின் குணம் எனக்கும் வந்திருக்கலாம்!"

என்றவாறு, பையை வாங்கி, அனாயாசமாகத் தோளில் போட்டுக் கொண்டு, "அத்தோடு, ரொம்பவும் செடி களை உரச வேண்டாம். இருட்டப் போகிற நேரம். செடிக்கு அடியில் ஏதாவது பூச்சி பொட்டு இருந்து கடித்து வைக்கப் போகிறது!" என்று அவளை எச்சரித்தான்.

அவள் சட்டெனத் துள்ளிக் குதித்துச் செடியை விட்டு விலகவும், திரும்பி அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, "இங்கே, ஊருக்குப் புதிதா? ஆனால், பார்த்த முக மாகவும் தோன்றுகிறது. எங்கே பார்த்திருக்கக் கூடும்?" என்றான், யோசனையோடு.

கண்ணோரம் சுருங்க, அவள் உதடுகளை அழுந்த மூடுவதைக் கவனித்து, "என்ன, என்ன விஷயம்?" என்று கேட்டான் மனோகரன்.

கடைக் கண்ணால் நோக்கிவிட்டு, "அதற்கு ஒரு விளக்கம் இருக்கிறது. ஆனால்... எதற்கு வம்பு? நீங்கள் பாட்டில், பையைப் போட்டுவிட்டுப் போய்விட்டால், நானே அல்லவா தூக்கிச் சென்றாக வேண்டும்? ரொம்பக் கஷ்டம் சார்!" என்றாள் அவள்.

அவள் பிகு பண்ணுவதை உணர்ந்து, சிறு முறு வலுடன், "பரவாயில்லை, சொல்லு. நீ சொல்லுகிற இடம் வரையிலும் பையைக் கொணர்ந்து தந்துவிட்டே போகி றேன். தைரியமாகச் சொல்லு!" என்று ஊக்கினான் அவன்.

அதன் பிறகும் தயங்குவது போலச் சற்றுப் பாவ்லா காட்டிவிட்டு, "அழகான பெண்களைக் கண்டதும், ஆண்கள் பேச்சைத் தொடங்குகிற உத்தி இதுதானே? பார்த்த மாதிரி இருப்பதாகச் சொல்வது!" என்றாள் அவள் சாது போல.

புருவம் தூக்கி, "அழகான பெண்ணா? அது யார்?" என்று சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "ஓகோ, உன்னைத் தான் சொல்லிக் கொண்டாயா? ஆனாலும், இவ்வளவு தற்பெருமை கூடாதும்மா!" என்றான் அவன் பதிலுக்கு.

"இது தற்பெருமை அல்ல. முழு உண்மையாக்கும். அடக்கம் என்கிற பெயரில் நான் நடிப்பது இல்லை. கண்ணைத் திறந்து பார்த்தால், உங்களுக்குத் தெரியும்!" என்றாள் அவள் துடுக்காக.

"இப்போது லேசாக இருட்டத் தொடங்கி விட்டதால், இன்னொரு நாள் வெளிச்சத்தில் பார்த்து, அபிப்பிராயம் சொல்லுகிறேன். இங்கே யார் வீட்டுக்கு.. யார் வீட்டுப் பெண் நீ?" என்று விசாரித்தான் அவன்.

தன்னைப் பற்றிய விவரத்தை, அப்போது அவனிடம் தெரிவிக்க அவளுக்கு மனமில்லை.

எனவே, "யார் வீட்டுக்கும் இல்லை, சார். இங்கே வேலைக்கு வந்திருக்கிறேன்!" என்றாள் சுந்தரி.

"எங்கே? என்ன வேலை?" என்று மீண்டும் துருவினான் அவன்.

ஓரக் கண்ணால் அவனைப் பார்த்துவிட்டு, "இங்கே ஹோட்டல் அமுதம் என்று ஒரு மோட்டல் இருக்கிறதே, அதில் வரவேற்புப் பெண் வேலை!" என்றாள் அவள்.

"ஓ!" என்றான் அவன் சுருக்கமாக.

அதற்கு மேல் அவளைப் பற்றிக் குடையாமல், "நான் இங்கே வசிப்பவன். ஒரு டாக்டர். ஆங்கில மருத்துவம். பெயர் மனோகரன். உன் பெயர்?" என்று கேட்டான்.

மீண்டும் ஓரக்கண் நோக்குடன், ''சுந்தரி!'' என்று உண்மையான பதிலைத் தந்தாள் அவள்.

அவன் ஏதோ யோசித்தபடி வரவும், ''என்னவோ, முதலில் 'கள்' விகுதி போட்டு மரியாதையாகப் பேசினீர்கள். வேலைக்கு வந்தவள் என்றதும், ஏக வசனமாகி விட்டதே!'' என்று கிண்டல் போலக் கேட்டாள்.

''இல்லையே! அதற்கு முன்பிருந்தே விட்டுவிட்டேனே! மரியாதை என்பது, கொடுத்தால் மட்டும்தானே கிடைக்கும்?'' என்றான் அவன் பதிலுக்கு.

ஆச்சரியமாக நோக்கி, ''ஹே, இந்த வினாடிவரை, உங்களிடம் நான் பயன் படுத்துவது, மரியாதைப் பன்மையைத்தான், மிஸ்டர் மனோகரன்!''

''வெறும் வார்த்தைகளில் மரியாதை இருந்தால் போதுமா? பையைத் தூக்கிக் கொண்டு ஓடி விடுவாயா என்று கேட்பதுதான் மரியாதையா? மிஸ்டர் திருடர் அவர்களே என்று அழைக்கிற மாதிரி இல்லை?''

''அதற்குத்தான் மன்னிப்பே கேட்டு விட்டேனே! அதன் பிறகுமா, கோபம்?''

''முதலிலேயே கோபப்பட்டேன் என்று சொல்வதற்கு இல்லை. பேச்சு, ரொம்பச் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறதே என்றுதான் எண்ணினேன். ஆளைப் பார்த்தால், வயதும் குறைவாகவே தோன்றியது. ஒருமையில் அழைப்பதில் தப்பில்லை என்று முடிவு செய்து, அப்படியே பேசினேன்!'' என்று முடித்தான் மனோகரன்.

''போச்சுடா!'' என்றவளுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது. ''சின்னப் பெண் என்று விட்டீர்கள். அதை மறுத்து, மரியாதை வேண்டும் என்று கேட்கவும்

வழியில்லை! ஊம்..'' என்று, நீளமாகப் பெருமூச்சு விட்டு, வருத்தம் காட்டினாள் சுந்தரி.

பெருமூச்சு முடியும்போதே, இரண்டு பேருக்கும் சிரிப்பும் வந்து விட்டது.

அதன் பிறகு, இருவரும் சாதாரணமாகப் பேசிச் சென்றனர்.

சுற்றிலும் காணப்படும் பசுமை பற்றி, இந்த ஆண்டில் பொய்த்து விடாமல் பெய்த மழை பற்றி, வாய்க்காலில் நிரம்பி ஓடும் தண்ணீர் பற்றி...

ஹோட்டல் அமுதம் இருக்கும் திருப்பம் வந்ததும், இருவருமே தயங்கி நின்றனர்.

இதற்கு மேல் வருவது, அவனுக்கு அவமானமாக முடியக் கூடுமோ? எப்படியும்...

''இனி நானே எடுத்துப் போய்விடுகிறேன். வேலை பார்க்கும் இடத்துக்கு, இன்னொருவர் சாமான் தூக்கி வருவது, அவ்வளவு நன்றாக இராது!'' என்றாள் சுந்தரி. ''இதுவரை தூக்கி வந்து தந்ததற்கு நன்றி!'' என்று, பைக்காகக் கையை நீட்டினாள்.

''அது சரிதான்!'' என்றவன், வேறு யோசித்தவாறு பையைக் கொடுத்து, ''பிறகு பார்ப்போம்!'' என்று விட்டுப் போனான்.

அவனது வீட்டுக்குச் சென்று, கை கால் கழுவிக் கொண்டு அமர்ந்தவன், தாயார் தந்த காபியை வாங்கிய வாறு, ''இன்று ஓர் அழகான பெண்ணைப் பார்த்தேன், அம்மா!'' என்றான்.

## 2



திடுதிப்பென்று, ஓர் அழகான பெண்ணைப் பார்த்ததாக மகன் சொல்லவும், அவனுடைய தாயார் திகைத்துப் போனாள் என்றே சொல்லலாம்.

ஏனெனில், பெண்களைப் பற்றி, அதிலும் இன்றைய இளம் பெண்களைப் பற்றிப் பேசுவது என்றால், மனோகரனின் வர்ணனையே வேறு விதமாக இருக்கும்.

மோசமாகக் கூறுவதில்லை.

ஆனால், அந்தப் பெண், உரிய பயிற்சிகளை நன்றாகச் செய்து, உடம்பைக் கச்சிதமாக வைத்திருக்கிறாள் என்பான். கண்ணுக்கு மை தீட்டியிருந்த விதம் கவர்ச்சிகரமாக இருந்தது. பொருத்தமான நிறத்தில் உடை அணிந்திருந்தாள்... இந்த மாதிரி, ஏதேனும் முயற்சியால் அழகாகத் தோன்றுவதாகச் சொல்லுவானே தவிர, வெறுமனே அழகி என்று லேசில் கூறுவதில்லை.

சாந்திகூட அடிக்கடி மகனைக் கேலி செய்வது உண்டு. "உன்னை மருத்துவம் படிக்க வைத்தது தப்பு. யாரைப் பார்த்தாலும், உடற் கூறுகளாகத் தெரிகிறதே தவிர, அதில் உள்ள இயற்கை அழகைக் கண்டு கொள்ளத் தெரியவில்லை. இப்படியே இருந்தாயானால், பிள்ளை யாருக்குக் கல்யாணம் ஆகிற காலத்தில்தான் உனக்கும் ஆகும்!" என்று மிரட்டுவாள்.

அப்படிப்பட்டவன், இன்று அழகான பெண்ணைப் பார்த்தேன் எனவும், நம்ப மாட்டாமல், "மெய்யாகவா? எங்கே? எப்போது?" என்று வியப்புடன் கேட்டாள்.

"ஒவ்வொரு கேள்விக்காகப் பதில் சொல்லட்டுமா?" என்று காபியை ஒரு மிடறு அருந்திவிட்டு, "மெய்

யாகத்தான் இருக்கும் என்று தோன்றியது. ஏனென்றால், அவளே அப்படித்தான் சொல்லிக் கொண்டாள்!'' என்றான் மைந்தன்.

''என்னது?! அவளே, தான் அழகி என்று, உன்னிடம் சொன்னாளா?'' என்று தாயார் மேலும் வியக்கவும், புன்னகை புரிந்து, ''நான்கூட, இப்படித் தன்னைத் தானே அழகு என்று சொல்லிக் கொள்வது தற்பெருமை என்று சொன்னேன், அம்மா. ஆனால், அது தற்பெருமை அல்ல. உண்மை என்றாள், அம்மா! கண்ணைத் திறந்து பார்த்தால், எனக்கும் தெரியுமாம். அவள் அழகி என்கிற உண்மை!'' என்று மனோகரன் விவரிக்கவும், சாந்திக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது.

ஓரப் பார்வையாக மகனை நோக்கி, ''கண்ணைத் திறந்து பார்த்து விட்டாய் போல? அவள் அழகி என்றாயே!'' என்றாள் அன்னை.

''அவளே சொன்னது, அது. இருட்டிவிட்டதால், எப் போதேனும் வெளிச்சத்தில் பார்த்துவிட்டு, அபிப்பிராயம் சொல்வதாகக் கூறிவிட்டு வந்தேன்.''

''இருட்டி... கூறிவிட்டு வந்தாயா? அதாவது, இப்போது தான் வழியில் சந்தித்தாயா? யார்? யார் வீட்டுப் பெண், அவள்?'' என்று ஆவலாகக் கேட்டாள் சாந்தி.

''வீட்டுப் பெண் அல்லவாம்! வேலை ஏற்று வந்திருப்ப தாகச் சொன்னாள்.''

''எங்கே?''

தாயை நிமிர்ந்து பாராமலே, லேசாக முறுவலித்து, ''ஹோட்டல் அமுதத்தில். வரவேற்புப் பெண்ணாம். சும்மாவே, அங்கே கூட்டம் அதிகம். இப்படி ஒரு

வரவேற்புப் பெண் கிடைத்திருப்பதால், கூட்டம் பிய்த்துக் கொண்டு போகப் போகிறது!'' என்று காபியைக் குடித்து முடித்து, கப்பை டீபாயில் வைத்தான் மனோகரன்.

''ஓ!'' என்றாள் தாயார் ஏமாற்றத்துடன்.

தாயின் ஏமாற்றத்தைப் பார்த்து, மகன் வாய்விட்டுச் சிரிக்கவும், ''ஆமாம், சிரி. உனக்கு மட்டும் என்னவாம்? அவள் மெய்யாகவே அழகிதானா என்று, நீயும்தான் அங்கே போய் எப்படிப் பார்த்து, அவளிடம் சொல்லப் போகிறாயாம்?'' என்றாள் சாந்தி சிறு வருத்தத்துடன்.

''இருக்கட்டும்மா. வேலைக்குத்தானே போயிருக் கிறாள். வீட்டுப் பெண்ணாக இருந்தால், அவளே முகத்தைத் திருப்பிக் கொள்வாளே!''

சாந்தியின் முகம் சற்று வாடியது.

''வேண்டாத விரோதம்! வீணான பகை! முப்பத் தைந்து ஆண்டுகள் ஆகியும், அது கொஞ்சமும் குறையக் காணோமே! இதெல்லாம் முன்பே தெரிந்திருந்தால்...'' என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

கேலியாகத் தாயைப் பார்த்தான் மனோகரன். ''இதற்குப் பெயர்தான் முதலைக் கண்ணீர் என்பது. சொல்லுங்கள், அம்மா! இப்படி விரோதம் வளரும் என்று முன்பே தெரிந்திருந்தால் மட்டும் என்ன செய்திருப்பீர் கள்? அப்பாவைக் கல்யாணம் செய்து கொள்ள மாட் டேன் என்று, ஒதுங்கிக் கொண்டிருப்பீர்களா? நெஞ்சைத் தொட்டு, நிஜத்தைச் சொல்லுங்களேன், பார்ப்போம்!''

மகனின் சவாலுக்குச் சற்று அசடு வழியப் பதில் சொன்னாள் பெற்றவள்.

"சே, போடா! நான் அப்படியா சொன்னேன்? இந்த இடத்தில் வசிக்காமல், வேறு எங்காவது போய்க் குடியேறி இருக்கலாம். இந்த முப்பத்தைந்து ஆண்டு களில், அந்த இடம் பழகிப் போயிருக்கும் என்றுதான் சொன்னேன். மற்றப்படி.. உன் கேள்விக்குப் பதில், ஊகூம்தான்!" என்றாள் அன்னை.

மனோகரன் எதையோ யோசித்துக் கொண்டிருக்க, தொடர்ந்த சிறு மௌனத்தைக் கலைத்து, "அந்தக் குடும் பத்தின் விரோதம், இத்தனை ஆண்டுகள் தொடரக் கூடும் என்று உன் தாத்தா, அப்பா யாருமே கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை, மனோ. இரண்டு தலைமுறை யாகத் தொடர்ந்த நட்பு, கொஞ்ச காலத்தில் எப்படியும் தளிர்த்து விடும் என்று நினைத்தார். நானும்தான். அப்படி ஓர் ஆசையும் இருந்ததால்தான், வாழ்வில் வளர்ச்சியைத் தந்த இடத்தை விட்டுப் போக மனம் இல்லாமல், இந்திரபுரியிலேயே இந்த இடத்தை வாங்கி வீடு கட்டினார்கள். ஆனால், அதுவும்கூடத் தகராறைத் தான் வளர்த்தது!" என்று பெருமூச்சு விட்டாள் தாய்.

யோசனை கலைய, "இந்த இடத்தை வாங்கியதிலும் தகராறா? அது என்ன அம்மா? எனக்குத் தெரியாதே!" என்று வினவினான் மகன்.

"இதே இடத்தை, அவர்களும் வாங்க எண்ணினார் களாம்! இதே தெருவில் முதல் வீட்டுக்காரர்களுடையது தான் இந்த இடம். அப்பா, அவருக்கு வைத்தியம் பார்த்ததால், அவசரமாக வீடு தேடுகிறோம் என்றதுமே, இந்த இடத்தைக் கொடுத்து விட்டார். அவர்கள் தரகரை அனுப்பியபோது, இங்கே பத்திரமே முடிந்து விட்டது.

அப்புறம் கேட்க வேண்டுமா? எல்லாமாகச் சேர்ந்து, கடைசியில், இப்படி அந்தக் குடும்பத்தோடு பேச்சு வார்த்தையே இல்லாமல் போய், நாம் அந்தப் பக்கம் செல்வதைக் கூடத் தவிர்க்கும்படி ஆகி விட்டது!" என்று சாந்தி வருத்தத்துடன் கூறினாள்.

பெற்றவளை நிமிர்ந்து பார்த்து, "என்னம்மா, இவ் வளவு காலம் கழித்து, இதற்காக இவ்வளவு வருத்தப் படுகிறீர்கள்? அப்படிப் பார்த்தால், ஓடையோரத்துப் பெரிய வீட்டு மனிதர்களோடு கூடத்தான் நமக்குப் பேச்சு வார்த்தை இல்லை. அப்படி எத்தனையோ பேர். இதற்காகவெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், வேறு வேலை செய்ய அவகாசமே இராது!" என்று சாதாரணமாக உரைத்தான்.

"அவர்கள் விஷயம் வேறு. அந்தக் குடும்பம், இங்கே யாருடனுமே பழகுவது இல்லை. அவர்கள் நமக்கு நட்பாக இருந்து விரோதிகள் ஆனவர்களும் அல்ல. இந்த மாதிரி முகத்தைத் திருப்புவதும் இல்லை! இப்போது பெரிய வீட்டுப் பக்கம் வாக்கிங் போகி றோம். வருகிறோம். ஏதாவது பிரச்சினை உண்டா? இவர் கள் இருக்கும் தெருப் பக்கம்கூடப் போக முடியாமல்.. அதிலும், இப்போது ரொம்பவும் சங்கடமாக இல்லை?"

"ரொம்பச் சங்கடமாகவா? அதிலும் இப்போது... இப்போதுதான் என்ன தனி? எனக்குப் புரியவில்லையே!" என்று, புருவம் உயர்த்தி, ஆச்சரியம் காட்டிக் கேட்டான் மகன்.

"அதில்லைம்மா! உன்னிடம் அழகிப் பட்டம் வாங்கி விட்ட அந்தப் பெண்ணைப் போய்ப் பார்க்க

முடியவில்லையே என்று நினைத்தேன்...'' என்று இழுத்தவள், மகனின் கண்ணோரம் சிரிப்பில் சுருங்கவும், லேசாக முகம் சிவந்து, ''ஆமாமடா! வருங்கால மருமகளாக ஆகக் கூடுமோ என்ற எண்ணம்தான். அதே ஆசைதான் என்று வைத்துக் கொள்ளேன். பெரிதாக என்னைக் கிண்டுகிறாயே! நீ மட்டும் என்னவாம்? நிஜத்தைச் சொல்லு. நீயும் அவளைத்தானே நினைத்துக் கொண்டிருந்தாய்?''

- என்று சிறு கண்டிப்பான குரலில் வினவினாள்.

''நான் ஒன்றும் மறுக்கவில்லையே அம்மா!'' என்றான் மகன்.

தாயார் வெற்றி முறுவலுடன் நிமிரவும், ''ஆனால், நீங்கள் நினைப்பது போல இல்லை. அந்தப் பெண்ணை, இதற்கு முன் எங்கேயோ பார்த்தது போல இருந்தது. அதுதான், எங்கே என்று யோசித்துக் கொண்டிருந்தேன்!'' என்று இலகுவாக முடித்தான்.

'சொத்'தென்று ஆனதைக் காட்டிக் கொள்ளாமல், ''அது, போன பிறவி முழுக்கப் பார்த்துப் பழகிய நினைவாக இருக்குமோ?'' என்று சாந்தி அப்பாவியாகக் கேட்க, மனோகரன் உரக்க நகைத்தான்.

''பொல்லாத அம்மா!'' என்று செல்லமாகத் திட்டிவிட்டு, எழுந்து சென்றான் அவன்.

தூக்கம் பிடிக்காமல் கிடந்து விட்டு, மொட்டை மாடியில் காற்றாடப் போய் நின்றபோது, 'ஹோட்டல் அமுதம்' என்ற நியான் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன.

இந்த ஹோட்டலைத் தொடங்கியது, மனோகரனுடைய தாத்தா சதாசிவமும்தான். அந்த ரஞ்சிதம்

மாவுடைய தந்தை அன்பரசுவும் அவரும் நெருங்கிய நண்பர்கள்.

இங்கே நெடுஞ்சாலையில் பாலம் கட்டுவதை அறிமுக மான ஓர் இஞ்சினீயர் மூலம் அறிந்த சதாசிவம், நண்பனோடு சேர்ந்து ஒரு சிறு உணவு விடுதியைத் தொடங்கினார்.

பாலத்து வேலையோடு, நெடுஞ்சாலைப் பணியும் சேரக் கூடவே, உணவும் தரமாக இருக்கவே, ஹோட்டல் சூடு பிடித்தது.

அங்கேயே நிலத்தை வாங்கி, அருகருகே இருவரும் வீடு கட்டிக் கொண்டனர்.

திருச்சிக்குச் செல்வோரும், அங்கிருந்து வேற்றூர் போவோரும் வந்து இளைப்பாறி, எதையாவது உண்டு போகும் அளவுக்கு ஹோட்டலும் வளர்ச்சி அடைந்தது.

சதாசிவத்துக்கு ஒரே பையன். பெயர் மாதவன்.

மாதவனுக்குச் சில ஆண்டுகள் சின்னவர்களாகக் கண் ணபிரானும், ரஞ்சிதமும், அன்பரசுவுடைய பிள்ளைகள்.

இரண்டு குடும்பங்களுமே, ஒன்றோடொன்று ஒட்டி உறவாடியதாகத்தான் மனோகரன் கேள்விப் பட்டது. மாதவனின் பின்னோடு வால்கள் போல, மற்ற இருவரும் அலைவார்களாம். மூன்று சின்னவர்களும், ஏதாவது ஒரு வீட்டில் ஒன்றாகத்தான் கிடப்பார்களாம்.

மாதவனுக்குப் பள்ளிப் படிப்பு முடியும் வரை, இதுவே தொடர்ந்திருக்கிறது. சேர்ந்தே திருச்சிக்குப் போய்ப் படித்து விட்டுச் சேர்ந்தே திரும்பி வந்து, சேர்ந்தே திரிவது!

அப்போதே, மாதவனுக்கும், ரஞ்சிதத்துக்கும் முடிச்சுப் போட்டுப் பெரியவர்கள் பேசி வந்திருக்க வேண்டும். ரஞ்சிதத்தின் மனதில், அது பதிந்தும் போயிருந்தது போலும்.

அப்போதே, மாதவன் அந்தப் பேச்சை உறுதியோடு தடுத்து நிறுத்தியிருந்தால், பிற்பாடு இந்த வேறுபாடு நேராது போயிருக்கலாம். ஆனால், அவருக்குமே, அந்தப் பதினாறு, பதினேழு வயதில் அது பெருமை யாகத் தோன்றியிருக்கலாம்.

தன் எதிர்காலம் மருத்துவப்பணி என்று மாதவன் தேர்ந்தெடுத்ததுகூட, எல்லோருக்கும் பெருமைதான். 'டா...க்டர்!' அல்லவா?

அப்போதே, சிறு குடியிருப்பாக உருவாகத் தொடங்கி விட்ட இந்திரபுரியில் ஆங்கில மருத்துவர் இல்லாத காரணத்தால், நோய் நொடி என்றால், எல்லோரும் திருச் சிக்குத்தான் ஓடிக் கொண்டிருந்தனர். இனி, இங்கேயே டாக்டர் இருப்பாரே!

சென்னையில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த பிறகு, மாதவன் ஆளே மாறிப் போனான். படிப்பு, படிப்பு என்று அது தவிர, வேறு எதிலும், அவனுக்கு ரசனை இருக்கவில்லை.

விடுமுறைகளில் ஊருக்கு வருவதுகூட மிகவும் குறைந்து போயிற்று.

அவனுக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கே, மாண வனின் கெட்டிக்காரத்தனம் பிடித்துப் போய், அவரவர் கிளினிக்குகளிலும், மருத்துவ மனைகளிலும், பயிற்சி பெற உதவி செய்தனர்.

அப்போதும் திருமணம் அப்போது தேவையில்லை என்றானே தவிர, ரஞ்சிதம் வேண்டாம் என்று மாதவன் கூறினான் இல்லை.

படிப்பு முடியட்டும் என்று பையன் கருதுகிறான் என்றுதான் எல்லோரும் கருதினர். அது சரிதான் என்று ஒத்துக் கொள்ளவும் செய்தனர்.

ஆனால், ஹவுஸ் சர்ஜனாகப் பணியாற்றுகையில், அங்கே நோயாளியாக வந்த ஒருவருடைய மகளான சாந்தியைப் பார்த்துக், கண்டதும் காதல் கொண்டு, மணப் பது என்றால் அவளைத்தான் என்று மாதவன் பிடிவாதம் பிடித்தது, எல்லோருக்குமே பேரதிர்ச்சிதான்.

ஒருவேளை, சதாசிவம் தம்பதி, அந்த மணத்துக்குச் சம்மதம் கொடுக்க மறுத்து, மாதவன் தனி மரமாகவே நின்றிருந்தால், அடுத்த குடும்பத்துக்கு இவ்வளவு ஆத்திரம் வந்திருக்காதோ, என்னவோ? ஆனால், மற்ற எதையும் விடத் தங்களுடைய ஒரே மகனைப் பெரிதாக எண்ணி, அவன் விருப்பப்பட்ட பெண்ணையே அவர் கள் மருமகளாக்கிக் கொண்டது, பெரும் துரோகமாகக் கருதப்பட்டது.

இத்தனைக்கும், அந்தப் பிழைக்கு ஈடாக, ஹோட்ட லில் தன் பங்கைச் சதாசிவம் நண்பனுக்கே எழுதிக் கொடுத்தார்.

யாருடைய பிச்சையும் தங்களுக்குத் தேவை இல்லை என்று ஒரு நாள் ஒரு டிடியைக் கொணர்ந்து, சதாசிவத் தின் முன் வீசி எறிந்துவிட்டு, அவரது வீட்டுப் பக்கமோ, ஹோட்டல் பக்கமோ காலடி எடுத்து வைத்தால் நன்றா யிராது என்று எச்சரித்து விட்டுப் போனார், அன்பரசு.

என்ன காரணத்தினாலோ, ரஞ்சிதத்துக்கு ஏற்பாடு செய்த திருமணமும் இருமுறை கலைந்து போய்விட, அதற்கும் சதாசிவத்துடைய குடும்பத்தையே காரண மாக்கி, வெறுப்பும் விரோதமும் மேலும் வளர்ந்தது.

வெறுத்த முகத்தையும் பேச்சையும் தவிர்ப்பதற்காக வீடு மாறிப் போனார்கள். ஆனால், அதனாலும் பிரச் சினை வளர்ந்தது என்றது, அன்னை தெரிவித்த விவரம்.

அந்தப் பக்கம் போனாலே, கல் விட்டு எறிகிற அள வுக்கு, விரோதம் வளர்ந்தது. ஆளை நேராக அடித்தது இல்லை. ஆனால், அக்கம் பக்கத்தில் அருகிலேயே ஒரு கல்லேனும், நிச்சயமாக விழும்.

எதற்கு வம்பு என்று, அந்த வீடு, ஹோட்டல் பக்கம் செல்லுவதையே விட்டுவிட்டு, இந்தக் குடும்பம் ஒதுங்கிப் போயிற்று.

திருச்சியில் மருத்துவமனை தொடங்கி, ஓகோ என்று வளர்ந்த பிறகும், சுத்தமான இந்தக் காற்றை விட்டு, நகரத்தின் தூசு தும்புகள் உள்ள இடத்தில் குடியேற விருப்பமின்றி, டாக்டர் குடும்பமும் இங்கேயேதான் இருந்தது. ஒரே ஒரு மகன். மனோகரன்.

கொஞ்ச காலம் கழித்து, அந்த வீட்டுப் பையனுக்குத் திருமணம் ஆகி, இரண்டோ, மூன்றோ குழந்தைகள் பிறந்ததாகக் கேள்வி.

காலப் போக்கில், மூத்த தலைமுறை இரண்டு இடங்களிலுமே மறைந்து போயிற்று.

மகன் படித்து முடித்து வந்து, தொழில் பழகிப் பொறுப்பேற்பதற்காகவே காத்திருந்தது போல, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், மாதவன் இறந்து போனார்.

மனோ தைரியமும் கட்டுப்பாடும் உடையவனே என்றாலும், இந்தப் பெரும் இழப்பைச் சமாளித்து, சாந்தி பழைய மாதிரி ஆவதற்கு ஓர் ஆண்டு பிடித்தது!

ஆனால், சுகமோ துக்கமோ, இரு குடும்பங்களும், எதிரெதிர்த் துருவங்களிலேயே இருந்து விட்டன. அடுத்த தலைமுறையில் நேர்ந்த இந்த இழப்பின்போதுகூட அந்தக் குடும்பத்தவர் யாரும் எட்டிப் பார்க்கவில்லை.

இரு குடும்பங்களுக்கும் இடையே உள்ள நிலைமை இதுதான்.

இப்போது பார்த்து, அந்தப் பெண் சுந்தரி, உற்றார், உறவினரை விட்டு, வயிற்றுப் பிழைப்புக்காக இவ்வளவு தூரம் அந்தக் குடும்பத்திடம் பணிபுரிய வந்திருக்கிறாள்.

அந்த வீட்டார் யாரேனும், அவனோடு, அவளைச் சேர்த்துப் பார்த்திருந்தால், வேலையே கிடையாது என்று திருப்பிக்கூட அனுப்பியிருப்பார்கள்.

அல்லது, அந்தக் கெட்டிக்காரி, அதையும் சமாளித்திருப் பாளோ?

ஒருவேளை, இந்த வெறுப்பு, விரோதங்கள் எல்லாம் தெரிந்தேதான், ஏதோ கதை சொல்லி, அவனை உடன் வராமல் தடுத்து நிறுத்தினாளோ?

யோசித்துப் பார்த்தால், அப்படித்தான் நடந்ததோ என்றுகூட, அவனுக்குத் தோன்றியது. அவன் தன் பெயரைச் சொன்னதும், எச்சரிக்கை யடைந்து விட்டாள் போலும்!

ஆங்காரம் பிடித்த அந்த ரஞ்சிதம்மா, எல்லாம் சொல்லியே அவளை வரவழைத்திருப்பாள். அதனால்

தான், முதலிலேயே அவள் பையைத் தரத் தயங்கி யிருக்கிறாள்.

அவனோடு அந்தப் பெண் சுந்தரி நடந்து வந்தது தெரிந்தால், அவளைச் சும்மா விடுவாளா? பாவம்! உதவி செய்கிறேன் பேர்வழி என்று, அந்த அழகான பெண்ணுக்கு உபத்திரவம் செய்து விட்டோமோ என்று, அவன் மனம் வெகு நேரம் கவலைப்பட்டது.

ஆனால், மனோகரன் கவலைப்பட்டதற்கு நேர் விரோத மாக, அந்த எதிரி வீட்டினர் சுந்தரியை உற்சாகமும், மகிழ்ச்சியுமாக வரவேற்றது, பாவம்! அவனுக்குத் தெரியாது.

அதன் காரணமும் அவன் அறியாததே.

## 3



உற்சாக ஆரவாரங்கள் எல்லாம் சற்று ஓய்ந்ததும், தான் வாங்கி வந்த பரிசுப் பொருட்களை எல்லாம் எடுத்துக் கடை பரப்பினாள்.

"பை மொத்தமும் பரிசுகள்தானா? ஏண்டி, நாளைக்குக் குளித்துவிட்டு அணிந்து கொள்ள, ஒரு செட் உடையாவது எடுத்து வரக்கூடாது? பார்சல் லாரி வந்து சேரும்வரை, குளிக்காமலே இருக்கப் போகிறாயா? என்ன பெண்ணடி, நீ?"

"இதையெல்லாம், உடையாமல், கசங்காமல் வைப்ப தற்குள் பை நிரம்பிப் போயிற்று, அம்மா. நான் என்ன செய்யட்டும்?" என்று செல்லம் கொஞ்சினாள் பெண்.

"ஆங், என்ன செய்வதா? இதில் எதையாவது எடுத்து மற்ற சாமானோடு போட்டுவிட்டு, ஒரு சல்வார்

செட்டை எடுத்து வைத்துக்கொண்டு வருவது! இதுகூடத் தெரியாத மக்கா, நீ?''

''ஆசையாக எல்லோருக்கும் வாங்கினால், அதைப் போய் வைத்துவிட்டு வரச் சொல்லுகிறீர்களே! நீங்கள் தான் அசட்டு அம்மா!''

''ரொம்ப சரி! காலையில் குளித்து விட்டுப் போடத் துணிக்கு என்ன செய்வாயாம்? அதை யோசிக்கத் தெரியாதவள் அசடுதானே?''

''என்னது? மக்குக்கு அடுத்து, அசடா? ஏன், ஒரு நாள் அணிவதற்கு, உங்கள் துணிமணி தர மாட்டீர்களா, அத்தை? அதை யோசியாமல், இந்த அம்மா சொல்வதைப் பாருங்கள், அத்தை!'' என்று சலுகையாக, அத்தையிடம் புகார் சொன்னாள் சுந்தரி.

''ஏன் தர மாட்டேன்? என்னிடம் இருப்பது எல்லாம் உனக்குத்தானே, கண்ணு! எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்! இதோ பார் சுமதி, சும்மாச் சும்மா வந்ததும் வராததுமாகப் பிள்ளையைத் திட்டாதே! அவள் செய்வது எதுவும் சரியாகத்தான் இருக்கும்!'' என்று, அண்ணன் பெண்ணுக்குப் பரிந்து பேசினாள் ரஞ்சிதம்.

வக்காலத்து வாங்கிய அத்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, ''அப்படிச் சொல்லுங்கள், அத்தை!'' என்ற சுந்தரி, தாயின் பக்கம் திரும்பி, நாக்கைத் துருத்தி, அழகு காட்டிச் சிரித்தாள்.

தன்னை மீறி முறுவலித்தபடி, ''ஆனாலும், இவளுக்கு நீங்கள் அநியாயத்துக்குச் செல்லம் கொடுக்கிறீர்கள், அண்ணி! உங்கள் சலுகையில், வேறு யார் பேச்சையும்

இவள் கேட்பதே இல்லை!'' என்று புகார் கூறினாள் சுமதி.

உடனேயே, ''அத்தை, அம்மா பொய் சொல்லு கிறார்கள். நீங்களே சொல்லுங்கள். அம்மாவின் பேச்சை நான் கேட்கிறேனா, இல்லையா? இந்தக் காதிலோ, அடுத்து, இந்தக் காதிலோ, பஞ்சை வைத்து அடைத் திருக்கிறேனா? நீங்களே பாருங்கள்! இல்லைதானே?'' என்று இரு காதுகளையும் கன அக்கறையோடு சுந்தரி திருப்பிக் காட்ட, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

சிரித்து முடித்த பின், ''சரி, சரி. இரவு குளிக்குமுன் என் அறைக்கு வா. போன தடவை திருச்சிக்குப் போனபோது, உனக்கு ஒரு நைட்டி, இரண்டு சுரிதார் செட் வாங்கி வந்தேன். உன் சாமான் லாரி வந்து சேரும் வரை, அதை வைத்துச் சமாளி!'' என்று சுமதி கூற, கண் சிமிட்டி, ''நீங்கள் இப்படி ஏதாவது செய்து வைப்பீர்கள் என்று எனக்குத் தெரியுமே! அதனால்தான், தைரிய மாகத் துணிமணிகள் எல்லாவற்றையும் பார்சலில் போட்டுவிட்டு வந்தேன். என்னைப் போய் அசடு என்கிறீர்களே, அசட்டு அம்மா!'' என்று சுந்தரி வெற்றிப் புன்னகை புரிந்தாள்.

''உண்மையிலேயே, அப்படித்தான், அக்கா. எவ்வளவோ கேட்டும், அந்த மஞ்சள் கலர் சுரிதாரை எனக்குத் தராமல், உனக்கு வாங்கி வைத்திருக்கிறார்களே, அதற்காகவே அம்மாவுக்குத் தாராள அசட்டுப் பட்டம் கட்டலாம்!'' என்றாள் தங்கை பாமினி.

தாயைப் பார்த்துவிட்டு, ''என்னடி நீ? உன் ரோஜா நிறத்துக்கு, மஞ்சள் எப்படிப் பொருந்தும்? இளம் பச்சை,

நீலம் என்றால், தேவதை மாதிரி இருப்பாய். அம்மா அதற்காகப் பார்த்தால், அவர்களுக்கே அசட்டுப் பட்டம் கட்டுகிறாயே!'' என்றாள் சுந்தரி.

''ஐயய்யே, என்ன பெண்கள் நீங்கள்! சும்மா, துணி மணி பற்றியே பேசிக்கொண்டு! ஒரே போர்! எனக்குத் தூக்கம் வருகிறது!'' என்றான் கடைக்குட்டி பாலன்.

''இவனுக்குக் கிரிக்கெட் தவிர, மற்ற எல்லாமே போர்தான், அக்கா!'' என்றாள் பாமினி. ''என்னவோ, பள்ளி டீமில் சேர்த்து விட்டார்களாம்! பையனுக்கு உச்சி குளிர்ந்ததில், சளிக் காய்ச்சலே வந்துவிட்டது!''

அவளது கேலியை ஒதுக்கி, ''நிஜமாகவே பள்ளி டீமில் இருக்கிறாயாடா? பிரமாதம்டா, தம்பி! வாழ்த்துக்கள்! இப்படியே, மாநில டீம், தேசிய டீம் என்று முன்னேற வேண்டும்!'' என்று, சுந்தரி அவன் கையைப் பிடித்துக் குலுக்க, அவனுக்கு ஒரே ஆனந்தம்.

ப்ளஸ் ஒண்ணிலும், கல்லூரியிலும் முறையே படிக்கும், தம்பியும் தங்கையும், காலையில் கல்விக் கூடங்களுக்கு, நேரத்தில் கிளம்புவதற்காகப் படுக்கப் போய்விட, அதன் பிறகு, சுந்தரி படித்த படிப்பு, அதைக் கொண்டு இங்கே ஹோட்டலில் என்னென்ன முன்னேற்றங்கள் செய்யலாம் என்பது பற்றிப் பெரியவர்களும் அவளுமாகப் பேசிக் கொண்டு இருந்தனர்.

''சைனீஸ், அது இதென்று, பல்வேறு உணவு வகை வைத்தால், இன்னும் கூட்டம் பிய்த்துக் கொண்டு போகும், அத்தை!'' என்றாள் சுந்தரி.

''போகும்தான். எனக்கே, வருமானத்தைப் பெருக்கச் சில ஐடியாக்கள் தோன்றுவதுதான். ஆனால், இப்போதே,

இடம் பற்றாக்குறை. பெரிதாக ஓர் இடம்... அந்த ஓடையோரத்துப் பெரிய வீடு மாதிரிப் பெரியதாக ஓர் இடம் கிடைத்தால், ஏன், அந்தப் பெரிய வீடே கிடைத்தால், எவ்வளவோ நன்றாக இருக்கும்! என்ன செய்வது? நம் பாடு, இப்படிக் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்ட வேண்டியிருக்கிறது!'' என்று அலுத்துக் கொண்டாள் ரஞ்சிதம்.

''அந்த வீடு நம்மதில்லை, ரஞ்சி. அத்தோடு, நாம் ஒன்றும் கஷ்டப்படவும் இல்லை. இங்கே சம்பாதிப்பதி லேயே, நாம் நன்றாகத்தானே, இருக்கிறோம்!'' என்றார் கண்ணபிரான், இதமான குரலிலேயே.

''இருக்கிறோம், இருக்கிறோம்! ஆனால் அதற்காக, இதை விடவும் நன்றாக இருக்கக் கூடாது என்று இருக்கிறதா? இந்த இந்திரபுரியிலேயே, நமக்கு நிகர் யாரும் இல்லை என்று, எல்லோரும் அண்ணாந்து பார்க்கிற நிலை நமக்கு வர வேண்டும், அண்ணா! இவர்களைப் போல, நாம் இல்லையே என்று ஏங்க வேண்டும்!'' என்று, கண்ணனை ஊடுருவிப் பார்த்தாள் அவனுடைய தங்கை.

ஏதோ சொல்ல வாயெடுத்த கண்ணபிரான், என்ன எண்ணியோ அதை அடக்கிக் கொண்டு, ''சரி. நேரமா கிறது. எல்லோரும் போய்ப் படுங்கள். காலையில் எழுந்து வேலையைப் பார்க்க வேண்டும்!'' என்று எல்லோரையும் கிளப்பிப் படுக்கைக்கு அனுப்பினார்.

இருளில், ஒரு கொட்டாவியுடன் திரும்பிப் படுத்த சுந்தரிக்கு அந்த டாக்டர் மனோகரனின் முகம் நினை வுக்கு வந்தது.

அவள் யார் என்று, அவனுக்குச் சிறிதேனும் சந்தேகம் வந்திருக்குமா?

**அ**ன்று காலையிலேயே மனோகரனுக்கு மனது கலைந்து போயிற்று.

செய்கிற தொழில் மருத்துவம் என்பதால், வலியை யும் வேதனையையும் பார்ப்பது, அவனுக்குப் புதிது அல்ல. ஆனால், உடம்பின் வலிக்கு, மருத்துவம் பார்க்கலாம்.

என்னென்னவோ மருந்துகளை எழுதிக் கொடுத்து, அந்த வலி, வேதனைகளைக் குறைக்கலாம். வலி நீங்கிய முகத்தைப் பார்த்து மகிழவும் செய்யலாம்.

ஆனால், மனதின் வலியை என்ன செய்வது?

அதற்கு ஒரே மருந்துதான் இருக்கிறது. அந்த மருந்தைக் கொடுக்கும் வல்லமைதான் அவனுக்கு... எந்த வைத்தியருக்குமே, அது போன்ற சக்தி இராது!

எனவே, பஞ்சநாதத்தின் உயிர் ஏக்கத்திலேயே பிரிந்து போயிற்று.

மகள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்...

எல்லோரும் இருந்தும், யாருமற்றுத் தனிமையி லேயே தவித்த மனிதர். அந்தத் தவிப்புடனேயே போய்ச் சேர்ந்து விட்டார்.

இறப்பு எல்லோருக்கும் ஒரு நாள் நேர்வதுதான். எண்பதை நெருங்கும்போது, எந்த நேரமும் அதற்குத் தயாராக இருக்க வேண்டியதுதான்.

பஞ்சநாதனும் சாவுக்குப் பயப்படவில்லை.

பல சமயங்களில், ''தனிமை கொல்லுது, டாக்டர். என் மனைவியோடு, நானும் போயிருக்க வேண்டும்.

கடவுள் என்னை, இப்படிப் போட்டு வைத்துக் காலனுக் காகக் காத்திருக்க வைத்து விட்டாரே!" என்று வருந்தியிருக்கிறார்!

துணையற்ற தனிமைதான் அவரது துயரம். கடைசி நேரத்தில்கூட அதே தவிப்புதான்.

"நீங்கள் வரும்போதுதான் சந்தோஷமாக இருக்கிறது!" என்பார்.

"வேலையாள் போட்டு வைத்துவிட்டுப் போன காபி ப்ளாஸ்கில் இருக்கிறது. கொஞ்சம் குடித்துவிட்டுப் போங்கள்!" என்று, அவரது அடுத்த வேளைக் காபியை ஊற்றிக் கொடுப்பார். அதைக் குடிக்கிற ஓர் ஐந்து நிமிஷ நேரம் அவன் கூட இருப்பானே என்பதற்காகத் தன் ஒரு வேளைக் காபியை, மனிதர் தியாகம் பண்ணுகிறார் என்பது புரிந்து, மனோகரனும் முடிந்த அளவு கூடுத லான நேரம் அவரோடு உட்கார்ந்திருந்து விட்டுக் கிளம்புவான்.

ஆனால், ஒரு டாக்டர் எவ்வளவு நேரம் ஒரே நோயாளியோடு உட்கார்ந்திருக்க முடியும்?

அதுவும், பஞ்சநாதத்தை நோயாளி என்றும் சொல்ல முடியாது.

எப்போதோ, மழையில் நனைந்ததில், இருமல், தும்மல் என்று டாக்டரைத் தேடி வந்தவர். அவருக்குக் குணமான பிறகும், அவர் தனியாக இருப்பது தெரிந்து, ஓய்வு கிடைக்கையில், மனோகரன் அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வருவான்.

அவரை மட்டும் என்று இல்லை.

இதே போல, இன்னும் பத்துப் பன்னிரண்டு பேர்.

பணம் இருக்கிறது, இல்லை என்று இல்லாமல், அங் கங்கே இப்படித் தனிமையில் தவிக்கும் முதியோர் பலரின் நலனைத் தன் பொறுப்பாய் மனோகரன் ஏற்றிருந்தான்.

வாரத்துக்கு ஒன்றிரண்டு நாட்கள், இப்படிக் கிடைத்த நேரத்தில் போய் வருவதால், அந்தப் பெரியவர்களின் ஏக்கம் தீரப் போதுமானது அல்ல என்பதை, அவன் அறிந்தே இருந்தான்.

ஆனால், அவனால் இயன்றது இதுதான். இதற்கு மேல், கடவுள்தான் ஏதாவது செய்ய வேண்டும்.

பஞ்சநாதத்தின் உடம்பு திடுமென மோசமானதுமே, அவர் கொடுத்த டெலிஃபோன் எண்களுக்கு, மனோகரன் ஃபோன் செய்து பார்த்தான்.

"ஐயோ டாக்டர், இங்கே பிள்ளைகளுக்குத் தேர்வு சமயம். விட்டுவிட்டு வந்தால், ஏதாவது பச்சை, நீலப் படங்களைப் பார்க்க உட்கார்ந்து, உள்ள மூளையையும் மழுங்கடித்துக் கொள்வார்கள். இந்த வயதில், இன்னும் எத்தனையோ! எல்லாமாக, இதுவரை படித்ததும் வீணாகி விடும். அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள், டாக்டர். படிப்பு விஷயம் என்றால், அப்பா புரிந்து கொள்வார்!" என்றாள் பெண்.

"இங்கே ஒரு புது புரொஜெக்ட் வேலையில், ரொம்ப மும்முரமாக இருக்கிறோம். அலுவலகத்தை விட்டு, அசைய முடியாது. இதை விட்டு வந்தேன் என்றால், எனக்கு ரொம்பவும் பின்னடைவாகி விடும். அப்பாவிடம் சொல்லுங்கள். புரிந்து கொள்வார்!" என்றான் பையன்.

பெற்றவர் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்ததும், "பேச்சு புரியாதபோது,

எங்களை மட்டும் எப்படித் தெரிந்து கொள்ளப் போகிறார்? இவ்வளவு செலவு செய்து, அங்கே வந்து என்ன பிரயோஜனம்? எல்லாம் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், டாக்டர்!'' என்று, இதை மட்டும் இருவருமே ஒரே மாதிரிச் சொன்னார்கள்.

''எல்லாம் என்றால்?'' மனோகரனால் கேளாதிருக்க முடியவில்லை.

கொஞ்சம் திக்கித் திணறியபோதும், ''இருக்கும் போதே, வந்து பயனில்லை எனும்போது, இறந்த பிறகு வந்து, அவருக்கு என்ன லாபம், டாக்டர்? அதனால்.. எவ்வளவு பணம் தேவைப்படும் என்று சொல்லுங்கள். அங்குள்ள முறைப்படி காரியங்களை முடிக்க ஏற்பாடு செய்து விடுங்கள்!'' என்றனர் பிள்ளைகள்.

ஒரேயடியாக அவருடைய பிள்ளைகளைக் குறை கூறவும், மனோகரனால் முடியவில்லை.

படிப்பு, பணம், முன்னேற்றம்தான் முக்கியம் என்று பிள்ளைகளை வளர்த்தவர், பெற்ற அவர்தானே?

வேறு எப்படி, 'அப்பாவிடம் சொல்லுங்கள் புரிந்து கொள்வார்,' என்று, இந்த நேரத்திலும் அவருடைய பிள்ளைகளால் கூற முடியும்?

தான் திடமாக இருந்த காலத்தில், தன் பிள்ளைகள் ஓஹோ என்று, பெரிய படிப்புப் படிக்க வேண்டும்., வெளிநாட்டுக்குச் சென்று, பெரிய வேலை பார்த்து, நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்பது மட்டும்தான், பெற்றவரின் குறிக்கோளாக இருந்தது.

தன் ஆசையைப் பிள்ளைகள் நிறைவேற்றினார்கள் என்று, பெருமையாக உணர்ந்ததாக, அவரே சொல்லி யிருக்கிறார்!

பிறகு, பிறகு, கை கால் தளர்ந்து, உழைக்கிற காலம் முடிந்து, வீட்டில் ஓய்ந்து உட்கார்ந்தபோதுதான், என்ன நிலையில் இருக்கிறோம் என்று, பஞ்சநாதத்துக்குப் புரிந்தது.

அவர் கண்ட கனவு நிறைவேறிப் பிள்ளைகள் அயல் நாட்டில் அமோகமாக இருந்தார்கள். ஆனால், அங்கே, அவர்களது வீடுகளில், அவருக்கு இடமில்லை.

பழைய சீனக் கதை ஒன்று உண்டு. ஒரு சீன நகரத்துக்குள் வெள்ளம் வந்துவிட, மக்கள் அவரவர் பொருட்களைத் தூக்கிக் கொண்டு, ஊரை விட்டு ஓடினார்களாம். அவர்களுள் ஒருவன், நடக்க முடியாத தன் வயது முதிர்ந்த தந்தையைத் தூக்கிக் கொண்டு சென்றானாம். 'தங்கம், பணம், தானியம் எல்லாவற்றை யும் விட்டுவிட்டு, இந்தக் கிழவனைத் தூக்கிக் கொண்டு வருகிறாயே!' என்று மற்றவர்கள் கேட்டபோது, 'என் தந்தையின் அனுபவ அறிவுதான் என் பெரிய சொத்து!' என்று அந்தச் சீனன் பதில் சொன்னதாகவும், அதற்குச் சான்றாக விரைவிலே ஏதோ நடந்ததாகவும் கதையில் வரும்.

ஆனால், பிரமிக்கத் தக்க அளவில் விஞ்ஞானம் முன்னேறித் தினம் ஓர் ஆராய்ச்சியும், கண்டுபிடிப்புமாக இருப்பதோடு, அவை யாவும், இன்டர்நெட் மூலமாக, வீட்டுக் கூடத்துக்கே வந்து விட்ட இந்தக் காலத்தில், அறிவுக் களஞ்சியமே, பாட்டன், முப்பாட்டன் என்றால், எந்தப் பிள்ளை ஒத்துக் கொள்ளும்?

பாசம், மூத்தவர்களுக்கு மரியாதை என்று பெரியவர் களுக்குக் கால் பிடித்து விட, இப்போது நேரமில்லை.

அது புரிந்த பல பெரியவர்களும், அது போன்ற மரியாதைகளைத் தேடுவதும் இல்லை!

ஆனால், முதியோரை, வீட்டின் அங்கத்தினராகக் கூடப் பெரும்பான்மையோர் எண்ணுவது இல்லை என்பதுதான் மனோகரனுக்கு அடிக்கடி வருத்தத்தை அளிப்பது.

அந்த நிலைதான் பஞ்சநாதத்துக்கும் ஏற்பட்டது.

தேவைக்கு அதிகமாகப் பணம் இருந்த போதும், பாசம், பரிவு காட்ட யாருமே இல்லாமல், ஒரு பேச்சுத் துணைக்குக்கூட ஆள் இல்லாமல், ஓர் அனாதையாகவே மாளவும் நேர்ந்தது.

மெல்ல மெல்லப் பெருகி வரும் இத்தகையோரின் துன்பம் தீர, அவன் ஒருவனாக என்ன செய்யக்கூடும்?

இது போன்ற நிகழ்வுகளால் மனம் சஞ்சலம் அடையும்போது, வேலைகளை ஒதுக்கிக் கொண்டு, மனோகரன் மலைக் கோட்டைக்குச் சென்று விடுவான்.

தாயுமானவர் சன்னிதிக்கும் உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கும் இடைப்பட்ட ஏதாவது ஓர் இடத்தில் முகத்தில் காற்று மோத உட்கார்ந்திருப்பான். ஒருவாறு மனப்பாரம் சற்றுக் குறைந்ததும் இறங்கி வருவான்.

அன்றும், அதுபோல, மலைக் கோட்டைக்குச் சென்றிருந்த போதுதான், மனோகரன் சுந்தரியை மீண்டும் சந்தித் தான்.

அவளைப் பார்த்ததுமே, அவனது நெஞ்சை அழுத் திக் கொண்டிருந்த சுமை, தானாக மறைந்தது.

4



தங்கை போட்டி போட்டுக்கொண்டு கேட்ட மஞ்சள் வண்ணச் சுரிதாரில் சுந்தரியைப் பார்க்கையில், சூரியகாந்திப் பூவின் நினைவு தான் மனோகரனுக்கு வந்தது.

உலகத்து அழகையெல்லாம் ஒட்டு மொத்த மாகப் படம் பிடித்து விடுவதுபோல, அங்கு மிங்கும் ஆர்வத்தோடு சலிக்கும் அழகிய விழிகளும், உள்ளத்து மகிழ்ச்சியைத் தன்னியல்பாக வெளிக் காட்டுவன போலச் சிரியாமல் சிரித்த உதடுகளும், உற்சாகத் துடிப்புடன் கூடிய அங்க அசைவுகளும்...

பல வினாடிகள் கழித்துத்தான், அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதையே, மனோகரன் உணர்ந்தான்.

முதல் முறையாக ஒருவரைப் பார்க்கும்போது, இவருக்கு உதடு வெளுத்திருக்கிறது. ரத்த சோகை, இவருக்கு வியர்த்துக் கொட்டுகிறது, ரத்த அழுத்தமாக இருக்கலாம். இவ்வளவு ஒப்பனைக்குக் கீழ் சருமம் எப்படி இருக்கிறதோ என்றெல்லாம் யோசியாது, ஒருத்தியைக் கிட்டத்தட்ட ஒரு நிமிஷமாகப் பார்த்துக் கொண்டு இருந்தது, அவனுக்கே ஆச்சரியம்தான்.

இவளைப் போய், அழகி யென்பது தற்பெருமை என்றது, எவ்வளவு பெரிய தப்பு! ஆனால், அப்போதே, அது அவளை மடக்குவதற்காகச் சொன்னதுதான்.

சுந்தரியின் பார்வை, தூரத்தே தெரிந்த இயற்கைக் காட்சிகளிலும், வளைந்து நெளிந்த கொள்ளிடத்திலும் இருந்தது.

தன்னைப் பாராமல் தாண்டிப் போய் விடுவாளோ என்று எண்ணுமுன், ''ஹல்லோ!'' என்று அவனது வாய் அழைத்தது.

வியப்புடன் திரும்பிப் பார்த்தவளின் விழிகள் மேலும் விரிந்தன. ''ஹ.. ஹலோ. நீ... நீங்கள், எங்கே இங்கே?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

அவளுக்கு இடம் கொடுத்து, சற்று நகர்ந்து அமர்ந்து, ''எதற்கு இவ்வளவு ஆச்சரியம்? திருச்சியில் இருந்து, இந்திரபுரி அப்படி என்ன தூரம்?'' என்று கேட்டான் மனோகரன்.

கண் சிமிட்டும் நேரம் தயங்கிய போதும், அவனது குறிப்பை ஏற்று, அவளும் அமர்ந்தாள். ''தூரத்தைப் பற்றி ஒன்றுமில்லை. இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்களே என்றுதான் ஆச்சரியம்!''

''அப்படிப் பார்த்தாலும், ஆச்சரியப்பட்டுக் கேள்வி கேட்க வேண்டியவன் நான்தான். வேலை நேரத்தில் மலை ஏறி இறங்கி உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறாயே, அது எப்படி? வந்து பத்து நாள் ஆகவில்லையே... வேலையை விட்டு விட்டாயா? அல்லது, அவர்களே போகச் சொல்லி விட்டார்களா?''

''எப்படியோ, வேலை இல்லாமல் நான் முழித்துக் கொண்டு நிற்க வேண்டும். அவ்வளவுதானே? ஆனாலும், உங்களுக்கு, ரொம்ப நல்ல மனது டாக்டர்!''

அவள் கண்ணை உருட்டிச் சொன்ன விதத்தில் சிரித்து விட்டு, ''நீ ஒத்துக் கொண்டாலும், ஒத்துக் கொள்ளா விட்டாலும், நான் நல்லவன்தான். அத்தோடு, வேலை நேரத்தில் ஊர் சுற்றினால், வேறு எப்படி நினைப்ப தாம்?'' என்றான் அவன்.

''எத்தனையோ எண்ணலாம். அவற்றுள் ஒன்றாக ஒய்வு நாள் என்றுகூட நினைக்கலாமே!''

"இன்று, சனி ஞாயிறு இல்லையே!"

"எல்லாம் தெரிந்த மேதாவி என்று யாருமே கிடையாது என்பது, இதைத்தான். மற்றவர்களுக்கு வாரக் கடைசி, ஓய்வு நாட்கள் சனி ஞாயிறில் வரும் என்றால், ஹோட்டல் தொழிலுக்கு, அப்போதுதான் அதிகப்படி கூட்டம் வரும்! குடும்பத்தோடு பிக்னிக் மாதிரி வெளியே போய்ச் சாப்பிடுவார்கள். அதனால், எங்களுக் கெல்லாம் வார நாட்களில்தான் லீவு கிடைக்கும். தெரிந்து கொள்ளுங்கள்!" என்றாள் அவள் பாடம் சொல்லிக் கொடுப்பது போல.

"ஓகோ! அப்படியா விஷயம்? திங்கள் கிழமை என்றால் மருத்துவ மனைக்கு இவ்வளவு கூட்டம் வருகிறதே, ஏன் என்று நானும் பலமுறை யோசித்துப் பார்த்ததுண்டு. சனி, ஞாயிறுகளில், உங்களது மாதிரி ஹோட்டல்களில் போடுவதையெல்லாம் சாப்பிடுவதால், திங்களன்று எங்களிடம் வந்து விழுகிறார்கள் என்று, இப்போதல்லவா புரிகிறது!" என்று, குழப்பிக் கொண் டிருந்த ஒரு பெரிய மர்மத்தை விடுவித்துவிட்ட பாவனை யில் மனோகரன் கூற, அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அடக்கிக் கொண்டு, "ஏதோ சம்பாத்தியத்துக்கு வழி என்று சந்தோஷப் படுங்கள், டாக்டர் சார்!" என்று பதில் கொடுத்தாள் சுந்தரி.

"இது சம்பாத்தியத்துக்கு வழியா? கொஞ்சம் விட் டால், அதில் கமிஷன் கூடக் கேட்பாய் போல!" என்று டாக்டர் சட்டெனக் கூறிவிட, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட இருவருக்கும், சிரிப்பு பீறிக் கொண்டு வந்தது.

சிரித்து முடித்ததும், "இன்று, இப்படிச் சிரிப்பேன் என்று நான் சற்றும் நினைக்கவில்லை, சுந்தரி! நன்றி!" என்றான் அவன் சற்று ஆழ்ந்த குரலில்.

கேள்வியாய் நோக்கியவளின் கண்கள், விஷயம் புரிந்தாற் போல அகலவும், ஆம் என்பது போல, அவன் தலையாட்டினான்.

"சின்ன வயதா?"

"இல்லை. எண்பது முடிந்து விட்டது."

"அது... ஓரளவு முடிவை எதிர்.. நெருங்குகிற காலம்தானே?"

பெருமளவு, அவனது வருத்தத்தைக் குறைக்கும் நோக்கத்தில் அவள் சொன்னதுதான்.

ஆனால், அவன் மறுப்பாகத் தலையசைக்கவும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எண்பது வயது என்பது, இறுதி ஓய்வை நெருங்குகிற காலம்தான் அல்லவா? ஒரு வேளை, இறந்தவர், இவனுக்கு நெருங்கிய உறவாக இருக்குமோ? அப்போதான், எந்த வயதையும் இறுதி வயதாக எண்ணத் தோன்றாது.

ஆனால் அந்த இளம் மருத்துவன் வேறு சொன்னான்.

"முடிவு என்பது. எந்த வயதிலும் வரக் கூடியதுதான், சுந்தரி. ஆனால், அந்த முடிவுக்கு முன் வாழ்கிற வாழ்க்கைதான் முக்கியம். எதற்கு வாழ்கிறோம் என்பது இல்லாமல், விழித்திருக்கிற நேரத்தை வெறுமையாகக் கழித்துக்கொண்டு... அந்தப் பெரியவர், பல ஆண்டுகளை அப்படித்தான் கழித்தார். புது விதமான நரகம். அதுதான் மிகவும் வேதனையாக இருந்தது!" என்றவன், திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

"எ... என்ன?"

ஆனால், அவன் எதையும் சொல்லத் தயாரில்லை.

எழுந்து, "எனக்கு மருத்துவமனைக்குச் செல்ல நேர மாகிறது. உனக்கு ஓய்வு நாள் என்றாலும், அதிக நேரம் தனியே சுற்றிக் கொண்டிருக்க வேண்டாம். அங்கே திரும்பிச் செல்ல ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறாயா?" என்று விசாரித்தான்.

"ஹோட்டல் கார்... அங்கே தங்குகிறவர்களைச் சுற்றுலா கூட்டிச் செல்லும் காரை எடுத்து வந்தேன்..." என்று உள்ளூரத் தயக்கத்துடன் பதிலிறுத்தாள் அவள்.

"ஹோட்டல் காரா? பரவாயில்லையே!" என்று புருவம் உயர்த்தி வியந்தான் மனோகரன். "ஹோட்டல் அமுதத்தின் சர்வாதிகாரிக்கு, உன்னை மிகவும் பிடித்துப் போய்விட்டது போல!" என்றவனின் குரலில், வியப் போடு, ஏளனமும் கலந்திருந்தது.

"நீங்கள் சொல்லுகிற மாதிரி அங்கே யாரும் கிடை யாது! அப்.. ஐயா... கண்ணன் ஐயாதான் அங்கே முதலாளி!"

"அந்தக் கண்ணன் சாரையும் ஆட்டிப் படைக்கிற ஆள் ரஞ்சிதம்மா என்பது இன்னமும் உனக்குத் தெரியவில்லை என்று தெரிகிறது."

"அப்படியெல்லாம் இல்லை. அண்ணன் தங்கை இருவரும் சேர்ந்து ஹோட்டலை நடத்துகிறார்கள். அ.. அந்த ரஞ்சிதம்மாவுக்குப் பங்கு இருக்கிறது!" என்றாள் சுந்தரி, ஒரு மரத்த குரலில்.

"ஓ!" என்று ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான் மனோகரன். "வரவேற்புக்குச் சரியான ஆள் என்று,

உன்னை உச்சி குளிர வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது! ஆனால்... ஒன்று சொல்கிறேன், நினைவில் வைத்துக் கொள்கிறாயா? என்றேனும், வேளை கெட்ட வேளையில் அந்தம்மா உன்னை அந்த ஹோட்டலில் இருந்து விரட்டினால், எங்கள் வீடு அங்கேதான் இருக்கிறது. யாரைக் கேட்டாலும், கூட்டி வந்தே விட்டு விட்டுப் போவார்கள். வீட்டில் என் அம்மா இருக்கிறார்கள். அவர்களிடம் வந்துவிடு. என்ன? தேவையிராது என்று இப்போது உனக்குத் தோன்றக் கூடும். ஆனாலும், மனதின் மூலையில் போட்டு வையேன். இனி, நான் நிற்பதற்கில்லை. இப்போதே, நான் வேகமாகப் போனால்தான், தாமதம் இன்றி மருத்துவ மனைக்குப் போய்ச் சேர முடியும். வரட்டுமா? பை!'' என்று விட்டு, மலையிலிருந்து வேகமாக இறங்கத் தொடங்கினான் அவன்.

விரைந்து சென்றவனைக் கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்ற சுந்தரிக்கு, வயிற்றினுள் ஏதோ பிசைவது போல இருந்தது.

அவள் யார் என்று அவனிடம் சொல்லியிருக்க வேண்டுமோ?

அத்தையிடம் அவன் காட்டும் வெறுப்பு, அவளிடமும் பாயுமா?

ஆனால், பாவம்! அத்தையைப் போய் இவ்வளவு வெறுப்பாகப் பேசுகிறானே! என்ன அநியாயம்!

தப்புக்கு மேல் தப்பாகச் செய்து கொண்டு போனது, அவனுடைய குடும்பம்.

நம்ப வைத்து ஏமாற்றி, அத்தைக்குத் துரோகம் செய்தது, வேறு வாழ்க்கை அமைக்க முயன்றால் அதைக்

கெடுத்து அத்தையைத் தனி மரமாக்கியது அவனுடைய குடும்பம். வாங்க முயன்ற இடத்தையே வாங்கி, அங் கேயே வீடு கட்டிக் கொண்டு, அத்தையின் கண் முன்னேயே கோலாகலமாக வாழ்ந்தது...

அங்கங்கே சந்திக்க நேரும்போதெல்லாம், அத்தைக்கு அந்தக் காலத்தில் எவ்வளவு வேதனையாக இருந் திருக்கும்!

செய்வதெல்லாம் செய்து விட்டு, அத்தையையே பொல்லாதவளாகச் சித்தரிக்கிறானே!

அவனோடு நின்று பேசியதே தப்பு!

அன்று பையைத் தூக்கி வந்தானே என்று பார்த்தால், அத்தை சர்வாதிகாரியாம்! மோசமானவளாம்!

அத்தை அவளை விரட்ட, இவன் அம்மா அடைக் கலம் கொடுப்பாளாமா?

இப்படிப் பேச இந்த டாக்டருக்கு என்ன தைரியம் என்று ஆத்திரமுறும்போதே, சுந்தரிக்கு வேறு தோன்றியது.

அவளது ஆத்திரத்தின் இலக்கு தப்பு.

முக்கியச் சம்பவங்கள் நடந்த காலத்தில், இந்த மனோகரனும்தான் பிறந்திருக்கவில்லை. பிறகும், புரியாத சிறுவன்தான்.

இப்படித் தப்புத் தப்பாகச் சொல்லிக் கொடுத்தது, அவனுடைய அன்னையாகத்தானே இருக்க வேண்டும். பெற்றவள் சொல்வதைப் பிள்ளைகள் நம்புவது இயற்கை தானே?

ஏன், அத்தை சொல்வதைத்தானே சுந்தரி நம்பி யிருப்பது?

நமது நெருங்கிய மூத்த உறவினர்கள்தானே, அந்தக் காலத்துச் சரித்திரத்தை நமக்குத் தெரிவிக்கக் கூடியவர்கள்!

மனோகரனுடைய அன்னை போல வண்ணம் பூசிச் சொல்லுகிறவர்களும் உண்டுதான். மனோகரனைப் போன்றவர்கள் அதை நம்பிக் கொண்டு பேசுவதும் இயல்புதான்!

ஆனால், முதலில் உதவ முன் வந்ததையும், இன்று வயதான மனிதனின் இறுதிக் கால வேதனையை எண்ணி வருந்துவதையும் பார்த்தால், டாக்டர் நல்லவர் என்றே, சுந்தரிக்குத் தோன்றியது.

என்றாவது ஒரு நாள், தாயின் இரட்டை வேடம், அவனுக்குத் தெரியாமல் போகாது.

அப்போது பார்க்கலாம்.

அதற்குள் தன்னைப் பற்றிய உண்மை தெரிந்து போனால், தவறாக எண்ணுவானே என்று அது ஓர் உறுத்தல் தோன்றத்தான் செய்தது.

ஆனால், அது நடக்கிறபோது பார்த்துக் கொள்ள வேண்டிய ஒன்று! அது பற்றி, இப்போதே கவலைப் பட்டு, உள்ள மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்தாள் சுந்தரி!

மீண்டும் சுற்றிலும் பார்வையைச் செலுத்தியபோது, ஏற்கெனவே பார்த்து விட்டதாலோ என்னவோ, பசிய வயல்களிலும், இடையே ஓடிய நதியிலும் பழைய அழகு தெரியவில்லை.

கூட்டம் வேறு பெருகினாற் போலத் தெரியவும், மனோகரன் சொன்னது போல, வீட்டுக்குச் செல்லத்

தீர்மானித்து, அவளும் மலையை விட்டு மெல்ல இறங்க லானாள்.

அடுத்த சில நாட்கள், மனோகரன், சுந்தரி இரு வருக்குமே வேலை அதிகமாக இருந்தது.

மனோகரனுக்கு வழக்கமான மருத்துவ மனைப் பணிகளோடு, தற்கொலைக்கு முயன்ற ஒரு நண் பருடைய மகளைக் காப்பாற்றி, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்யும் சிரமமும் சேர்ந்து கொண்டது. அத்தோடு, அவன் விசிட்டிங் டாக்டராகப் பொறுப்பேற் றிருந்த பள்ளி ஒன்றில் ஃப்ளூ தாக்க, சில நாட்கள், அவன் இரவைக்கூட, மருத்துவ மனையிலேயே கழிக்கும்படி ஆயிற்று.

சுந்தரிக்கும் வேலை அதிகம்தான். சொல்லப் போனால், அமுதம் ஹோட்டலில் எல்லோருமே ஓய்வின்றி வேலை செய்யும்படி இருந்தது.

தொடர்ந்து வந்து கொண்டே இருந்த கஸ்டமர்களுக்கு உணவு, தேவைப்பட்டால் இருப்பிடம் எல்லாம் தாமதமின்றி ஏற்பாடு செய்து, அனுப்பி முடிக்குமுன், எல்லோருக்கும் வியர்த்து விறுவிறுத்துப் போயிற்று.

ஹோட்டலின் மேலே கட்டியிருந்த அறைகளும், பக்கத்தில் மனோகரனுடைய தாத்தாவிடம் வாங்கிய நிலத்தில் கட்டியிருந்த சிறு காட்டேஜ்களும்கூட நிரம்பிப் போய், மேலும் வந்தவர்களை 'இடமில்லை!' என்று திருப்பி அனுப்ப வேண்டியதாயிற்று.

''இன்னும் ஐந்தாறு ஆட்களை வேலைக்கு அமர்த்த லாம். இப்படி நாமும் சேர்ந்து பம்பரமாகச் சுழல நேராது. ஆனால், அவர்களுக்கு முழு நேர வேலைக்கும்

சம்பளத்துக்கும், நமக்கு இன்னமும் அதிக இடமும் வருமானமும் வேண்டும்! நமக்குத்தான் இங்கே சரியாக விரிவு படுத்த இடமே இல்லையே! அந்த ஓடை யோரத்துப் பெரிய வீடு மட்டும் நமக்குக் கிடைத்தால், பிரச்சினையே இராது. அந்தப் பெரிய வீட்டில், அந்த மூன்றே மூன்று கிழங்களும் ஆவிகள் மாதிரி உலாவு கின்றனவே, பேசாமல் நம்மிடம் கொடுத்துவிட்டுப் போவதற்கென்ன?'' என்று, ரஞ்சிதம் பொருமக் கேட்டாள் சுந்தரி.

சற்றே திடுக்குற்று, "அத்தை, அது அவர்கள் வீடு. அதை, அவர்களுக்குப் பிடித்த மாதிரி வைத்துக் கொள்வது, அவர்கள் விருப்பம். அதை, அடுத்தவர்களான நாம் வர்ணிப்பது, அவ்வளவு சரியில்லை!'' என்று மனதில் பட்டதை எடுத்துரைத்தாள்.

''ஆமாம். ரொம்பத்தான் தப்பு சரியைக் கண்டு விட்டாய். அவ்வளவையும் காசாக்கலாம். அதற்கு வழியில்லாமல், அந்த வீட்டில் பெரும் பகுதியைப் பூட்டி வைத்திருக்கிறார்கள், தெரியுமா? ஒரு நல்ல பொருளை வீணாக்கிக் கொண்டு, அவர்கள் சும்மா உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தால், எனக்கு எவ்வளவு கோபம் வருகிறது, தெரியுமா?''

மேலும் மேலும் ரஞ்சிதம் ஆத்திரத்துடன் பேசவும், இன்னமும் அவளது பேச்சில் உடன்பாடு இல்லாவிட் டாலும், அதற்கு மேல் பேசாமல், சுந்தரி சும்மா இருந்தாள்.

அந்தச் சமயத்தில் சுந்தரியுடைய தந்தை அவசரமாக உள்ளே வந்தவர், அத்தையையும் மருமகளையும்

பார்த்ததும், அவர்கள் அருகே வேகமாகச் சென்றார். "இரண்டு பேரும் இங்கே இருக்கிறீர்களா? ஒரு முக்கிய மான விஷயம் சொல்ல உங்களைத் தேடி வந்தேன்!" என்றார் பரபரப்புடன்.

"என்ன? என்ன?" என்று இருவரும் கோரசாகக் கேட்க, "அந்த ஓடையோரத்துப் பெரிய வீட்டில் மூன்று பேர் வசித்தார்களே, அவர்களில் மூத்தவர்கள் இரண்டு பேரும், ஒரு விபத்தில் சிக்கி இறந்து போனார்களாம்!" என்றார் அவர்.

இரு பெண்களாலும் நம்ப முடியா விட்டாலும், அது உண்மையே என்று நிச்சயமாகச் சொன்னார் கண்ணபிரான்.

"உண்மையேதானா?" என்று உறுதிப்படுத்திக் கொண்ட ரஞ்சிதத்தின் கண்கள் சட்டெனப் பளபளத்தன. "மிச்சம் இருக்கும் ஒரே ஒருத்திக்கு, இவ்வளவு பெரிய இடம் எதற்கு? அதைக் கட்டிக் காப்பதே கஷ்டம். உடனே போய்க் கேட்டால்..." என்று அவள் திட்டமிடும்போதே, சுந்தரி சட்டென எழுந்தாள். "அத்தை! வேண்டாம். இப்போது அதைப் பற்றித் தயவு செய்து பேசாதீர்கள்!" என்றவள், அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை.

## 5



அறுபது வயதில், சிறு பிள்ளை போல மலங்க மலங்க விழித்த அந்தப் பெரிய வீட்டுப் பெண்மணி செல்வநாயகியைப் பார்க்கையில், மனோகரனுக்குப் பரிதாப மாக இருந்தது.

செல்வநாயகியுடைய தமக்கையும், தமக்கை கணவரும் சென்ற கார் விபத்துக்குள்ளாகி, அந்தக் காரில்

இருந்தவர்கள் இறந்து போனதை, மனோகரன்தான் செல்வநாயகியிடம் தெரிவிக்க நேர்ந்தது. தெரிவித்து, அந்த மூதாட்டியை அழைத்துச் சென்று, சடலங்களை அடையாளம் காண வைத்து, மேற்கொண்டு எல்லா வற்றையும் கூடக் கவனிக்க வேண்டியதாயிற்று.

மனோகரனுக்கு விபத்து பற்றிய தகவல் வந்தபோது, அவன் பத்து நாட்களுக்கு முன்பாகத் தற்கொலைக்கு முயன்ற பெண் நீனாவோடு, இலகுவாகப் பேசி, அவளது மன இறுக்கத்தைத் தளர வைக்க முயன்று கொண்டிருந்தான்.

அந்தப் பெண் நீனா, மனோகரனுடைய நண்பர் ஒருவருடைய அண்ணன் மகள்.

நண்பனின் வேண்டுகோளுக்காகத் தன் பெற்றோருடன் பேச மறுத்த நீனாவிடம் டாக்டராக மனோகரன் போய்ப் பேசிப் பேசி, அவளது தற்கொலை நோக்கத்தை அடியோடு கைவிட வைக்கத் தன்னால் ஆன மட்டும் முயன்று கொண்டிருந்தான்.

அவனோடு பேசினால், கொஞ்சம் தெளிவாக இருக் கிறாள் என்று நீனாவுடைய தந்தை சொன்னதால், இந்தப் பத்து நாட்களாகத் தினமுமே அவளைச் சென்று பார்த்துச் சற்று நேரம் கதையளந்துவிட்டுப் போய்க் கொண்டிருந் தான்.

ஆனால், இதை எப்போதும் தொடர்ந்து செய்து கொண் டிருக்க முடியாது. அதற்குரிய அவகாசம் அவனுக்குக் கிடையாது என்றாலும், அவள் சற்றுத் தேறும் வரை நண்பனுக்காக இதைச் செய்தாக வேண்டும் என்று, எப்படியாவது நேரத்தை ஏற்படுத்திக் கொண்டு, ஓர்

ஐந்து நிமிஷமாவது அங்கே போய் இருந்து விட்டு வந்தான்.

அப்படிச் சென்று, பற்பல விஷயங்களைப் பேசப் பேச, நீனா அப்படியொன்றும் கோழையோ, முட்டாளோ அல்ல என்றே அவனுக்குத் தோன்றியது.

பின், ஏன் அவள் தற்கொலைக்கு முயன்றாள்?

பேச்சினூடே, மனோகரன் அதைக் கண்டு பிடிக்க முயன்றான். சிக்கல் என்னவென்று தெரிந்தால்தானே, அதிலிருந்து நீனாவை விடுவிப்பதும் சாத்தியம்?

அன்றும், அதே நோக்கத்துடன்தான் பால்கனியில் அமர்ந்து நீனாவோடு பேசிக் கொண்டிருந்தான்.

திடுமென செல் ஒலிக்கவும், எடுத்துப் பார்த்தால், அவனுக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரி. "மோசமான விபத்து, மனோகர். உங்கள் இந்திரபுரி ஆட்கள் என்று தெரிகிறது. நீங்கள் வந்தால் அடையாளம் காண்பதோடு, உற்றார், உறவினருக்குத் தெரிவித்து, ஆக வேண்டியதைப் பார்க்க, எங்களுக்கும், அந்தக் குடும்பத்துக்கும் உதவ லாம். வருகிறீர்களா?" என்று அழைத்தார் அவர்.

மோசமான விபத்துதான். இருவருக்கும் உடனடியாக மரணம் சம்பவித்திருந்தது.

இருவருமே வேதனைப்பட்டு இறக்கவில்லை என்பது. அவர்களுடைய உறவினருக்கு எப்படி இருக்குமோ? ஆனால், முதிய இந்த வயதில் வலி, வேதனைகளைத் தாங்குவது எவ்வளவு கடினம் என்பதை உணர்ந்திருந்த டாக்டருக்குச் சற்று ஆறுதலாகத்தான் இருந்தது.

பிழைக்கக் கூடும் என்றால், எவ்வளவு வலியையும் ஏற்கலாம்தான். ஆனால், அவ்விரு முதியோருக்கும்

நெஞ்சில் பட்டிருந்தது மிகவும் பலமான அடி. அந்த அடி சிறு வயதினருக்குப் பட்டிருந்தாலும், அவர்கள்கூட உயிர் மீள்வது மிகவும் கடினம். இந்தப் பெரியவர் களோ, வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் நடமாடிக் கொண்டு இருந்தவர்கள்.

ஒரு மரணத்தை, உயிரோடு இருக்கும் மற்றவர்களிடம் தெரிவிப்பது, எப்போதுமே கடினம்.

பெரிய வீட்டினரில் மீதமிருந்த செல்வநாயகியிடம் தெரிவிப்பது, அதுவரை மனோகரன் அனுபவித்து அறிந் திராத கொடுமையாக இருந்தது.

அறுபது வயதிலும், செல்வநாயகி அறியாத சிறுமி போலவே இருந்தாள்.

தாமதமாகப் பிறந்த கடைசிப் பெண் என்று, பெற் றோர், சகோதரி எல்லோராலும் பொத்திப் பொத்தி வளர்க்கப்பட்ட செல்வநாயகியின் வாழ்வில் நேர்ந்த சில அசம்பாவிதங்களால், பிறகும் அந்தப் பெண்மணியைத் தங்கள் பாதுகாப்பு வளையத்துள்ளேயே வைத்திருந்து விட்டனர்.

விளைவு இன்றைய பேரதிர்ச்சியில், மலங்க மலங்க விழிப்பதும் அழுவதும் தவிர, செல்வநாயகிக்கு வேறெதுவும் செய்யத் தெரியவில்லை.

கடைசியாக, மனோகரனேதான், இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைத் தானும் சேர்ந்து செய்து முடித்ததோடு, செல்வநாயகிக்குத் துணையும் இருக்க வேண்டியதாயிற்று.

மருத்துவம், மற்றத் தொழில்கள் போன்றது அல்ல. ஒருவரையே பார்த்துக்கொண்டு, மற்ற நோயாளிகளைத்

தட்டிக் கழிப்பது அசாத்தியம். அத்தோடு, ஏழை எளியோருக்கான அவனது இலவச மருத்துவமனை, முதியோர் பணி எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியிருந்ததால், மனோகரன் இங்கும் அங்குமாக, ரொம்பவே அலைய வேண்டியிருந்தது.

அவனுடைய தாயும் சும்மா இருப்பவள் அல்ல. வீட்டுப் பொறுப்புடன், அவள் தானாக இழுத்துப் போட்டுக் கொண்ட சில பொதுப்பணிகளோடு பெண்களுக்கான கைத்தொழில் வகுப்புகள் பலவும் நடத்திக் கொண்டிருந்தாள்.

எனவே, ஓய்வு நேரம் என்பது, அவளுக்கும் அரிதுதான்.

அப்படி இருந்தும், அவளும் மகனுக்கு உதவும் நோக்கத்தோடு, அவளும் ஓரிரு இரவுகளில் செல்வநாயகிக்குத் துணையிருந்தாள்.

அவளது தூண்டுதல்களால், செல்வநாயகி ஓரளவு இயல்பாக நடமாடலானாள். கண்ணீர் குறைந்து, உண்பது, குளிப்பது போன்றவை வேளைக்கு நடந்தன.

எஜமானி அம்மாளோடு சேர்ந்து அதிர்ந்து போயிருந்த வேலைக்காரர்களும் அன்றாட வேலைகளில் மெல்ல ஈடுபடலாயினர்.

சமையல்கார இசக்கி, காவலாள் பெருமாள், வீடு சுத்தம் செய்து துணி துவைக்கும் மாடத்தி, எல்லோருமே குடும்பத்தோடு நெடுங்காலமாக இருப்பவர்கள்தான். வீட்டாரோடு சேர்ந்து வயது முதிர்ந்தவர்களும்கூட. எல்லோருக்குமே விசுவாசம் அதிகம் இருந்தபோதும், கடின உழைப்பு இயலாததாகியிருந்தது.

புரிந்துகொள்ளும் மனம் வீட்டாருக்கும் இருந்ததால், அந்தப் பெரிய வீட்டின் முக்கால் பகுதி சும்மா பூட்டியே வைக்கப்பட்டிருந்தது. ஒரு சிறு பகுதி தவிர வீட்டை அடுத்திருந்த தோட்டமும், பரந்திருந்த பண்ணை நிலமும் கூடப் பராமரிப்பின்றிக் காடும் மேடுமாகச் சும்மாதான் கிடந்தன.

ஆயினும், வீட்டினர் மூவரும், விசுவாசமுள்ள மூன்று வேலையாட்களுமாக, அந்த வீட்டில் நிறை வோடு வாழ்ந்திருந்ததை, மனோகரனால் உணர முடிந்தது.

இன்றைய இழப்பையும்!

மீதமிருந்த எஜமானியின் முகம் பார்த்தும், ஏவல் செய்தும், கிட்டத்தட்டப் பழைய நிலைக்கு வேலையாட் களால் மீள முடிந்தது.

ஆனால், மனதளவில் செல்வநாயகியின் திகைப்பும், தவிப்பும் சற்றும் குறையாதிருக்க, மிகவும் துன்பம் மிகுந்த வேளையில் துணையிருந்த டாக்டரிடம், அதைக் கொட்டித் தீர்த்தாள். அந்த முதிய பெண்மணி.

''எனக்கு ஒன்றுமே தெரியாது, டாக்டர் தம்பி. இந்தப் பெரிய வீட்டில், தனியாக.. நான் என்ன பண்ணட்டும்? அக்காவும், அத்தானும் இல்லாமல், நான் தனியாக இருந்ததே கிடையாது. இப்போதும், அடுத்த அறையில் இருப்பது போலவே தோன்றுகிறது... ஆனால், டி.வி. செய்தி பார்க்க அத்தான் வரவில்லையே! அக்காவும் நானும் டி.வி. தொடர் பார்ப்போம்! அதை அத்தான் கிண்டல் பண்ணுவார்... ஆனால் கூடச் சேர்ந்து பார்ப்பார். இப்போது காணவில்லையே... எனக்குப் பயமாக இருக்கிறதே, தம்பி...''

"ஷ்! அழக் கூடாது, ஆன்ட்டி. வேண்டிய அளவு அழுது முடித்து விட்டீர்கள்! இன்னும் அழுதால், உடம்பு இன்னமும் சோர்ந்து போகும். இந்த மாத்திரை போட்டுக் கொள்ளுங்கள். மனம் லேசாகும். தூக்கமும் வரும். தூங்கி விழித்தால், தெம்பாக இருக்கும்!" என்று பையைத் திறந்து ஒரு மாத்திரையை மட்டும் எடுத்துக் கொடுத்தான்.

மொத்தத்தையும் கொடுத்து, அவ்வப்போது போட்டுக் கொள்ளச் சொன்னால், மொத்தத்தையும் ஒன்றாக விழுங்கிவிடக் கூடாதே என்ற பயம் அவனுக்கு.

இன்றிருக்கும் மனநிலையில், செல்வநாயகிக்கு ஒரு துணை இருப்பது அவசியம் என்று அவனுக்குத் தோன்றவும், "உங்களுடைய மற்ற சொந்தக்காரர்கள் எந்தப் பக்கம் இருக்கிறார்கள், ஆன்ட்டி?" என்று மெல்ல விசாரித்தான்.

தூக்க மாத்திரை வேலை செய்யத் தொடங்கி விட்ட தாலோ, அன்றி, மனச்சுமையை இறக்கி வைக்கச் செல்வ நாயகி எண்ணம் கொண்டதாலோ, அன்று வரையிலும், ஊர் அறியாத விவரங்களை, அப்போது செல்வநாயகியின் வாய் மூலமாக, மனோகரன் அறிய நேர்ந்தது.

செல்வநாயகியுடைய தந்தை ஒரு மாதிரிப் பட்ட பெரிய மிராசுதார். பணக்காரக் குடும்பம். அவருடைய மூத்த பெண்தான், விபத்தில் இறந்து விட்ட தெய்வநாயகி. தெய்வநாயகிக்குத் திருமணம் ஆகிக் குழந்தைகள் இல்லாது போயிற்று.

அப்போதே, பெற்றவர் சற்று மிரண்டு போனார்.

சகோதரிகளுக்கிடையே, பத்து ஆண்டு வித்தியாசம். ஓரளவு, தங்கையையே குழந்தையாகக் கருதத் தொடங்கினாள் தெய்வநாயகி.

அப்புறமாகச் செல்வநாயகியின் திருமணம் நடந்தது.

''என் புருஷன் ரொம்பவும் வக்கிரம் பிடித்த ஆள், டாக்டர் தம்பி. ரொம்பவும் கஷ்டப்பட்டேன். ஆனாலும் எல்லாப் பெண்களுக்கும் இப்படித்தான் இருக்கும் போலும் என்று நினைத்துச் சும்மா இருந்துவிட்டேன்.

''அக்காதான் அதைக் கண்டுபிடித்து, அத்தானிடம் சொல்லி, என் கணவரிடம் இருந்து என்னைக் காப் பாற்றி, விவாகரத்து பண்ணிக் கூட்டிவந்து அவர்களோ டேயே வைத்துக் கொண்டார்கள்.

''அப்போது, அந்த மாதிரி ரத்துகள் எல்லாம் அவ்வளவாகப் பழக்கம் இல்லை. அதிலும், எங்கள் மாதிரிக் குடும்பங்களில் கிடையவே கிடையாது.

''அப்பாதான் முழுசாக உடைந்து போனார். அறைக்குள் போய்ப் பூட்டிக் கொள்வார். என் தப்பு, என் தப்பு என்று, தன்னையே நொந்து கொள்வார். அங்கே யாரையும் பார்க்கப் பிடிக்காமல், அங்கிருந்த நிலம், பண்ணைகள், வீடு எல்லாவற்றையும் விற்றுவிட்டு, எங்களை இங்கே கூட்டி வந்தார்.

''இது அப்பாவுடைய வெள்ளைக்கார நண்பரின் வீடு. முன்பே அவரிடம் இருந்து வாங்கிப் போட்டிருந் தார். அவ்வப்போது வந்து தங்குவோம். ஓடை நீரும் பெரிய தோட்டமுமாக, எல்லோருக்கும் பிடித்தமான இடம்.

''வாரிசைப் பெற்றுத் தராத அக்காவை விட்டுவிட்டு வேறே கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சம்மதிக்கவில்லை

என்று, அத்தானை ஏற்கெனவே, அவர் குடும்பத்தில் இருந்து பங்குப் பணத்தைக் கொடுத்து வெளியேற்றி விட்டார்கள்.

"அப்புறம், இங்கேயேதான்... எனக்கு ஒரு கவலை இல்லாமல், அக்காவும், அத்தானும் பார்த்துக் கொண் டார்கள்! இனிமேல், நான் எப்படி இந்த வீட்டில் இருக்கப் போகிறேன்..."

செல்வநாயகியின் குரல் மெலிந்து மெல்லத் தூங்கத் தொடங்கியதும், வீட்டு வேலைக்காரப் பெண்மணியை அழைத்து, எஜமானியைப் பார்த்துக் கொள்ளும்படியும், விழித்துக் கொண்டதும், டீ போட்டுக் கொடுக்கும் படியும் சொல்லிவிட்டுக் கிளம்பினான் மருத்துவன்.

மறுநாள் மாலையில் இலவச மருத்துவ மனையில் நோயாளிகளைப் பார்த்து முடித்த பிறகு, வீட்டுக்குச் செல்லுமுன், செல்வநாயகியைக் காண மனோகரன் சென்றபோது, வெளிப் பார்வைக்கு அந்த அம்மாள் அமைதியாகத்தான் தோன்றினாள்.

ஆனால் டீயைக் கொண்டு வந்து வைத்துவிட்டு வேலைக்காரம்மா அகன்றதும், குரல் நடுங்க, "என்னால் தாங்க முடியவில்லையே, டாக்டர் தம்பி. தனியாக இருந்தால், இந்த வீட்டில் எங்கே பார்த்தாலும், அங்கங்கே அக்காவும் அத்தானும் ஏதாவது செய்து கொண்டிருந்த நினைவு வந்து கொண்டே இருக்கிறதே! நினைவு இருக்கிறது. அவர்கள் இல்லையே என்று யார் முகத்தையாவது பார்த்தால் கொஞ்சம் பரவா... ஆனால்..." என்று முடிக்க முடியாமல் செல்வநாயகி கண் கலங்கினாள்.

“நீங்கள் இந்த வீட்டில் தனியாக இருக்க வேண்டாம், ஆன்ட்டி. குறைந்தது கொஞ்ச நாளேனும், வேறே எங்கேயேனும் போய்...”

“ஐயோ!” என்று கத்தி விட்டாள் அந்தப் பெண்மணி. “இந்த வீட்டை விட்டு வெளியே போவதா? நான் செத்தே போவேன், டாக்டர்!”

“அப்படியானால்...”

அந்த வினாடியில், அவனுள் ஒன்று பளிச்சிட்டது.

ஒரு தீர்வு!

பல மாதங்களாக, அவனை வருத்திக் கொண்டிருக்கும் பிரச்சினை தீர ஒரு வழி. அதே சமயம் இந்தப் பெண்மணியின் தவிப்புக்கும் ஒரு முடிவு.

“ஆன்ட்டி, இந்த வீட்டின் ஒரு பகுதியில் நீங்களும் இருந்து கொண்டு, பூட்டிக் கிடக்கும் மற்றப் பகுதியை ஏதாவது நல்ல விஷயத்துக்குப் பயன் படுத்தினால் என்ன? உங்கள் தனிமையும் தீரும். வீடும் நல்லபடியாக இருக்கும்.”

“நன்றாகத்தான் இருக்கும். ஆனால், இந்த வீட்டை, வேறே என்ன மாதிரிப் பயன்படுத்த முடியும்? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. பூட்டிக் கிடப்பதையெல்லாம் திறந்து சுத்தப்படுத்தி... அது மாடத்தியால் முடியாதே... வேறே ஆள் வைப்பது வீண் செலவு என்று அக்காவும் அத்தானும் ஏதோ சொன்னார்களே. அப்படியானால் என்ன செய்வது?” என்று, சின்ன வகுப்புக் குழந்தை போலப் புரியாத பார்வையுடன் செல்வநாயகி வினவினாள்.

ஒரு கணம் சொல்லி விடலாமா என்று, மனோகரனுக்குத் தோன்றியது! ஆனால், உடனேயே மனம் கூசிவிட்டது!

ஒருவர், அன்பான உறவினரை இழந்து மனம் கலங்கிய நிலையில் இருக்கும்போது, அதைப் பயன்படுத்திக் காரியம் சாதிப்பது அநாகரீகம் அல்லவா?

"யோசித்துப் பாருங்கள், ஆன்ட்டி. ஏதாவது தோன்றும். எப்படியும், நீங்கள் தனியே இந்த வீட்டில் உட்கார்ந்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பது உங்கள் அக்கா, அத்தானுக்குப் பிடிக்குமா? அதையும் யோசியுங்கள்!" என்று மட்டும் சொல்லிவிட்டுக் கிளம்பினான் அவன்.

ஆனால், இந்தத் தயக்கத்துக்காக, அவன் விரைவிலேயே வருந்தப் போகிறான் என்று, அப்போது அவனுக்குத் தெரியாது.

'முந்தினவன் கை மந்திர வாள்' என்பதை, அவன் அனுபவித்துத்தான் அறிந்து கொள்ள நேர்ந்தது.

## 6



அண்ணன் மகளின் வார்த்தைக் கிணங்கி, இரண்டு நாட்கள் ஓடை வீட்டுப் பேச்சைத் தொடராமல் விட்டு வைத்த ரஞ்சிதம், மூன்றாம் நாள் மீண்டும் தொடங்கினாள்.

"நாம் சும்மா உட்கார்ந்திருந்தால், வேறே யாராவது அந்த இடத்தைக் கொத்திக் கொண்டு போய் விடுவார்கள், சுந்தரி. என்னமோ ஹோட்டல் மானேஜ்மென்ட் இவ்வளவு செலவு பண்ணிப் படித்தாயே! எதையும், உரிய காலத்தில் செய்யாமல், ஆறப் போடுவது வீண் நஷ்டத்துக்கு வழி வகுக்கும் என்பதை, உன் நிர்வாகப் படிப்பு கற்றுத் தரவில்லையா? சும்மா இப்படி உட்கார்ந்து கொண்டே இருந்தோமானால்,

எவனாவது ஒன்றரை ரூபாய்ப் பேர்வழி, இடையில் புகுந்து சல்லிசாக இடத்தைத் தட்டிக் கொண்டு போய் விடுவான். அப்புறம், நாம்தான் அசடு வழிய நிற்க நேரும். வா. நாம் இருவரும் போய், மிச்சமிருக்கும் கிழவியிடம், இடத்தை விலை பேசுவோம்!'' என்று மருமகளை விரட்டினாள்.

''அதற்கில்லை அத்தை, என்னவோ, இருந்த உறவை யெல்லாம் ஒரே நாளில் இழந்துவிட்டு, அந்த ஆன்ட்டி நிலை குலைந்து தவித்துக் கொண்டிருப்பார்கள். அவர் களும் வயதானவர்கள், பாவம்! இப்போது போய், அவர்களிடம் வியாபாரம் பேசுவது என்றால், மனதுக்கு என்னவோ போல இருக்கிறது, அத்தை கொஞ்சம் அநாகரீகமாக...'' என்று இழுத்தாள் பெண்.

''அப்படியே, உன் அப்பா, அம்மா மாதிரியே அசட்டுத்தனமாகப் பேசுகிறாயே!'' என்று ஆத்திரப் பட்டாள் அத்தைக்காரி. ''ஒருவர் சோகத்தில் இருக்கும் போது நாம் லாபம் பார்க்கக் கூடாதாம்! நேற்றெல்லாம் எனக்கு ஒரே உபதேசம். அதே புத்திதான் உனக்கும் இருக்கிறது. நான் உன்னைத் தூக்கி வளர்த்ததற்கு, ஒரு சிறு மாற்றத்தையும் காணோம்!'' என்றாள் எரிச்சலோடு.

''பார் சுந்தரி, நாம் ஒன்றும் அந்தம்மாவிடம், இடத்தைச் சும்மா கேட்கவில்லை! உரிய விலை கொடுத்துத்தான் வாங்கப் போகிறோம்! என்னமோ, அநாகரீகம், கீழ்த் தரம் என்றெல்லாம், அப்பனும் மகளுமாகக் கூறுகிறீர் களே! என் முயற்சி, அந்தக் கிழவிக்குப் பெரிய உதவி யாக இருக்கக் கூடும் என்று, உங்கள் ஒருவருக்குமே ஏன் புரியவில்லை?'' என்று கேட்டாள்.

"உதவியா? எப்படி அத்தை?" என்று வியப்புடன் கேட்டாள் சுந்தரி.

"கேட்பதைப் பார்!" என்றாள் ரஞ்சிதம் குறையாக. "அந்தப் பக்கம் அடிக்கடி வாக்கிங் போகிறாயே, கண்ணைத் திறந்து அந்த இடத்தை எப்போதாவது நன்றாகப் பார்த்திருக்கிறாயா? வெள்ளையடித்துக் குறைந்தது இருபது ஆண்டு ஆகியிருக்கும் போல ஒரு தோற்றம்! தோட்டம்! புல்லும் களையும் அடர்ந்து, அது வீணாகவே ஆகிவிட்டது! வீட்டினுள்ளும் முக்கால்வாசி அறைகளைப் பூட்டி வைத்திருப்பதாகத்தான் சொல்லு கிறார்கள். அர்த்தம் என்ன? கையில் காசு இல்லை என்பதுதானே? இந்த வீட்டைக் கட்டிக் காப்பது, வெள்ளை யானையை வளர்ப்பது போலத்தான்! இவ்வளவு காலம் பெருசுகள் இரண்டும் சேர்ந்து எப்படியோ ஒப்பேற்றி வந்திருக்கிறதுகள். இப்போது, இந்தம்மா, சும்மாவே செலவுக்குத் திணறிக் கொண்டிருக்கும். நாம் ஒரு நல்ல தொகையைக் கொடுத்தால், அது உதவிதானா, இல்லையா?" என்று வாதிட்டாள் ரஞ்சிதம்.

"நீங்கள் சொல்லுகிற மாதிரியே வைத்துக் கொண் டாலும், முப்பது, நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து பழகிய இடத்தை விட்டு வெளியேறுவது. அந்த ஆன்ட்டிக்குக் கஷ்டமாக இராதா? அதுவும் இன்றைய நிலையில்!"

"என்ன உளறல் இது? அந்தம்மாவின் கஷ்டத்தைப் பற்றி நமக்கு என்ன வந்தது?"

"அத்தை..."

"என்ன? அத்தை இரக்கமே இல்லாமல் பேசுகிறாளே என்று இருக்கிறதா? யோசிம்மா. இந்த மாதிரி இரக்கம்

எல்லாம் நம்மிடம் யாராவது காட்டினார்களா? ஆண்டுக் கணக்கில் ஆசை காட்டிவிட்டு மோசம் செய்தார்களே! என் துன்பம் பற்றி எண்ணிப் பார்த்திருப்பார்களா? யாரையும் நிமிர்ந்து பார்க்க முடியாமல், எவ்வளவு குன்றிப் போயிருப்பேன்! கவலையே இல்லையே! வீடு கட்டிப் பால் காய்ச்சி, பிள்ளை பெற்று, ஊர் கூட்டித் தொட்டில் போட்டு... சே! நாம், நம் வேலையை மட்டும் பார்த்தபடி, போய்க் கொண்டே இருக்க வேண்டும்! இதை, இன்னமும் நீ தெரிந்து கொள்ளவில்லை என்றால், நீ பிறந்ததில் இருந்து, உன்னை நான் உயிராக வளர்த்ததில் அர்த்தமே இல்லை என்றுதான் எண்ண வேண்டும்!'' என்றாள் ரஞ்சிதம் வெறுத்த குரலில்.

அத்தை ரஞ்சிதம் சுந்தரியிடம் தனிப்பட்ட பிரியம் காட்டுவது, வீட்டில் எல்லோரும் அறிந்ததுதான். சுந்தரிக் கும் அத்தை என்றால் அப்படித்தான். ஒருவருக் கொருவர் எதையும் மறைத்ததும் இல்லை. தற்செயலான சந்திப்புகள் என்றாலும், யார் என்று தெரிந்தால் அத்தை வருத்தப்படுவாளே என்று, டாக்டர் விஷயம் மட்டும் சுந்தரி சொன்னதில்லை. மற்றப்படி, அவளுக்குப் பெற்ற வள்கூட, அத்தைக்கு அடுத்தபடிதான்.

முப்பது ஆண்டுகளுக்கும் முன்பாக நடந்ததை, இன்னமும் விடாமல் நினைத்துக் கொதிக்க வேண்டுமா என்று உள்ளூர எண்ணிய போதும், ரஞ்சிதம் வருந்துவது தாங்காமல் சுந்தரி எழுந்து விட்டாள். ''சொல்லுங்கள் அத்தை, எப்போது போக வேண்டும்?''

''கிளம்புகிற வேகத்தைப் பார்த்தால், நேரே ஓடை யோரத்து வீட்டுக்குப் போய், அந்தம்மாவிடம் வீட்டை

விலை கேட்பீர்கள் போல இருக்கிறதே! அவர்களிடம் பெரிய நாய் ஒன்று இருக்கிறது. பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடி வரும் நிலைமை வந்துவிடக் கூடாது. நினைவிருக்கட்டும்!'' என்று சுந்தரியுடைய தாயார் கேலி போலச் சொல்லவும், எல்லோருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

''எங்கள் மேல் நாயை ஏவிவிடச் சொல்லி, நீயே ஐடியா கொடுப்பாய் போலத் தெரிகிறதே!'' என்று இலகுவாகக் கூறி, ரஞ்சிதம் முறுவலித்தது, மற்ற மூவருக்குமே ஆறுதலாக இருந்தது. ''கவலைப்படாதே, அண்ணி. அங்கே இருக்கிற நிலவரத்தைப் பார்த்துக் கொண்டு, அதற்கேற்ப பேசிக் கொள்கிறோம்!'' என்று, ரஞ்சிதம் உறுதி வேறு கொடுத்தாள்.

அவ்வளவு நேரம் பேசாதிருந்த கண்ணபிரானும், இப்போது துணிந்து, தங்கையிடம் எடுத்துச் சொன்னார். ''நீ சொல்வதுதான் சரிம்மா. முதலில் அங்கே, துக்கம் கேட்கிற மாதிரிப் போங்கள். அப்புறமாக, மெல்ல, இனி என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டு, அவர்கள் சொல்லும் பதிலுக்கு ஏற்ப, மேலே பேசுங்கள்!'' என்று ஆலோசனை கூறினார்.

''நீங்களும் வாங்களேன், அப்பா!'' என்று அழைத்தாள் மகள்.

கண்ணபிரான் தங்கையைப் பார்க்க, ''வேண்டாம், வேண்டாம். உன் அம்மா, அப்பா இரண்டு பேருமே, இப்போது வேண்டாம். இப்போது சரியாய் இராது என்று, அங்கே ஏதாவது இடைஞ்சல்தான் பண்ணுவார்கள். நாம் இருவருமே போவோம்!'' என்று முடித்தாள் ரஞ்சிதம்.

தந்தையும் தாயும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதைச் சுந்தரி கவனித்தாள்.

தாயின் கண்களில் வருத்தத்தையும், தந்தையின் சமாதானப் படுத்தும் பார்வையையும் கண்டவளுக்கு, இந்த அத்தை கொஞ்சம் மென்மையாகப் பேசியிருக்க லாம் என்று தோன்றியது. இப்படித்தான், சுந்தரி, ரஞ்சிதம் இருவருமாகக் கிளம்பி, ஓடையோரத்துப் பெரிய வீட்டை நோக்கிச் சென்றது.

மாலை நேரத்துக் காற்றில் பசிய சுற்றுச் சூழலில் நடப்பது, இருவருக்குமே சுகமாக இருந்தது.

''பார் சுந்துக்குட்டி, நெடுஞ்சாலையில் இருந்து வரும் தார் ரோடு, கிட்டத்தட்ட, பெரிய வீடு வரை போகிறது. அதற்கு மேல், ரொம்பக் கொஞ்ச தூரம் நம் செலவில் வழி அமைக்க வேண்டும்! அங்கிருந்து வரும்போதே, இரண்டு மாடிகளுடன், வீடு எவ்வளவு கம்பீரமாகத் தெரிகிறது! கொஞ்சம் வெள்ளை அடித்து விட்டால், பார்வைக்குப் பிரமாதமாக இருக்கும்! இங்க ஒரு ஹோட்டல் இருக்கிறது என்று தெரிந்தாலே, உள்ளே வந்து பாராமல் போக, யாருக்கும் மனம் வராது... இதில் போடும் பணத்தை ஆறு மாதங்களுக்குள்ளாகவே எடுத்து விடலாம்...''

ரஞ்சிதத்தின் கற்பனை கொடி கட்டிப் பறந்தது.

அத்தையின் பளபளத்த முகத்தைப் பார்க்கையில், அந்தப் பெரிய வீட்டுப் பெண்மணி, மறுப்பாக எதுவும் சொல்லிவிடக் கூடாதே என்று, சுந்தரிக்குக் கவலை உண்டாயிற்று.

அப்படி ஏதும் சொன்னால், அந்த ஏமாற்றத்தை அத்தை தாங்குவது கடினம்!

எதற்கும், சற்று எச்சரித்து வைக்கலாம் என்று எண்ணி, "ரொம்பவும் கற்பனை செய்யாதீர்கள், அத்தை. இந்த வீட்டு மேல், அந்த ஆன்ட்டிக்கு உணர்ச்சி பூர்வமான பற்று எதுவும் இருந்தால், விற்க மறுக்கலாம்!" என்றாள்.

அண்ணன் மகளை ஒரு தரம் முறைத்துப் பார்த்தாள். ரஞ்சிதம்.

சற்று நேரம் பொறுத்து, "அப்படி ஏதாவது சொன்னால், இந்த ஃப்ளாட் கட்டுகிறவர்கள் மாதிரி, அங்கேயே சின்னதாக அவுட் ஹவுஸ் ஒன்றைக் கட்டிக் கொடுத்து விட வேண்டியதுதான். ஆசை தீர, இங்கேயே உட்கார்ந்து கொள் தாயே, என்று சொல்லி விட்டால் பிரச்சினை தீர்ந்தது!" என்று அலட்சியமாக ரஞ்சிதம் கூறியது, சுந்தரிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றாலும், அதை வெளிக்காட்டாமல், தன்னுள்ளேயே வைத்துக் கொண்டாள் அவள்.

நேரடி அறிமுகம் இல்லாத போதும், துக்கம் கேட்க வென்று வந்தவர்களை, செல்வநாயகி ஆவலாக வரவேற்றாள்.

"தனியாக இருந்து, அக்கா அத்தானைப் பற்றி எண்ணி உருகுவதற்கு இப்படி வருகிற யாரைப் பார்த்தாலும், மனதிற்கு மிகவும் ஆறுதலாக இருக்கிறது. பேசிப் பழகியிராத போதும், பாவம் என்று என் துயரத்தில் பங்கு கொள்ள வந்திருப்பதற்கு, மிகவும் நன்றிம்மா!" என்று செல்வநாயகி மனமாரக் கூறிய போது, உள்ளே வேறு எண்ணத்தோடு வந்ததை நினைத்துச் சுந்தரி உள்ளூரக் குன்றினாள்.

அந்தப் பிழையை ஈடு கட்டுகிறவள் போன்று, அந்த முதியவளிடம் பிரியமாகப் பேசினாள். "அவ்வப்

போது, இந்தப் பக்கம் உலாவ வரும்போது, உங்கள் மூவரையும் நான் பார்த்திருக்கிறேன், ஆன்ட்டி! வீட்டு முன் பக்கம், போர்டிகோவில் உட்கார்ந்து பேசிக் கொண்டோ, சீட்டு விளையாடிக் கொண்டோ இருப்பீர்கள். நமக்கு வயதானால், இப்படித்தான் இலகுவாக வாழ வேண்டும் என்று நினைப்பேன். ஆனால்... யாரும் இல்லாத இந்த நிலை உங்களுக்கு எவ்வளவோ வேதனை தான் ஆன்ட்டி! ஆனாலும், மரணத்தின் வலியை, வேதனையை அதிகம் அனுபவிக்காமல், அவர்கள் இருவருமே சட்டென்று போய்ச் சேர்ந்து விட்டதை எண்ணி, நீங்கள் கொஞ்சம் ஆறுதல் அடையுங்கள், ஆன்ட்டி.''

சற்றுத் திகைத்தாற் போலச் சின்னவளைப் பார்த்த செல்வநாயகியின் கண்கள் கலங்கின.

முதியவளின் கண்ணீரைக் கண்டதும், ''தப்பாக ஏதும் சொல்லியிருந்தால், சாரி ஆன்ட்டி!'' என்றாள் சுந்தரி மெதுவாக.

கண்ணைத் துடைத்துக் கொண்டு, சுந்தரியின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள் பெரியவள். ''நீ தப்பாக ஒன்றும் சொல்லவில்லை, அம்மா. சரியாகச் சொல்வது என்றால், என் மனச்சுமையை எவ்வளவோ இறக்கி வைத்திருக்கிறாய் என்றுதான் சொல்ல வேண்டும். எச்சரிக்கையே இல்லாமல், திடுமென இப்படி முடிவு வந்து விட்டதே. நோய், நொடி என்று பணிவிடை செய்யக்கூட முடியாமல் போய்விட்டதே, என்று இந்த மாதிரியே, சுயநலமாய் நினைத்து வருந்திக் கொண்டிருந்தேன். ஆனால், அதெல்லாம் அவர்களுக்கு வேதனைதானே! வலியை உணரவோ, என்னைப் பற்றிக்

கவலைப்படவோ, எதற்கும் அவகாசம் இல்லாது போனதை நினைத்து, நீ சொல்வது போல, ஆறுதல்தான் அடைய வேண்டுமே தவிர, வருத்தப்படுவது தவறு என்று இப்போதுதான் புரிகிறது!'' என்றுரைத்து, உதட்டால் முறுவலித்தாள் அந்த மூதாட்டி.

''எங்கள் சுந்தரி எதையுமே சரியான முறையில் யோசிப்பாள்!'' என்று செல்வநாயகியிடம் பெருமைப் பட்டபடியே, தொடங்கு, தொடங்கு என்பது போல, மற்றவளின் கண்ணுக்கு மறைவாக, மருமகளின் முதுகைச் சுரண்டினாள் ரஞ்சிதம்.

எப்படித் தொடங்குவது?

உள்ளார்ந்து உணர்ந்து பேசிய இந்தப் பேச்சுக்குப் பிறகு, சொத்து, தொழில், லாபம் பற்றிய பேச்சுக்கள் எல்லாம், சுந்தரிக்கு மிகவும் கொச்சையாகத் தோன்றின.

'கொக்குக்கு ஒன்றே மதி' என்பது போலச் செயல் படும் அத்தை, எதையாவது சொல்லிச் சூழ்நிலையைக் கெடுக்குமுன், அங்கிருந்து கிளம்ப விரும்பினாள், அவள்.

எனவே, ''நாங்கள் கிளம்புகிறோம், ஆன்ட்டி! அங்கே ஹோட்டலில், அப்பாவும், அம்மாவும் தனியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமாகத் திரும்பி விடுவதாகச் சொல்லிவிட்டு வந்தோம்! வரட்டுமா?'' என்று மெல்ல எழுந்தாள்.

''அவசரமாகப் போக வேண்டுமா?'' என்று கேட்ட செல்வநாயகியின் முகம் லேசாக வாடியது. ஒரு பெருமூச்சுடன், ''ஆனால், அவரவருக்கு எத்தனையோ வேலைகள். என் இதத்துக்காக, உங்களை இங்கே பிடித்து

வைக்கக்கூடாது!'' என்று கூறியவாறு எழுந்தவளின் முகத்தில், யோசனை தோன்றியது.

''இங்கே எனக்கு ஒரு குழப்பம், சுந்தரிம்மா. நீயோ, மிகவும் புத்திசாலியாக இருக்கிறாய். ரொம்ப அவசரம் இல்லை என்றால், இதிலும் எனக்கு ஒரு யோசனை சொல்லிவிட்டுக் கிளம்பேன். உடனே, சொல்ல வேண்டும் என்றுகூட, இல்லை. இரண்டு, மூன்று நாட்கள் யோசித்து, அதன் பிறகு சொன்னாலும் போதும்!'' என்று, குரலில் சிறு கெஞ்சுதலோடு கேட்டாள்.

சுந்தரிக்கு உள்ளூரத் திகைப்புதான்.

இந்தப் பெரிய வீட்டுப் பெண்மணிக்கு என்ன பிரச்சினையோ, என்னவோ? ஏதோ ஆறுதலாக அவள் சொன்ன சில வார்த்தைகளில் மனப் பாரம் குறையப் போக, அவளை உலக மகாப் புத்திசாலியாகக் கருதி, பெரிய பெரிய நிதி விவகாரங்களில் செல்வநாயகி அவளிடம் ஆலோசனை கேட்டால் என்ன செய்வது?

தப்புத் தப்பாக ஏதாவது சொல்லி, உள்ள நிலையை யும் கெடுத்து விடக் கூடாதே!

தன் திறமையைப் பற்றித் தெளிவாகத் தெரிவித்து விட வேண்டும் என்று கருதி, ''ஆன்ட்டி, நான் ஒன்றும்...'' என்று சுந்தரி தொடங்கியபோது, அவளது பேச்சில் ரஞ்சிதம் குறுக்கிட்டாள்.

அவளுக்கு, வந்த விவகாரத்தைத் தொடங்கக்கூட இல்லாமல், வீடு திரும்பக் கொஞ்சமும் விருப்பம் இல்லை! தன்னிடம் கலந்து கொள்ளாமல், சுந்தரி கிளம் பியது கோபமே. எனவே, செல்வநாயகியின் பேச்சைக் கப்பெனப் பிடித்து, ''என்ன வேண்டுமானாலும்

கேளுங்கள், மேடம்! எங்கள் சுந்தரி நிறுவன நிர்வாகம் பற்றிப் படித்தவள். இயல்பாகவே புத்திசாலியாகவும் இருப்பதால், உங்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும், அது பணப் பிரச்சினை என்றாலும், அவள் தீர்த்து வைப்பாள்!'' என்று, வேக வேகமாக விளம்பினாள்.

மறுத்துப் பேசாதே என்பதுபோல, முதுகுப்புறம் ஒரு கிள்ளல் வேறு.

ரஞ்சிதத்திடம், சுந்தரி இவ்வளவு கோபம் கொண்டதே இல்லை எனலாம். இந்த நேரத்தில் பணம் பற்றிப் பேசியது, எவ்வளவு அசிங்கம்!

ஆனால், இவ்வளவுக்கு மேல், பிடிவாதமாகக் கிளம்பவும் முடியாமல், உள்ளூரப் புகைந்தபடி, அவள் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு நிற்கும்படி ஆயிற்று.

''கடவுள் புண்ணியத்தில், பணம் பற்றி, ஒரு பிரச்சினையும் இல்லைம்மா!'' என்று செல்வநாயகி பதிலிறுத்தது, உள்ளூர அவளுக்கு மகிழ்ச்சியாகக் கூட இருந்தது.

தொடர்ந்து, ''என் தந்தையே அதுபற்றி நிறைய ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார். இப்போது... இப்போது அக்கா, அத்தானும்கூட, எனக்குத்தான் எல்லாவற்றையும் தந்திருப்பதாக, வக்கீல் வந்து சொல்லி விட்டுப் போனார்!...'' என்று கூறியவள், மறைந்தவர்களைப் பற்றிக் குறிப்பிட்டபோது சற்றே நடுங்கிய குரலைச் சரிப்படுத்திக்கொண்டு, மேற்கொண்டு சொன்னாள்.

''என் பிரச்சினை பணம் அல்லம்மா, இந்த வீடுதான். நாங்கள் மூன்று பேருமாக இருந்தபோது ஒன்றும் தெரியவில்லை. ஆனால், இப்போது இவ்வளவு பெரிய

வீட்டில்... தனியாக இருக்க ஒரு மாதிரி இருக்கிறது. இந்த வீட்டை விட்டு, வேறே எங்கேயும் போகவும், என்னால் முடியாது! ரொம்பப் பெரிய வீடு. முன்பே பெரும் பகுதியைப் பூட்டித்தான் வைத்திருந்தோம் என்றாலும், பூட்டிக் கிடப்பதைப் பார்க்கும்போது இப்போது கஷ்டமாக இருக்கிறது. நான் ஒரு பகுதியில் இருந்து கொண்டு மீதியை உபயோகமாக எதற்கேனும் கொடுக்க லாம் என்று டாக்டர் சொன்னார். எவ்வளவு யோசித்தும், என்ன செய்வது என்று, எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதுதான் என்ன செய்யலாம் என்று உனக்கு ஏதாவது யோசனை தோன்றினால், சொல்லுகிறாயாம்மா?"

வியப்பும் பிரமிப்புமாக, அத்தையும் மருமகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 7



சுந்தரி, ரஞ்சிதம் இருவர் முகங்களிலும் தென்பட்ட பாவங்களும், அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட விதமும் செல்வ நாயகியைக் குழப்பத்தில் ஆழ்த்தின.

"என்னம்மா குழந்தை?" என்று அவள் புரியாமல் கேட்க," சொல்லு, சொல்லு!"ன்னு அண்ணன் மகளை ஊக்கினாள் ரஞ்சிதம்.

ரஞ்சிதத்துக்கு இருந்த ஆர்வத்தில், அவளே சொல்லி யிருப்பாள். ஆனால், செல்வநாயகிக்கு என்னமோ, சுந்தரியைப் பிடித்துப் போனதுபோலத் தோன்றவே, சின்னவளின் வாயிலிருந்தே கோரிக்கை வெளிவந்தால், காரியம் நிச்சயமாக நடக்கும் என்று தோன்றவும், தார்க் கோலிடாத குறையாக, மருமகளை ஊக்கினாள்.

வீட்டுக்காரப் பெண்மணியே, இப்படியொரு வாய்ப்பை முன் வைத்த பின், கேளாதிருக்கச் சுந்தரிக்கும் மனமில்லை.

அவர்களாகத் தொடங்குவதுதானே அநாகரீகம்! இப்போது, பழம் நழுவிப் பாலில் விழுகிற மாதிரி, அந்த வீட்டு அம்மாவே இது போலக் கேட்ட பிறகு, சும்மா இருப்பதுதான் முட்டாள்தனம்.

முதியவளைப் பார்த்து முறுவலித்து, "பாருங்கள் ஆன்ட்டி, இதை நீங்களாகத் தொடங்கியிராவிட்டால், இன்றைக்கு இது பற்றி நான் கேட்டிருக்கவே மாட்டேன். அதனால், எங்களைத் தவறாக நினைக்க மாட்டீர்கள் என்று நம்பிச் சொல்லுகிறேன். பாருங்கள் ஆன்ட்டி. இந்த வீடு போலப் பெரிய இடம் ஒன்று எங்கள் ஹோட்டலுக்காக ரொம்ப காலமாகவே, எங்களுக்குத் தேவைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது!" என்று தொடங்கினாள்.

"இந்த இடமா? ஹோட்டலுக்கா? இதில் ஹோட்டல் எப்படி முடியும்? எனக்குப் புரியவில்லையே!" என்ற செல்வநாயகிக்கு, மீண்டும் குழப்பம்தான்.

"நன்றாக முடியும்!" என்று ஆர்வத்துடன் குறுக்கே புகுந்தாள் ரஞ்சிதம். "இந்த ஹாலைப் பாருங்கள்! எவ்வளவு பெரியது! ஒரு புறத்தை வரவேற்புக்குப் பயன்படுத்தலாம். ஒரு புறம் சோஃபா நிறையப் போட்டு, வருகிறவர்கள் உட்கார்ந்திருக்கப் பயன்படுத்தலாம். அப்புறம், இரு புறமும் வளைந்து செல்லும் மாடிப்படிகள். கீழே சுற்றிலும் இருப்பது போலவே மேல் தளத்திலும் நிறைய அறைகள். பழைய

ஆங்கிலேயர் பாணிக் கட்டடம். குளியலறை வசதிகள் இருக்கும். கொஞ்சம் செலவு பண்ணினால் அத்தனையையும் டபுள் ரூமாக்கி வாடகைக்கு விடலாம்!'' என்று அவள் பல காலமாகத் தீட்டி வந்த திட்டங்களை மளமளவென்று கடை பரப்பினாள்.

அந்தத் திட்டங்களில் என்றுமே இருந்திராத, இப்போதும் இல்லாத ஒரு குறையைக் கண்டுபிடித்து, ''ஆனால், இதில் நான் எங்கே இருப்பது?'' என்று கேட்டாள் அந்த இடத்தின் உரிமைக்காரி.

ரஞ்சிதம் திகைத்தாள். இந்தம்மாளை, அவள் நினைத்துக் கூடப் பார்த்தது இல்லையே! விற்றுவிட்டுப் போவதை விட்டு, இது என்ன தொல்லை?

ஆனால், செல்வநாயகியின் கவலை உணர்ந்தவளாகச் சுந்தரி பதில் சொன்னாள். ''இங்கேயேதான், ஆன்ட்டி! உங்களுக்குக் கூடுதலாக இரண்டு அறைகள் சேர்த்து, புழங்கும் இடம் நிறைய இருக்கும்படி, வசதியாகப் பண்ணி விடலாம். அதுபோல, ஹோட்டலுக்குள் இருக்கப் பிடிக்கவில்லை என்றால், வெளியே, தோட்டப் பகுதியில் தனியாக ஒரு சிறு வீடாகவே கட்டிக் கொள்ளலாம்! அப்புறம், உங்களுக்கும் உங்கள் வேலையாட்களுக்கும் சேர்த்து, ஹோட்டலிலேயே சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணிக் கொள்ளலாம். கட்டடத்தின் பராமரிப்பு, தண்ணீர் வசதி, மின்சார வேலை என்று, எந்தக் கவலையும் இல்லாமல், நீங்கள் நிம்மதியாக இருக்கலாம்!'' என்றாள் சுந்தரி!

கற்பனையில் தோன்றிய சித்திரம் மனதுக்குப் பிடித்தது போலச் செல்வநாயகியின் முகத்தில் லேசாகப் புன்னகை தோன்றியது.

"சின்னப் பெண், நீ சொல்லும்போது எல்லாம் எளிதாகத்தான் தெரிகிறது. ஆனால், இதுவரை வீடாக இருந்ததை, ஹோட்டலாக எண்ணிப் பார்க்கத்தான், என்னால் முடியவில்லை. சரியாக வருமா.. என்று ஒரே குழப்பமாக இருக்கிறது!" என்று இன்னமும் மனதுள் ஏற்றுக் கொள்ள முடியாமல், பெரியவள் திணறினாள்.

"அதெப்படிச் சரியில்லாமல் போகும்? எல்லாம் கண்டிப்பாகச் சரியாக வரும்!" என்று அழுத்திச் சொன்னாள் ரஞ்சிதம். "எத்தனை ஆண்டுகளாக நான் திட்டமிட்டது, தெரியுமா? இந்த வீட்டைப் பார்க்கும் போதெல்லாம், எனக்கு ஹோட்டலாகத்தான் தெரியும். எங்கெங்கே, என்னென்ன மாதிரி மாற்றலாம் என்று யோசிப்பேன். அண்ணன்கூட, இப்படி அடுத்தவர் இடத்தைப் பற்றி அசட்டுத் தனமாகத் திட்டம் போடாதே, பிற்பாடு இல்லை என்று ஆனால், வேதனையாக இருக்கும் என்பார். ஆனால், நான் விடவில்லையே! எப்படியும், என் எண்ணம் போல நடக்கும் என்ற நம்பிக்கையை நான் இழந்தது இல்லை. அதுவே சரியாக இப்போது பலித்து விட்டதே!" என்று பூரித்தாள்.

அத்தை, அவசரப்பட்டு, அதிகப்படியாகப் பேசுவது போலச் சுந்தரிக்குத் தோன்றியது.

அதற்கு ஏற்றாற்போலச் செல்வநாயகியும் ரஞ்சிதத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு, "டாக்டர் சொன்ன மாதிரி, மற்றவர்களுக்கு உபயோகமானதாக இருக்க வேண்டும் என்று, பள்ளிக்கூடம், கல்லூரி, கைத்தொழில் கற்பிக்கும் இடம்.. என்று, நானும் எத்தனையோ யோசித்துப் பார்த்தேன். ஆனால் எது சரி என்று என்னால், ஒன்றும் தீர்மானிக்க முடியவில்லை. இதோடெல்லாம், நானும்

கூட இருப்பது சரி வராதோ என்று தோன்றியது. ஆனால் பயன்படும் விதமாக என்று பார்த்தால், இப்போதும்...'' என்று யோசனையோடு இழுத்தாள்.

அதிர்ந்து போய் ஏதோ சொல்ல முயன்ற ரஞ்சிதத்துக்கு, இப்போது வாயில் வார்த்தை வர மறுத்தது.

அத்தையின் நிலையை உணர்ந்து, சுந்தரி கை கொடுத்தாள்.

''ஹோட்டல் என்பதும், மற்றவர்களுக்கு உதவுகிற பணிகளோடு சேர்ந்ததுதான், ஆன்ட்டி. வயிற்றுக்கு உணவையும், உள்ளத்துக்கு உற்சாகத்தையும் சேர்த்து அளிப்பது!'' என்று தொடங்கி, அதற்கு விளக்கமும் கொடுத்தாள். ''ஆன்ட்டி, நாம் ஹோட்டலுக்கு எப்போது, எதற்குப் போகிறோம்? அலைந்து திரிந்து உடம்பு அசந்து போகும்போது, ஆசுவாசமாக ஒரு காபியைக் குடித்துத் தெம்பேற்றிக் கொள்ளலாம். பசியின் சோர்வைப் போக்கிக் கொள்ளலாம். எங்கெங்கிருந்தோ வருகிறார்கள். நகரத்துக்குப் போக்குவரத்து நெரிசல், புகை தூசுக்குள் செல்லுமுன், இங்கே நம் ஹோட்டலில் இறங்கி, ஒரு காபி, டிபன் சாப்பிட்டுப் புது உற்சாகத்துடன் கிளம்பிப் போவதை, நானே பார்த்திருக்கிறேன். சுத்தமான காற்று, சுற்றுப்புறச் சூழலை அனுபவித்தபடி இங்கேயே தங்கியிருந்து, மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், சமயபுரம் என்று சென்று வருகிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்க இடம், சாப்பாடு எல்லாம் தருகிறோம். வயிற்றுக்கு உணவும், தங்குதற்கு இடமும் தருவது எவ்வளவு உன்னதமான பணி! இதைவிட, வேறு எந்த வகையில், உங்கள் வீடு பிறருக்குப் பயன்பட முடியும், சொல்லுங்கள்?''

அத்தோடு, செல்வநாயகியின் குழப்பம் தீர்ந்தாயிற்று!

"சரிம்மா. நான், எங்கள் வக்கீலுக்குச் சொல்லி அனுப்புகிறேன். அவர் வந்ததும் எல்லா விவரங்களையும் அவரோடு கலந்து பேசிவிட்டு, அவர் அபிப்பிராயப்படி முடிவு செய்வோம்!" என்றாள் செல்வநாயகி.

"வந்து... அவர் சொல்லுகிறார் என்று, அவருக்கு வேண்டிய யாருக்கேனும் கொடுத்துவிட மாட்டீர்களே? ஏனென்றால், இடமில்லை என்பதால், நிறையப் பேரை ஏமாற்றத்தோடு திருப்பி அனுப்ப வேண்டி இருக்கிறது. இது கிடைத்தால், அவர்களுக்கும் சேவை செய்யலாம் அல்லவா? அதற்காகத்தான், இவ்வளவு ஆர்வமாகக் கேட்கிறோம். விஷயம் தெரிந்து, உங்கள் வக்கீலிடம் கூட, எத்தனை பேர் சொல்லி வைத்திருக்கிறார்களோ? அவர்களில் யாருக்கேனும் வக்கீல் வாக்குக் கொடுத்திருந்தால்..." என்று கவலையுடன் கேட்டாள் ரஞ்சிதம்.

"வேண்டிய.. சேச்சே! எங்கள் வக்கீல் அப்படி யாருக்கும் தனிப்படச் சலுகை செய்கிறவர் அல்ல. அவரை முழுக்க நம்பலாம் என்று... அத்தான் சொல்லுவார்! இப்போதைக்கு எனக்கு இழப்பு நேராதிருக்க வேண்டும் என்று மட்டும்தான், வக்கீல் பார்ப்பார். அவர் பார்த்து என்ன சொன்னாலும், அதை உங்களிடம் தெரிவிக்கிறேன். நீங்களாக வேண்டாம் என்றால் மட்டும்தான், வேறு யோசிப்பேன். போதுமா?"

அடிக்கடி வந்து போகுமாறு கூறிச் செல்வநாயகி வழியனுப்ப, அத்தையும் மருமகளும் மிகுந்த திருப்தியுடனேயே அங்கிருந்து கிளம்பினர்.

எண்ணி வந்தது, எதிர்பார்ப்புக்கு மேலாகவே நிறை வேறிவிட்ட மகிழ்ச்சி அவர்களுக்கு.

அது பற்றிப் பேசியவாறு செல்லும்போது, "பெரிய வீடு பற்றிப் பேசும்போதெல்லாம், நான் என்னவோ, ஒரு பேராசைக்காரி மாதிரி, உன் அம்மாவும், அப் பாவும் குறிப்பாக ஏதாவது சொல்லுவார்கள். இருக் கட்டும். இப்போது, இங்கே நடந்ததைக் கூறும்போது, இருவரின் முகங்களும் எப்படித்தான் இருக்கப் போகிறதோ, பார்க்கிறேன்!" என்று, ரஞ்சிதம் ஒரு விதமான எக்களிப்புடன் கூற, அவளோடு வீடு திரும்பும் ஆர்வம், சுந்தரிக்குக் குறைந்து போயிற்று.

உண்மையான பாசம் உள்ளவள்தான். ஆனாலும் ரஞ்சிதம் எப்போதுமே, கொஞ்சம் அதிகம் பேசுகிறவள் தான். அவளது சிறு வயதுத் தோல்விகளை எண்ணி, எல்லோருமே, அவளை அனுசரித்துப் போவதும் பழக்கமே. ஆனால், இப்போது அத்தையின் குத்தலில், தாயின் முகம் எப்படி மாறக் கூடும் என்று தெரிந்த சுந்தரிக்கு, அந்த முகத்தைப் பார்க்க மனமில்லை.

எனவே, "இப்படியே இந்த மாலைக் காற்றில், கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வருகிறேன், அத்தை. நீங்கள் வீட்டுக்குப் போங்கள். ஆனால், அத்தை! வீட்டில் கொஞ்சம் அடக்கியே வாசியுங்கள். இன்னமும், வக்கீ லின் ஆமோதிப்பு ஒன்று பாக்கி இருப்பதை மறக்க வேண்டாம்!" என்று நினைவுறுத்திவிட்டு, ஓடையோர மாக நடக்கத் தொடங்கினாள்.

"ரொம்ப நேரமாக்கி விடாதே!" என்று மட்டும் எச்சரித்துவிட்டு, ரஞ்சிதம் வீடு நோக்கிப் போனாள்.

ரஞ்சிதத்தின் பேச்சைக் கட்டுப்படுத்துவதற்காக, வக்கீலின் பெயரைப் பயன்படுத்தினாளே தவிர, ஹோட்டலுக்குப் பெரிய வீடு கிடைக்கும் என்பதில், சுந்தரிக்குச் சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை.

எனவே, தன் படிப்பைப் பயன்படுத்தி என்னென்ன செய்யலாம் என்று, யோசித்தபடி அந்தக் கனவுகள் தந்த துள்ளலுடனேயே நடையைத் தொடர்ந்தாள் அவள்.

இந்திரபுரியில் ஒரு புறமாகச் சென்று, ஓடை, நெடுஞ்சாலைப் பாலத்தை அடையும்.

இந்தப் பாலத்தில் இருந்து தொடங்கியதுதானே, எல்லாமே என்று எண்ணும்போது, தங்கள் வளர்ச்சியை நினைத்து, அவளுக்கு ரொம்பவே சந்தோஷமாக இருந்தது.

ஓடையில் சலசலத்த நீரையும் கரையோரமாக வளர்ந்திருந்த செடிகொடிகளின் அழகையும் ரசித்தபடி சென்றவள், எதிர்ப்புறமிருந்து வந்து கொண்டிருந்த மனோகரனைப் பார்த்ததும் மகிழ்ச்சியோடு புன்னகை பூத்தாள்.

அதன் எதிரொலியே போல, அவன் முகத்திலும் முறுவல் விரிந்தது.

''தினமும், இப்படி ஓர் அழகான பெண் சிரித்துக் கொண்டு வந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்றான் அவன்.

''ம்ம்? அழகான பெண்ணா? அப்படியெல்லாம் சொல்லிக் கொள்வது, தற்பெருமை என்று யாரோ சொல்லிக் கேட்டதாக, எனக்கு நினைவு வருகிறதே!'' என்று சுந்தரி சின்னச் சிரிப்புடன் நினைவூட்டினாள். ''ஆனால், இப்போது, அவர்களே வேறு சொல்கிறார்கள்?''

"வேறு சொல்லவில்லை! வெளிச்சத்தில் பார்த்துச் சொல்லுவதாகச் சொன்னேன். பார்த்தேன். சொல்லி விட்டேன். அழகாயிருப்பதாக!" என்று புன்னகை யுடனேயே பதில் சொன்னான் அவன்.

கிண்டலாகவே அவனுக்குப் பதில் ஏதாவது சொல்ல வேண்டும் என்று முயன்ற போதும், ஏனோ, சுந்தரியால் ஒன்றும் பேச முடியவில்லை.

கன்னங்கள் லேசாகக் கதகதப்பதை உணர்ந்தவாறு, ஏதோ பூவைப் பார்ப்பது போலத் திரும்பிக் கொண்டாள்.

அவளது மனநிலையை உணர்ந்தவன் போல, அவளை வம்புக்கிழுத்தான் மனோகரன். "என்ன, படபடவெனப் பொரிகிறவள், பேச்சையே காணோமே!" என்றபோது அவனது குரலே நகைத்தது.

ஒருவாறு சுதாரித்துக் கொண்டு, "என்னவா, ஒரே சந்தோஷமாக வந்தீர்களே, என்ன காரணமோ, என் னவோ, சொல்லவே காணோமே என்று யோசித்துக் கொண்டிருந்தேன்!" என்றாள் அவள்.

"உன்னிடம் சொல்லாமலா?" என்று அவன் கேட்ட விதம், அவளது கன்னங்களை மேலும் சிவக்க வைத்தது.

அவனிடம் காட்டிக் கொள்ளாமல், பூவை வருடிய வாறே, "ஆனால் சொல்லக் காணோமே!" என்றாள் சுந்தரி.

"சொல்லத்தான் போகிறேன். என்னுடைய லட்சியக் கனவு, உனக்குத் தெரியும் அல்லவா? தனிமையில் தவிக்கும் அந்த வயதான பெரியவர்கள்... அவர்களை ஒருவருக்கொருவர் துணையாக, அருகருகே வசிக்கும் படியாக ஓர் ஏற்பாடு செய்ய வழி கிடைத்திருக்கிறது.

ஒரு நர்சையும் அங்கேயே குடியிருக்க வைத்துவிட்டால், அவசர மருத்துவ வசதியோடு, அவர்கள் கடைசிக் காலத்தை மகிழ்ச்சியோடு கழித்து முடிப்பார்கள்!'' என்று, மலர்ந்த முகத்தோடு கூறி முடித்தான் மனோகரன்.

''ஓ, வாழ்த்துக்கள்!'' என்றாள் அவள் உண்மையான மகிழ்ச்சியோடு!

தனிமையில் உழன்று மடிந்த ஒருவரை எண்ணி, மனோகரன் எவ்வளவு வருத்தப்பட்டான் என்பது, அவளும் அறிந்த விஷயம்தான்.

அந்த வருத்தம் தீர, அவனுக்கு ஒரு வழி கிடைக்கும் என்றால், அவளுக்கும் ஆனந்தம்தானே!

தன் மகிழ்ச்சியைப் பற்றி, மனோகரனிடம் சொல்ல லாமா என்று யோசித்துவிட்டு, அந்த எண்ணத்தைக் கைவிட்டாள் சுந்தரி.

மகிழ்ச்சிக்குக் காரணம் ஹோட்டல்.

ஹோட்டலைப் பற்றிச் சொல்வதானால், அவள் யார் என்றும், அவனிடம் சொல்ல வேண்டியிருக்கும். அதை அவன் என்ன மாதிரி எடுத்துக் கொள்வானோ? அது தெரியாத நிலையில் எப்படிச் சொல்வது?

ரஞ்சிதத்தைப் பற்றி மனோகரன் கூறியது நினைவு வர, அத்தையோடு சேர்த்துத் தன்னையும் அவன் ஒதுக்கி விடுவானோ என்று தயக்கம் வந்தது.

இன்னும் கொஞ்ச நாள் கழித்துச் சொல்லலாம் என்று தோன்றிவிட, தன்னைப் பற்றிய பேச்சை விடுத்து, ''நீங்கள் எங்க இந்தப் பக்கம்?'' என்று வினவினாள்.

''நான் வந்தது இருக்கட்டும். நீ என்ன, இந்த நேரத்தில் இந்தப் பக்கம்? வேலை நேரம் என்பதெல்லாம் உனக்கு

மட்டும் கிடையாதா, அல்லது, நான் சொன்னது போல, வேலையை விட்டு விட்டாயா?'' என்று ஆர்வத்துடன் கேட்டான் அவன்.

''ரொம்ப ஆசைதான். ஆனால், எனக்கு வேலைக்கு நேரமாகிறதுப்பா. இப்போதே, வேக வேகமாகப் போனால்தான் சரியாக இருக்கும். அதனால், நான் உடனே கிளம்புகிறேன். பை!'' என்றவள் வீட்டுப் பாதையில் திரும்பி, விரைந்து செல்லலானாள்.

புன்னகையோடு பார்த்திருந்து விட்டு, மனோகரன் செல்வநாயகியின் வீட்டை நோக்கி நடக்கலானான்.

டாக்டரைக் கண்டதும், செல்வநாயகிக்கு ஒரே சந்தோஷம்.

''வாருங்கள் டாக்டர், வாருங்கள். உட்காருங்கள். உங்கள் தலையைத் தூரத்தில் பார்த்ததுமே, காபி போடச் சொல்லிவிட்டேன். உங்கள் ஆலோசனைப்படி ஓர் அருமையான வேலை செய்து விட்டேன், தெரியுமா? அந்தப் பக்கம் ஹோட்டல் அமுதம் என்று இருக்கிறதே. அதில் விரிவாக்கத்துக்குப் பெரியதாக இடம் வேண்டும் என்று இந்த வீட்டைக் காட்டிக் கேட்டார்கள். சரியென்று விட்டேன்!'' என்றாள் குதூகலத்துடன்.

''என்னது? ஹோட்டலுக்கா?'' என்று அதிர்ந்தான் மனோகரன்.

## 8



''ஆமாம் டாக்டர். அன்றைக்குச் சொல்லிவிட்டுப் போனீர்களே... 'நீங்களும் இருந்து கொண்டு, மீதி இடத்தை மற்றவர் களுக்கும் பயன்படுகிற மாதிரி ஏதாவது பண்ணுங்கள்' என்று சொன்னது நினைவிருக்

கிறதா?'' என்று அவள் கேட்டுக் கொண்டு இருக்கும் போதே காபி வந்தது.

''காபியை சாரிடம் கொடுத்துவிட்டுப் போ, மாடத்தி!'' வேலையாளைப் பணித்துவிட்டுச் செல்வநாயகி மீண் டும் விஷயத்துக்குள் வந்தாள்.

''அந்த நிமிஷத்தில் இருந்து, எனக்கு அதே யோசனை தான். பள்ளிக்கூடம், அது இதென்று என்னென்னவோ நினைத்துப் பார்த்தால், ஒன்றுமே மனதுக்குச் சரியாகப் படவில்லை. அப்போதுதான், அந்த அமுதம் ஹோட்டல் வீட்டிலிருந்து வந்தார்களா.. அக்கா அத்தான் விஷய மாகத் துக்கம் கேட்கத்தான் வந்தார்கள்... அந்தப் பெண் பேசியது, மனதுக்கு ஆறுதலாக இருந்ததா? அவளிடமே என்ன செய்வது என்று கேட்டேனா, அவள்தான், இப்படி ஒரு நல்ல யோசனை சொன்னாள். காபி குடிக்கவில்லை? குடியுங்கள் தம்பி. ஆறிவிடப் போகிறது.''

''இருக்கட்டும், ஆன்ட்டி,'' என்றான் மனோகரன், சற்று இறுகிய குரலில். ''அமுதம் உரிமையாளர்கள், ஹோட்டலுக்கு வீட்டைக் கேட்டதில் அதிசயம் இல்லை. ஆனால், உபயோகமாக எதையாவது செய்வீர்கள் என்று நான் நினைத்தேனே!'' என்று அவன் கூறியது செல்வநாயகி அப்படிச் செய்யவில்லை என்று அடிக் கோடிட்டுத் தெளிவாகத் தெரிவித்தது.

சற்றுத் திகைத்துவிட்டு, ''ஹோட்டல் தொழில் அப்படித் தானே, தம்பி? எனக்குக்கூட முதலில் குழப்பம்தான். ஆனால், அந்தச் சின்னப் பெண்தான் எடுத்துச் சொன் னாள். பசித்த வயிற்றுக்கு உணவு தருவது உன்னதமான பணி என்று...'' என்று அவள் முன்பு கேட்டதைத்

திருப்பிப் படிக்கத் தொடங்கியபோது, மனோகரன் குறுக்கிட்டான்.

"சும்மாவா தருகிறார்கள்? ஒன்றுக்கு நாலு மடங்கு பணம் வாங்கிக் கொள்ளவில்லை? வெறும் வியாபாரம்!" என்றான், அவன் - ஆத்திரத்தை அடக்க முயன்றபடி.

செல்வநாயகி திகைத்து நோக்க, தொடர்ந்த சிறு அமைதியில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "நான் வேறு நினைத்தேன், ஆன்ட்டி!" என்றான் மனோகரன் மெல்லிய குரலில்.

"நீங்களுமா, தம்பி?" என்று கேட்டபோது, செல்வ நாயகியின் குரலில் வருத்தத்துடன், ஏமாற்றமும் இருந்தது.

மனோகரன் நிமிர்ந்து பார்க்கவும், "பல ஆண்டு களாக, இந்த வீட்டைப் பார்க்கும் போதெல்லாம், ஹோட்டலாக எப்படி யெப்படி மாற்றலாம் என்று திட்டமிட்டு வந்ததாக, அந்த ரஞ்சிதம் சொன்னாள். நீங்களும் அப்படித்தான் திட்டமிட்டீர்கள் போல்!" என்று, வாடிய முகத்துடன் உரைத்தாள்.

"நோ!" என்றான் மருத்துவன் - வலுவான ஒற்றைச் சொல்லாக.

"நிச்சயமாகக் கிடையாது, ஆன்ட்டி. அன்றைக்கு நீங்கள் தனிமையைப் பற்றிச் சொல்லி வருத்தப்பட்டு விட்டு, தொடர்ந்து இந்த வீட்டை என்ன செய்வது என்று கேட்கும்வரை, உங்களது இந்த வீட்டைப் பற்றி, நான் எந்த எண்ணமும் கொண்டது இல்லை. அப்போதும், எனக்காக நான் எந்த ஆசையும் படவில்லை. நீங்கள் மனது கலங்கி இருக்கும் வேளையில் எந்த யோசனை சொல்வதும் கண்ணியம் இல்லை என்று, அன்று

ஒதுங்கிப் போனது மட்டும்தான், நான் செய்த தப்பு!'' என்றான் அவன் கைப்புடன்.

மறுபடியும் படர்ந்த மற்றோர் அமைதியின் பின்னாக, ''நீங்கள் எதற்காக.... இந்த வீட்டை எதற்காகப் பயன் படுத்த எண்ணினீர்கள், தம்பி?'' என்று செல்வநாயகி விசாரித்தாள்.

மனோகரன் சொன்னான்.

''எனக்குத் தெரிந்து, எழுபது வயதுக்கு மேற்பட்ட ஒரு பதினைந்து பேர் இருக்கிறார்கள். தேடினால், இன்னும் எண்ணிக்கை பெருகும். மக்கள் வெளிநாட்டில் இருப்பவர்கள், குழந்தை இல்லாதவர்கள், உறவினரால் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள்.. இப்படி ஆளுக்கொரு கதை உண்டு. வயது காரணமான எத் தனையோ வேதனைகள் உண்டு என்றாலும், எல்லோருக் கும் பொதுவான நோய், தனிமை. எட்டிப் பார்க்கக் கூட, யாரும் இல்லாதது. அடுத்த தேவை, ஓர் அவசரத்துக்கு, அண்மையில் மருத்துவ வசதி. அவர்களுக்கு இங்கே இடம் கொடுத்து, பொருத்தமான ஒரு நர்சையும் குடியேற்றி விட்டால், அவர்கள் அத்தனை பேரின் பிரச்சினையும் தீரும் என்று எண்ணினேன்.''

''முதியோர் இல்லமா?''

''ஓரளவுக்கு. ஆனால் என்னுடைய இந்த வயதான நோயாளிகளில் பெரும்பாலோரிடம், பணத்துக்குப் பஞ்சம் இல்லை. அவர்களுக்குத் தனித் தனியாக அறை வசதியும், பணம் இல்லாதவர்களுக்குத் தனியாகப் பொது ஹால் மாதிரியும் ஏற்பாடு செய்யலாம் என்று எண்ணினேன். அவர்கள் எல்லோருக்குமே மிகவும்

தேவைப் படுவது, அவ்வப்போது இரண்டு வார்த்தை பேச, யாராவது மனிதப் பிறவி. ஆளுக்கு ஓர் இடத்தில் போய்ப் பார்ப்பதைவிட வாரம் ஒரு முறை இங்கே வந்து, அவர்களைப் பார்ப்பதில், எனக்கு நிறைய நேரம் மிச்சமாகும். அவர்களோடு கூடுதல் நேரத்தை என்னால் கழிக்கவும் முடியும். இப்படியெல்லாம் நினைத்தேன்.''

மனோகரன் சொல்லி முடிக்கையில், செல்வநாயகி யின் முகத்தில் கலக்கம் சூழ்ந்திருந்தது.

கைகளைப் பிசைந்தபடி, ''இப்போது என்ன செய்வது, தம்பி? வக்கீலைக் கேட்டுக் கொண்டு, முதல் வாய்ப்பை உங்களுக்குத் தருகிறேன் என்று, அவர்களிடம் சொல்லி விட்டேனே! முதலில் எனக்குக் கூட, நம் வீட்டில் ஹோட்டலா என்றுதான் இருந்தது. ஆனால் அவர்கள் ஹோட்டல் தொழில் பற்றியும் அருமையாகப் பேசி, எனக்கும் வேண்டிய வசதி செய்து தருவதாகச் சொன்னார்களா, அதுதான் சரி என்று தோன்றி விட்டது!'' என்றாள், செல்வநாயகி - வருத்தத்துடன்.

வயதில் முதிர்ந்தோருக்கு, மனோகரின் மனதில் தனி இடம் உண்டு. அவர்களது வருத்தம், அவனை ரொம்பவும் பாதிக்கும்.

அப்படியிருக்க, அவனே ஒரு மூதாட்டியை வருந்த விடுவானா?

எனவே செல்வநாயகியின் வருத்தம் பொறாமல், ''சரிசரி, விடுங்கள் ஆன்ட்டி. கொஞ்சம் தேடினால், இதுபோல இன்னோர் இடம் கிடைக்காமலா போகும்? பார்க்கலாம்!'' என்று பெரியவளைத் தேற்றிப் பேசினான்.

ஆனால், அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''வயதான பெரியவர்களுக்கு இப்படி ஏதாவது செய்ய

வேண்டும் என்பதுதான், உங்களது மிக முக்கியமான குறிக்கோள் என்பது போலத் தெரிகிறதே, தம்பி! அப்போதே சொல்லியிருந்தால்...'' என்று, இரங்கிய குரலில் கூறினாள் செல்வநாயகி.

''செய்திருக்கலாம், நாகரிகம், கண்ணியம் எல்லாம் பாராமல், அப்போதே பேசியிருந்தேன் என்றால், அது நடந்தும் இருக்கும். ஆனால், காசு வரும் என்றால், கண்ணியத்தைக் காற்றில் பறக்க விட்டுவிடும் அந்த ரஞ்சிதம்மா போன்றவர்கள், எங்கே எங்கே என்று நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருப்பார்கள் என்று யோசிக்க மறந்து விட்டேனே என்பதுதான், கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது!'' என்றான் மனோகரன்.

பொதுவாக, இவ்வளவு கடுமையாக அவன் பேசுவது இல்லை!

சற்று யோசித்துவிட்டு, ''அந்த ரஞ்சிதத்தின் பேச்சுக் காக, நான் முடிவெடுக்கவில்லை, டாக்டர் தம்பி. சொல்லப் போனால், அவளது பேச்சுக்குப் பிறகு, நான் கிட்டத்தட்ட மறுக்கிற நிலைதான். ஆனால், ரஞ்சிதத் தோடு வந்த அந்தச் சின்னப் பெண். அவளும் உங்களைப் போலவே, ஆன்ட்டி என்றுதான் என்னை அழைத்தாள். அழகு மட்டும் இல்லாமல், நல்ல அறிவோடு, அதே சமயம் பிரியத்தோடும் அவள் பேசிய விதத்தில்தான், எனக்கு ஹோட்டலுக்குக் கொடுக்கலாம் என்ற எண்ணம் வந்ததே! ரொம்ப அழகான பெண்ணும்கூட!'' என்றாள் செல்வநாயகி.

''அழகான சின்னப் பெண்ணா? அந்த வீட்டில் அப்படி யாரும் கிடையாதே! மூன்று பெரியவர்களும், படிக்கிற

இரண்டு பசங்களும்தான் இங்கே இருக்கிறார்கள் என்றுதானே, கேள்வி?'' என்றான் மனோகரன்.

''இல்லை, தம்பி! அவள் அந்த வீட்டுப் பெண்தான். அத்தை என்று ரஞ்சிதத்தை அழைத்தாளே! அவள்தான், தெள்ளத் தெளிவாக, மற்றவர்களுக்கு உணவும், உற்சாகமும் கொடுக்கிற தொழில் என்று, அழகாகப் பேசி, என்னை ஒப்புக் கொள்ள வைத்தாள். எனக்கும், தங்கும் இடம், உணவு எல்லாம் ஏற்பாடு செய்வ தாகவும், மற்ற நிர்வாகத் தொல்லைகள் எல்லாம் அவர்களே பார்த்துக் கொள்வதாகவும், அதனால் நான் நிம்மதியாக இருக்கலாம் என்றும் தெளிவாக எடுத்துச் சொன்னாள்... அவளது பெயர்கூடச் சுந்தரி என்று அவளைப் போலவே, அழகான பெயர்! ஏதோ நிர்வாகப் படிப்புப் படித்தவளாம்!''

மனோகரனுக்குத் தலைக்குள் ஒரு எரிமலை வெடித்தது.

சுந்தரி!

முதலில் இருந்தே, அவனை என்னமாக ஏமாற்றி இருக்கிறாள்!

அவன் யார் என்று தெரிந்து கொண்டதும், வேலைக்கு வந்ததாகப் பொய் சொல்லி...

இப்போதும், என்ன மாதிரி ஓர் உன்னதமான பணிக்காக அவன் தேர்ந்தெடுத்த இடத்தை, பணம் பண்ணுவதற்காகப் பயன்படுத்தப் பார்க்கிறாளே!

இதில் அவனுக்கு வாழ்த்துக்கள் வேறு!

அதுவும் பொய்யான வாழ்த்தே!

மலைக் கோட்டையில், சுந்தரியோடு சேர்ந்து சிரித்ததை எண்ணுகையில், உலகம் தெரியாத, இந்த அறுபது வயது மூதாட்டி, அவளது பேச்சில் மயங்கியதில் அதிசயம் இல்லை என்று தோன்றியது.

ஆனால், இப்போது...

இரண்டு பிரிவாகக் கிளம்பி, இடையே கிளை பிரிந்து செல்லும் அழகான மாடிப்படிகளும், மாடி இரண்டுடன் சேர்ந்து மூன்று தளங்களும், நிறைய அறைகளும், பெரிய ஹாலும்...!

இது போல ஓர் இடம், அவனுக்கு எங்கே கிடைக்கும்?

சட்டெனச் செல்வநாயகியைப் பார்த்து, "வக்கீலிடம் அபிப்பிராயம் கேட்டுச் சொல்வதாகத்தானே, அவர்களிடம் சொன்னீர்கள்? வக்கீல், உங்களுக்கு வரக் கூடிய பணக் கணக்கைப் பார்க்கக் கூடும். எதற்கும், ஒரு கட்டடக் கலை நிபுணரையும் கூப்பிட்டு ஆராயச் சொன்னால், இந்த வீடு எந்த நோக்கத்துக்குப் பெரிதும் பொருந்தும் என்று, கண்டு சொல்வார் அல்லவா? அதையும் கேட்டுக் கொண்டு, அதன் பிறகு அமுதம் ஹோட்டல்காரர்களுக்கு, உங்கள் முடிவைத் தெரிவிக்கலாமே!" என்றான் மனோகரன்.

சற்று யோசித்துவிட்டு, "நீங்கள் சொல்வதும் சரிதான், தம்பி!" என்றாள் செல்வநாயகி. "எங்கள் வக்கீலிடம் பேசி, அவரை உங்களிடம் தொடர்பு கொள்ளச் சொல்லுகிறேன். உங்களுக்குத் தெரிந்த, கட்டடம் பற்றிப் படித்த ஆள் யாராவது இருந்தால் அவரிடம் சொல்லுங்கள். நிபுணர் வந்து வீட்டைப் பார்க்கட்டும். அப்புறம், அவர் சொல்லுகிறபடி, கடைசி முடிவை எடுப்போம்."

செல்வநாயகியின் பேச்சை ஒத்துக்கொண்டு மனோகரன் சென்று விட்டபோதும், அவனால், சுந்தரியை மன்னிக்க முடியவில்லை.

இதன் காரணமாக, இரண்டு தினங்கள் சென்ற பின், திருச்சியில் காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்த மனோகரன், ஓரமாகக் காரை நிறுத்திவிட்டு, இறங்கி, மறுபுறமிருந்த பெரிய பல்பொருள் அங்காடி ஒன்றினுள் புகுந்தான்.

அங்கே அலங்காரச் சாதனங்கள் பகுதியில் எதையோ எடுத்துக் கொண்டிருந்த சுந்தரியிடம் சென்று, "ஓ! இதையெல்லாம் போட்டுத் தீட்டித்தான், மனதில் இருப்பதை முகம் காட்டி விடாமல், மற்றவர்களை ஏய்ப்பது, உன் வழக்கம் போல!" என்றான். மெல்லிய குரலில், தெளிவாக.

காதருகே கேட்ட குரலில் அவசரமாகத் திரும்பிய சுந்தரியின் முகம். மனோகரனின் பேச்சில் சட்டென மாறியது.

முகம் சிவக்க, "என்ன, ஏய்ப்பது அது இதென்று என்னென்னவோ உள... அர்த்தமில்லாமல் பேசுகிறீர்கள்!" என்றாள் அவள் ஆத்திரத்தோடு.

"அர்த்தம் இல்லாமலா? நீ தமிழ்ப் பெண்தானே! ஏய்ப்பது என்பதற்குக் கூடவா அர்த்தம் தெரியாது? ஏய்ப்பது என்றால், பொய்யான வார்த்தையாலோ, நடிப்பாலோ, ஒருவரை ஏமாற்றுவது - இப்போதேனும் தெரிந்து கொள். ஒருவேளை, அடிக்கடி செய்து செய்து ஏமாற்றுவதுதான் இயல்பு என்று ஆகி விட்டதோ?"

"ஏன், எப்படி எதில் நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்கிறீர்கள்?" என்று சினத்துடன் கேட்கும்

போதே, தான் யார் என்று, மனோகரனுக்குத் தெரிந்து விட்டது என்ற ஊகம் சுந்தரிக்குத் தோன்றிவிட்டது.

"ஆகா! ஒன்றுமே தெரியாத மாதிரி எப்படிக் கேட்கிறாய்! நீ யார் என்பதையே, மறைக்கவில்லை? வரவேற்புப் பெண்ணாம்! வேலைக்கு வந்தவளாம்! என்ன கதை!"

"உங்கள் குடும்பத்துக்கும், எங்கள் குடும்பத்துக்கும் ஆண்டுக் கணக்கில் ஆகாது. யார் என்று சொன்னால், வீண் எரிச்சல்தானே. அதற்காக மறைத்தால், என் னவோ, பஞ்ச மகாப் பாதகம் போல, ஏய்த்தேன், ஏமாற்றினேன் என்று, குற்றம் சாட்டுகிறீர்களே!" என்று ஓரளவு தணிவாகவே விளக்கம் கூறினாள் சுந்தரி.

ஆனால், மனோகரன் சமாதானமாவதாக இல்லை.

"அப்படிப் பார்த்தால், மலைக் கோட்டையில் சந்தித்த போதேனும், உண்மையைச் சொல்லியிருக்க லாமே! வார விடுமுறை என்று, அப்போதும், அதே பொய்யைத்தானே தொடர்ந்தாய்?"

"ஏன், அப்போது மட்டும், எங்கள் வீட்டாரிடம் நீங்கள் அன்பைக் கொட்டிக் கொண்டா இருந்தீர்கள்? உண்மை தெரிந்தால், முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடுவீர்களோ, அப்புறம் பேசவே மாட்டீர்களோ என்று சற்றுக் கவலையாக இருந்தது. அதற்கு ஏற்றாற் போல, நீங்களும் உடனேயே, அத்தை பற்றி மோச மாகப் பேசவில்லை?"

பிறகு பேச மாட்டானோ என்ற கவலையா?

சட்டென, மனோகரனின் மனம் இளகி, உடனேயே மீண்டும் கடினமடைந்தது.

இப்படி ஒரு வார்த்தையில் இளகி விடுவதா?

அன்றைக்கே, இவளிடம் வயதானவர்கள் பற்றிப் பேசியிருக்கிறான். அதற்குப் பிறகும், செல்வநாயகியிடம் போய், ஹோட்டலுக்குத் தருமாறு, ஒத்துக்கொள்ள வைத்திருக்கிறாளே!

''அப்படிப் பார்த்தாலும், வயதானவர்கள் பற்றிய என் முயற்சி உனக்குத் தெரியும் அல்லவா? அதன் பிற கும், அந்தச் செல்வநாயகி அம்மாவிடம் போய், அவர் கள் வீட்டை, உங்கள் ஹோட்டல் விஸ்தரிப்புக்காகக் கேட்டிருக்கிறாயே! கேட்டு, அழகாகப் பேசி, அவர்களை ஒத்துக்கொள்ள வைத்துவிட்டு, எனக்கு வாழ்த்து வேறு சொன்னாயே! இதற்குப் பெயர் என்னவாம்? சொல் லேன், பார்ப்போம்!''

அவனை விசித்திரமாகப் பார்த்துவிட்டு, ''உங்கள் நோக்கத்துக்காக, ஓடையோரத்து வீட்டைத்தான் கேட்கப் போவதாக, நீங்கள் எப்போதாவது குறிப்பாகவேனும், என்னிடம் தெரிவித்தது உண்டா?'' என்று சுந்தரி கேட்க, அந்த மருத்துவன் திகைத்துப் போனான்.

## 9



சுந்தரி அழுத்தம் திருத்தமாகக் கேட்ட பிறகுதான், அவளது கேள்வியில் உள்ள உண்மை, மனோகரனுக்கு உறைத்தது.

அவளிடம், அவன் அவ்வளவு தெளிவாகச் சொன்னது இல்லைதான்.

அதற்குள்ளாக என்னென்னவோ நடந்துவிட்டது.

நடந்ததை மாற்ற முடியுமா?

ஒருவேளை, அந்தப் பிரச்சினையின் தீவிரம் இவளுக்குப் புரிந்தால்...?

ஒரு கணம் யோசித்துவிட்டு, "உனக்கு அவசரம் இல்லை என்றால், என்னோடு வருகிறாயா? பேசிக் கொண்டே போகலாம். சில பேரைச் சும்மா ஒரு தரம் பார்த்துவிட்டு, அப்படியே இந்திரபுரியில் இறக்கி விடு கிறேன்," என்று, சுந்தரியை அழைத்தான் அவன். "உன் காரை அனுப்பி விடலாம்."

ஆங்கிலத்தில், 'ஆலிவ் பிராஞ்ச்' என்பார்கள், சமாதான முயற்சி.

டாக்டர் மனோகரனும் அதைத்தான் செய்ய முயற்சிக்கிறான் என்று சுந்தரி நினைத்தாள்.

எனவே, தான் வந்த ஹோட்டல் காரில், ஹோட்ட லுக்காக வாங்கிய சில மொத்தச் சாமான்களை மட்டும் ஏற்றி வைத்தாள். "இன்னும் கொஞ்சம் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதாகச் சொன்னேன் என்று வீட்டில் சொல்லிவிடு," என்று காரோட்டியிடம் கூறி அனுப்பி வைத்தாள்.

மனோகரன் சுந்தரியை முதலில் அழைத்துப் போன இடம், ஓர் எண்பது வயதுக் கிழவரின் இருப்பிடம்.

ஃப்ளாட்! வீடு வசதியாகத்தான் இருந்தது. கண்களில் ஒளி குன்றிக் கூன் விழுந்த முதுகுடன் காணப்பட்டார் அவர்.

சங்கிலி மாட்டிய கதவை, லேசாகத் திறந்து பார்த்த வரின் முகம், மனோகரனைக் கண்டதும், பிரகாசமுற்றது.

"வாருங்கள்.. வாருங்கள்!" என்று கதவைத் திறந்து விட்டு, அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார் பெரியவர்.

சோஃபாவில், அவர் உட்கார்ந்திருந்த இடம் அழுந்தித் தெளிவாகத் தெரிந்தது. பக்கத்திலேயே, ஒரு டீபாயில், ஒரு ஸ்டீல் ஃப்ளாஸ்க், பிஸ்கட் பாக்கெட், தண்ணீர் பாட்டில் எல்லாம் இருந்தது.

சுந்தரியின் பார்வையைக் கவனித்துவிட்டு, "காபிம்மா! சாதாரண ஃப்ளாஸ்க், ஐந்தாறு வாங்கிக் கீழே விழுந்ததில், உடைந்து போய்விட்டது! அதனால், இதை வாங்கி வைத்தேன். கை நடுக்கத்தில் விழுந்தாலும், உடையாது அல்லவா?" என்றபோது, அவளது உள்ளம் உருகியது.

கை நடுக்கத்தில், கண்ணாடி ஃப்ளாஸ்க் உடைந்த போது, காபியோடு விழுந்திருக்குமா?

கீழே தரையில் பரவிய காபியைப் பார்த்தபடி, பெரியவர் வருத்தத்துடன் உட்கார்ந்திருப்பது போலக் காட்சி தோன்றி, அவளை வருத்தியது.

"உங்களுக்குச் சமைத்துத் தருவது யார்?" என்று வினவினாள்.

"ஒருத்தனுக்கு என்று, யாரை அமர்த்துவதும்மா? அப்படியே வைத்தாலும், அந்த ஆளைக் கட்டி மேய்க்க வேண்டும்! கஷ்டம்! இங்கே, ஒரு வீட்டில் செய்து தருகிறார்கள். காபி வரை, இப்படிப் போட்டு வைத்து விடுவார்கள். தேவையான அளவு இருக்கிறது! ஆனால் சுவைதான்... சரிம்மா. என் புராணத்தை விடு. என்ன டாக்டர், காபி குடிக்கிறீர்களா? என்னம்மா, உனக்குக் கொஞ்சம் ஊற்றட்டுமா?"

"உங்கள் காபியை எங்களுக்குத் தந்துவிட்டு, அப்புறம் உங்களுக்கு என்ன செய்வீர்கள்?"

"பரவாயில்லைம்மா! காபி குடிக்கிற கொஞ்ச நேரம், டாக்டர் கூடுதலாக, இங்கே இருப்பார் அல்லவா? காபி சுகத்தைவிட, அது பத்து மடங்கு பெரிதாயிற்றே!"

"பத்து மடங்கா?"

"ஆமாம்மா! குறைந்தது பத்துத் தடவையாவது, மீண்டும் மீண்டும் நினைத்துச் சந்தோஷப்படுவேனே!"

வைத்தியம் செய்கிற மருத்துவன், அவன் வந்து, ஓர் ஐந்து நிமிஷங்கள் உரையாடுவதை இவ்வளவு ஆவலாக எதிர்பார்ப்பது என்றால், அவளுக்கு உள்ளே வலித்தது.

டாக்டர் திடுமெனத்தான் அவளை அழைத்தான். கூடவே இருந்ததால், இடையிலும் இந்தப் பெரியவ ரோடு பேசித் தயார்ப்படுத்த வழியில்லை. எனவே, இது உண்மைதான்!

"மற்ற வேலைகளுக்கு ஆள் இருக்கிறதா, சார்?" என்று விசாரித்தாள்.

"ஓ! காலை, மாலை இரு வேளையும் வந்து, பெருக் கித் துடைத்து, பாத்திரம் கழுவி விட்டுப் போவாள். வாரத்துக்கு ஒரு முறை, ஒட்டடை அடிப்பது, மிஷினில் துணி துவைப்பது. காலையில் துவைத்துக் காயப் போட்டு விட்டுப் போவாள். சாயந்திரம் வந்து மடித்து வைப்பாள்."

பெரியவரின் தேவையற்ற விளக்கங்கள் எதையோ சொல்லின.

கூடவே, தினமும் இரு வேளை பெருக்கித் துடைக் கும் வீட்டில், அங்கங்கே மூலை முடுக்குகளில் படிந் திருந்த தூசு, சுந்தரியின் மனதை உறுத்தியது.

சுமார் பத்து நிமிஷங்கள் அந்தப் பெரியவரோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு, இருவரும் கிளம்பினால், கிளம்புகிற நேரத்தில், அவருக்கு ஆயிரம் சந்தேகங்கள் தோன்றின.

மனோகரன் சிரித்த முகமாகவே அவரது சில கேள்வி களுக்குப் பதிலளித்துவிட்டு, ''மீதியை அடுத்த முறை கேளுங்கள், பாலு சார். அல்லது, அடுத்த தடவை பேசுவதற்கு விஷயம் ஒன்றுமே இராது!'' என்று கூறவும், அவர் அசடு வழிய விடை கொடுத்தார்.

மனோகரன் சுந்தரியை அழைத்துச் சென்ற அடுத்த இடமும், முன்னதைப் போலத்தான்.

ஆனால், இந்த வீட்டில் இருந்தது, ஒரு பெண்மணி.

எல்லா வகையிலும், கிட்டத்தட்ட, ஒரே மாதிரி அனு பவம் நேர்ந்தபோதும், மூலை முடுக்குகளில் இருந்த தூசியைக் காட்டி, ''வேலைக்காரி சரியாகவே சுத்தம் செய்ய மாட்டேன் என்கிறாள். சொன்னால், வேணுமானா, வேறே ஆள் வச்சுக்க என்கிறாள். முன்னே பின்னே வேலை செய்தாலும், இவளை நம்பலாம். என்னென்னவோ நடக்கிறதாகப் படிக்கிறோமே! புது ஆள் வைக்கப் பயமாக இருக்கிறது!'' என்றார், அந்த அம்மாள். ''முன்னெல்லாம் வீட்டைக் கண்ணாடி போல வைத் திருப்பேன். இப்போது என்னால் முடியவில்லையா, வேறு வழியில்லாமல் இந்தத் தூசுக்குள்ளேயே வாழப் பழகிக் கொள்கிறேன்!'' என்று, அவர் சேர்த்துச் சொல்லவும், சுந்தரிக்குப் பரிதாபத்தில் நெஞ்சு கனத்தது.

மீண்டும் காரில் ஏறுகையில், அது பற்றி, அவள் வருத்தத்துடன் கூற, தோளைக் குலுக்கி, ''ஏதோ, புரிந்து

கொள்ள முடிந்தால் சரி!'' என்றான் மனோகரன் சற்று விட்டேற்றியாக.

சட்டெனக் குளிர் நீரை எடுத்து முகத்தில் வீசி அடித்தாற்போலச் சுந்தரி உணர்ந்தாள்.

வெள்ளைக் கொடி காட்டுகிறான் என்று நினைத்தாளே! அவன் உள் நோக்கத்தோடு அழைத்து வந்தது புரியாமல், எப்படி ஏமாந்திருக்கிறாள்!

விரைப்புடன் நிமிர்ந்து அமர்ந்து, ''அப்படியென் றால் என்ன அர்த்தம்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

மீண்டும் தோளைக் குலுக்கிவிட்டுக் காரை எடுத்தான் மனோகரன். ''இந்த இரண்டு பேரைப் பார்த்தாயே! இவர்களைப் போல எத்தனை பேர், தெரியுமா? இவர் களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்ற வில்லையா?

''அதாவது, திட்டமிட்டுத்தான், இந்த வீடுகளுக்கு என்னைக் கூட்டி வந்தீர்கள்!''

''வேறு எப்படி உனக்குப் புரிய வைப்பது?''

''என்ன புரிய வைக்க வேண்டும்? இவர்களுக்காக இடம் தேடுகிற நீங்கள் மகா நல்லவர். ஹோட்டலுக்காக இடம் தேடியதால், நாங்கள் எல்லோரும் கெட்டவர்கள் என்றா? உங்களுக்குத் தெரியுமா, ஹோட்டல் நடத்து வதை, வெறும் பணம் சம்பாதிக்கும் தொழிலாக யாரும் சொல்லுவது இல்லை! சேவை தொடர்பான பணி களோடுதான் சேர்ப்பார்கள். மக்களின் பசி தீர்க்கும் பணி! உங்கள் மருத்துவப் பணி போலவே, அதுவும் உடம்புக்கும் மனதுக்கும் இதத்தைத் தருவது!''

"உன்னதமான மருத்துவப் பணியோடு காசு ஒன்றே குறியாக நடத்தும் உன் ஹோட்டல் தொழிலை ஈடு காட்டிப் பேச, உன் குடும்பத்தாரால் மட்டும்தான் முடியும்!" என்றான் மனோகரன் கோபமாக.

"காசுதான் குறியா? ரொம்பத்தான் மட்டம் தட்டிப் பேசுகிறீர்கள், சார்! ஏன் உங்கள் மருத்துவத்துக்கு நீங்கள் பணமே வாங்குவது இல்லையா? ஒரு மனிதப் பிறவி யின் வலியிலும், வேதனையிலும் பணம் சம்பாதிப்பது மட்டும் உன்னதமோ?" என்று திருப்பிக் கொடுத்தாள் சுந்தரி.

அவனும் கொதிநிலைக்குப் போயிருந்தான் போலும். "வாங்குகிறேன். ஆனால் இருப்பவர்களிடம் மட்டும். இல்லாதவர்களுக்கு, இலவசமாகவும் மருத்துவப் பணி செய்கிறேனே! உங்கள் ஹோட்டலில், அப்படி ஏதேனும் செய்வது உண்டா? வாங்கி வாங்கிக் கல்லாவை நிரப்பிக் கொள்வதோடு சரி! ஏதேனும் மிஞ்சினால்கூட, இன்னொன்றாக உரு மாற்றிப் பணமாக்கி விடுவீர் களாமே!" என்றான் அவன் எகத்தாளமாக.

"காரை நிறுத்துங்கள்!" என்று, சுந்தரி ஆத்திரத்தோடு கத்தினாள்.

"இறங்கும் இடம் இன்னும் வரவில்லை."

"உங்களோடு காரில் வருவதைக் காட்டிலும் பஸ்சில்... நடந்துகூடப் போகலாம். இப்போது நீங்கள், உடனே காரை நிறுத்தாவிட்டால், கதவைத் திறந்து, குதித்து விடுவேன். முதலில் காரை நிறுத்துங்கள்!" என்று அவள் ஒரேயடியாகக் கத்தவும், மனோகரன் காரை ஓரமாக ஒதுக்கி நிறுத்தினான்.

"இதோ பார், இது அசட்டுத்தனம்..." என்று அவன் கூறியதை அவள் காதிலேயே வாங்கவில்லை.

அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு இறங்கியவள், மிகுந்த சினத்துடன் அவனை நோக்கிச் சீறினாள். "அதாவது, நாங்கள் எல்லோரும் ஒட்டு மொத்தக் குடும்பமும் பணத்தாசை பிடித்தவர்கள். ஆனால், நீங்கள் எந்த மட்டும் உத்தம சிகாமணியாம்? ஓடையோரத்து வீட்டு ஆன்ட்டியிடம் மட்டும் பணமும், சொத்தும், உங்களுக்குத் தேவையான இடமும் இல்லை என்றால், அம்மாவும் மகனுமாக அங்கே போய்த் தவம் கிடப்பீர்களா? சும்மா, வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்கிற மாதிரி, என்ன வேண்டுமானாலும் பேசுவதா?"

அவள் பேசிக் கொண்டிருந்தபோதே, அவனும் வேகமாகக் காரிலிருந்து இறங்கி, அவள் அருகே சென்று, அவள் பேசி முடிக்கும்போதே, பதிலிறுக்கவும் தொடங்கி விட்டான்.

"அப்படித்தான், என்ன புளித்தது என்று அறியாமல் பேசக் கூடாது என்றுதான் நானும் சொல்லுகிறேன் - படித்து முடித்துத் தொழிலைத் தொடங்கியதிலிருந்து, இன்றைக்கு வரைக்கும், ஒரு மருத்துவனின் கண்ணியத்தை, நான் என்றைக்குமே குறையாமல் காப்பாற்றி வந்திருக்கிறேன். தனக்கென்று இருந்த உறவுகள் அனைத்தையும், ஒரேயடியாகத் திடுமென இழந்து தன்னிலை தளர்ந்து தனிமையில் தவித்துக் கொண்டிருந்த ஒரு முதிய பெண்மணிக்கு ஒரு நாள் இரவு துணையிருந்ததுதான் என் தாயார் செய்தது.

அதுவும், மருத்துவனாக அந்த ஆன்ட்டியின் நிலைமையை நன்கு உணர்ந்த என் வேண்டுகோளுக்காக. இதைப் போய்க் கேவலமாகப் பேசுவதா? எந்த இழி வேலை செய்யவும், என் தாயாருக்கு நேரம்கூடக் கிடையாது. தெரிந்து கொள்!'' என்று ஆத்திரத்துடன் கூறினான் அவன்.

''வலிக்கிறதல்லவா? உங்கள் அம்மாவைச் சொன்னால் மட்டும் ஆத்திரம் வருகிறதல்லவா? நீங்கள் மட்டும் என் குடும்பத்தைப் பற்றிப் பேசலாமா?'' என்று சுந்தரி கேட்கவும், ஒரு கணம் மனோகரன் வாயடைத்து நின்றான்.

அதன்பின், ''தப்புத்தான்!'' என்றான் தணிந்த குரலில்.

சில வினாடி அமைதியின் பின், இருவருமே, அவரவர் மற்றவர் குடும்பம் பற்றிப் பேசியதற்காக அடுத்தவரிடம் ஒரு விதமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, மீண்டும் காரில் ஏறிக் கிளம்பினர்.

இந்திரபுரி எல்லையில் சுந்தரியை இறக்கிவிட்டு, ''இன்று சந்தித்தவர்களைப் பற்றி யோசித்துப் பார்த்து, நல்ல முடிவுக்கு வருவாய் என்று எதிர்பார்க்கிறேன்,'' என்றான் டாக்டர்.

சுந்தரியின் உள்ளே ஓர் உறுத்தல் இருக்கத்தான் செய்தது. ஆனால், அவன் அதைக் குறிப்பிட்டுப் பேசவும் எரிச்சல் தான் ஏற்பட்டது.

என்னமோ தான்தான் உலக ரட்சகன் போல, அலட்டுகிறானே என்கிற ஆத்திரம் சுருசுருவென்று தலை தூக்கியது. எனவே, ''என்ன முடிவு?'' என்று எடுப்பாகக் கேட்டாள்.

ஒரு வேகப் பெருமூச்சுடன், ''அதை உன் மனச் சாட்சிதான் சொல்ல வேண்டும்!'' என்று விட்டுக் காரை ஓட்டிச் சென்றான் மனோகரன்.

அந்தப் பெரியவர்களை எண்ணிப் பார்க்கையில், சுந்தரிக்கும் பாவமாகத்தான் இருந்தது. ஆனால், உலகத்தில் எத்தனையோ கோடிப் பேர் கஷ்டப்படத்தான் செய்கிறார்கள். அதற்காகச் சொந்த முன்னேற்றத்தை விட்டு விடுவதா?

ஹோட்டலை விரிவுபடுத்த இதை விடப் பொருத்தமான வேறு இடம் கிடைப்பது மிகவும் அரிது!

எந்தவிதச் சம்பந்தமும் இல்லாத யாரோ சிலருக்காகக் கையில் கிடைத்த நல்ல வாய்ப்பை எப்படி விடுவது?

அவளுடைய குடும்பம் அப்படி விட்டுவிட வேண்டும் என்று, அந்த டாக்டர் எப்படி எதிர்பார்க்கலாம்?

இதில், அவளது மனச்சாட்சியைப் பற்றிய வசனம் வேறு? அவளைச் சமாதானப் படுத்துகிற பாவனை காட்டித் தன் காரியத்துக்காக உடன் அழைத்துச் சென்றவனுக்கு, மனச்சாட்சி பற்றிப் பேச வாய் ஏது?

கோபமும், கூடவே குழப்பமுமாக ஹோட்டலை அடைந்தால், அங்கே ரஞ்சிதம் கடுங் கோபத்துடன் காத்திருந்தாள்.

சுந்தரியின் முதல் பயம், மனோகரனோடு காரில் வந்தது ரஞ்சிதத்துக்குத் தெரிந்திருக்குமோ என்பதுதான்!

ஹோட்டல் கார் டிரைவருக்கு அது தெரியாது என்பதோடு, அப்படித் தெரிந்திருந்தாலும், அதை வீட்டில் சொல்லி மூட்டிக் கொடுக்கிற குணம், அவருக்குக் கிடையாது.

"என்ன அத்தை?" என்று அவள் கலக்கத்துடன் வினவ, "எல்லாம் அந்தக் குடும்பம் பண்ணுகிற தொல்லைதான்.

அப்பனுக்குத் தப்பாமல் பிறந்திருக்கும் அந்த டாக்டருக்கும், உச்சி முதல் உள்ளங்கால் வரை, ஒரே குசும்பு!'' என்றாள் ரஞ்சிதம் சினக் குரலில்.

அப்பனுக்குத் தப்பாமல்!

இதுதான் விஷயம் என்று, சுந்தரிக்கு இப்போது உறுதிப்பட்டு விட்டது.

அப்பா, அத்தையின் மனதில் ஆசையைக் கிளப்பி விட்டது போல, மகன் சுந்தரியின் மனதோடு விளையாட முயற்சிக்கிறான் என்கிறாள் அத்தை!

ஆனால், சுந்தரி ஒன்றும் அப்படி மதி மயங்கி விடுகிறவள் அல்லவே! இப்போதுகூட அவனது உள் நோக்கத்தை, அவள் உடனேயே கண்டுவிடவில்லையா?

தைரியம் சொல்லி, ரஞ்சிதத்தைத் தேற்ற வேண்டும் என்று எண்ணி, ''அனாவசியமாகக் கவலைப்படாதீர்கள், அத்தை! நீங்கள் பயப்படுகிற மாதிரி ஒன்றும் இல்லை!'' என்று தொடங்கினாள்.

ஆனால், அவள் பேசி முடிக்குமுன்பே குறுக்கிட்டுப் படபடவென்று பொரியத் தொடங்கினாள் ரஞ்சிதம்.

## 10



''என்னத்தை ஒன்றும் இல்லை? உனக்கு விஷயம் என்னவென்றே, தெரியாது! ஒன்றும் தெரியாமல் கவலைப்பட வேண்டாம் என்று உளறிக் கொண்டு இருக்கிறாயே!'' என்று அண்ணன் மகளைக் கடிந்துவிட்டு, ''அந்த டாக்டர் பயல், இங்கே என்ன பண்ணி வைத்திருக்கிறான், தெரியுமா?'' என்று, ஆத்திரத்தில் மூச்சு வாங்கக் கேட்டாள் ரஞ்சிதம்.

"அந்தச் செல்வநாயகிக் கிழவியைக் கலைத்துவிட்டிருக்கிறான்!" என்றாள் சின மிகுதியால் நடுங்கிய குரலில்.

செல்வ.. செல்வநாயகி!

விஷயமே வேறு!

உள்ளூர இலகுவாக மூச்சு விட்டபடி, "என்ன நடந்தது அத்தை?" என்று ஆர்வம் காட்டிக் கேட்டாள் சுந்தரி.

வக்கீலிடம் பேசியாயிற்றா என்று கேட்பதற்காக, அன்று காலையே ஓடை வீட்டுக்கு ஓடிச் சென்ற ரஞ்சிதத்திடம், செல்வநாயகி எதையுமே மறைக்கவில்லை.

வெகு சிரமப்பட்டுச் செல்வநாயகியின் முன் முகத்தைச் சிரித்தாற்போலவே வைத்திருந்து சமாளித்து வீட்டுக்கு வந்து சேர்ந்த ரஞ்சிதத்தின் முகத்தில், அதன் பிறகு, எள்ளும் கொள்ளும்தான் வெடித்தது!

ரஞ்சிதம் மட்டுமல்ல, ஹோட்டல் அமுதம் குடும்பத்தினர் யாராலும், இந்த இடையூறைச் சாதாரணமாக ஏற்க முடியவில்லை. கையில் கிடைத்ததை, யாரோ தட்டிப் பறித்த உணர்வுதான் எல்லோருக்கும்.

ரஞ்சிதம் புலம்பித் தீர்த்தாள்.

கிட்டத்தட்ட தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் சரி என்று ஒத்துக்கொண்ட பெண்மணி, இப்போது, இல்லை என்று வெளிப்படையாகச் சொல்லி விரட்டாத குறையாகி விட்டதே!

இன்னோர் அபிப்பிராயம் கேட்க வேண்டும் என்று சொல்வதே, தட்டிக் கழிப்பதுதான் என்று இன்னொருவர் சொல்லியா, ஒருவர் அறிய வேண்டும்?

அதுவும், அந்த அபிப்பிராயத்தைச் சொல்லப் போகும் கட்டடக் கலை நிபுணன், தொழில்துறைப் படிப்புக்காகப் பிரியும்வரை, அந்த மனோகரனோடு சேர்ந்து படித்தவன்.

அவன் வந்து, அந்தப் பெரிய வீட்டின் அமைப்பு களை அலசி ஆராய்ந்துவிட்டு, அது ஹோட்டலுக்குப் பொருந்துமா அல்லது, முதியோர் பலர் தங்க வசதியாக இருக்குமா என்று யோசித்து முடிவு சொல்வானாம்!

அதன்படிதான், அந்தம்மாள் செய்யப் போகிறாளாம்.

இவ்வளவுக்கும் மேலாக, இன்னொன்றும் இருந்தது.

அபிப்பிராயம் சொல்லப் போகும், அந்தக் கட்டடக் கலை நிபுணன் பெயரைச் செல்வநாயகிக்குச் சிபாரிசு செய்திருப்பவனும், அந்த டாக்டரேதான்.

டாக்டர் சொன்ன ஆள், டாக்டருக்கு எதிராகச் சொல்லுவாரா, என்ன?

போயிற்று. எல்லாம் போயிற்று! பல ஆண்டு கால மாக, அவள் கண்டு வந்த கனவு, அடியோடு நாசமாகிப் போயிற்று!

பல ஆண்டு வாழ்க்கைக் கனவைத் தகப்பன் அழித் தான்! ஒருவாறு மீண்டு, இன்னொரு வகைக் கனவு கண்டால், அதை மகன் நாசமாக்குகிறான்!

அத்தை புலம்பப் புலம்ப, சுந்தரியின் நெஞ்சு கொதித்தது!

இப்படி, அந்த நல்ல பெண்மணியைச் சொல் புரள வைத்துவிட்டு, அவன் மகா உத்தமன் மாதிரி, அவளது மனச்சாட்சியைப் பற்றி வேறு பேசினான்!

முதலில், அவனுக்கு மனச்சாட்சி இருக்கிறதா?

அவனைக் கேட்டே ஆக வேண்டும்!

மனோகரனிடம் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்று, அதே நினைவில், சுந்தரிக்குச் சரியாகத் தூக்கம் கூட வரவில்லை.

சுற்றிலும் இருள் குறைந்து, வெளிச்சம் பரவுவதைப் பார்த்துக் கொண்டே இருந்தவளுக்கு, இன்னமும் யோசனை தான்.

மனோகரனை எங்கே போய்ப் பார்த்துக் கேட்பது?

அவன் வீட்டிற்குப் போவது, நடக்கிற காரியம் அல்ல!

என்ன காரணத்துக்காக என்று கரடியாகக் கத்தினாலும், இந்த வீட்டில் யாரும் அதை ஒப்பப் போவது இல்லை. முக்கியமாக அத்தை!

அத்தோடு, சுந்தரிக்கே, மனோகரனின் வீட்டுக்குச் செல்ல விருப்பம் இல்லை.

அங்கே போனால், மனோகரனுடைய அன்னையைச் சந்திக்க நேரும்.

இத்தனை துன்பங்களுக்கும் மூல காரணமான அந்தச் சாந்தி மாதவனைச் சந்தித்துப் பேசச் சுந்தரிக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை.

அத்தையின் வாழ்வை அழித்தது மட்டுமில்லாமல், அவளைப் பற்றிக் கண்டபடி சொல்லி, மகனின் மனதை யும் கெடுத்து வைத்திருக்கிறாளே!

ஏதோ தோன்றவும், சட்டெனா எழுந்து பல் துலக் கியவள், உலாவப் போவதாகக் காவலாளியிடம் சொல்லி விட்டு, விறுவிறென்று வேகமாக நடந்தாள்.

குறுக்குச் சாலைகளின் வழியே விழுந்தடித்துக் கொண்டு சென்றவள், எல்லையில் இருந்த ஓடையை

அடைந்ததும், தடை கட்டினாற்போலச் சில வினாடி நேரம் அப்படியே நின்றாள்!

உள்ளுணர்வு உந்த, இவ்வளவு தூரம் வந்து விட்டாள். ஆனால், அதே போல, அவனும் வருவான் என்று என்ன நிச்சயம்?

உள்ளூர அசட்டுத்தனமாக அவள் உணரும்போதே, "ஹலோ, நீ வரக் கூடுமோ என்று இங்கே வந்து, எப்போதிருந்து காத்திருக்கிறேன், தெரியுமா?" என்ற படி, ஓடைக் கரை துவைக்கிற கல்லிலிருந்து, மனோகரன் எழுந்து வந்தான்.

ஒரு கணம் அவளுக்கு ஆகாயத்தில் பறக்கிற மாதிரிதான் இருந்தது.

ஆனால், உடனேயே முன்தினமும், வந்த காரியமும் நினைவு வந்து, சுந்தரியின் முகம் மாறியது.

"எதற்காகக் காத்திருக்க வேண்டும்? இன்னுமொரு வகையில் ஏமாற்றுவதற்காகவா?" என்று கோபமும் குத்தலுமாக வினவினாள் அவள்.

புருவம் சுருக்கினான் அவன். "ஏமாற்றுவதா? என்ன கதை இது?"

"ஆகாகா! என்ன நடிப்பு?! இந்தப் பக்கம், ஓடை வீட்டு ஆன்ட்டியைப் பேச்சு மாற வைத்துவிட்டு, அந்தப் பக்கம் எனக்குப் பெரிதாக இரண்டு உருக்கக் காட்சிகள் காட்டினீர்களே, அதைச் சொன்னேன்!" என்றாள் அவள் ஆத்திரத்தோடு.

"அந்த முதியவர்களின் துன்பத்தை, அப்படி அலட்சிய மாகப் பேசாதே!" என்றான் அவனும் ஆத்திரமாகவே. "அத்தோடு, செல்வநாயகி ஆன்ட்டி, எந்த வகையிலும்

பேச்சு மாறவும் இல்லை! அவர்கள் ஒன்றும், ஒரேயடியாக உங்களுக்கே தந்து விடுவதாக, உறுதியாக ஒரு போதும் கூறியிருக்கவில்லையே! வக்கீலிடம் கேட்டுக் கொண்டு சொல்வதாகச் சொன்னார்கள். இப்போது வக்கீல் மூலம், நிபுணர் அபிப்பிராயம் கேட்கிறார்கள். இதில் பேச்சு மாறல் எங்கே வந்தது?'' என்ன சாமர்த்தியமாக மாற்றிப் பேசுகிறான்!

''நேற்று என்னைச் சொன்னீர்களே, இப்போது உங்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால், அதைக் கேட்டுப் பாருங்கள், இந்தக் கேள்விக்கான பதிலை. அது சொல்லும்! அந்த ஆன்ட்டி சொன்ன விதத்தில், எங்கள் அத்தை அங்கே ஹோட்டலை என்னென்ன மாதிரி அமைப்பது என்றுகூடத் திட்டமெல்லாம் போட்டு விட்டார்கள், தெரியுமா?''

''உங்கள் அத்தை இன்றுதானா திட்டம் போட்டார்கள்? அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்பட்டு, அவர்கள் ஆண்டுக் கணக்கில் திட்டம் போட்ட கதை, எனக்கும் தெரியும். அம்மணி! சும்மா என்னிடம் கதை விடாதே!'' என்றான் அவன் ஏளனமாக.

எப்படித் தெரியும் என்று ஒரு கணம் திகைக்கும் போதே, ஓடையோரத்து வீட்டு ஆன்ட்டியே சொல்லியிருக்கக் கூடும் என்பது புரிய, சுந்தரிக்கு அத்தை மீதே கோபம் வந்தது.

ஒன்று, அவன் சொன்னது போல, அடுத்தவர் சொத்தைப் பற்றி அத்தை கற்பனை செய்திருக்கக் கூடாது. அவளுடைய தந்தையே கூறியது போல, அதுவே ஒரு வகையான அத்து மீறல்தான்.

அப்படியே அத்துமீறிக் கற்பனை செய்தாலும், அதைப் பற்றி யாரிடமும்.. குறைந்த பட்சமாக, அந்த ஆன்ட்டியிடமேனும் அத்தை சொல்லாமல் இருந்திருக்க வேண்டும்.

இரண்டையும் அத்தை செய்ததற்காக, இப்போது சுந்தரியல்லவா கேவலப்பட வேண்டியிருக்கிறது!

ஆனால் தன் குன்றலைக் காட்டிக் கொள்ளாமல், "அதெல்லாம் போகிற போக்கில் மனதுள் எழுந்து மறையும் வெறும் எண்ணம்! உங்களுக்குக் கூடத்தான், யாரோ விந்தி நடந்தால், நம்மிடம் வந்தால், குணப் படுத்தி விடலாமே என்று தோன்றும்! அதற்காக, அவன் ஒரு நோயாளியாக உங்களிடமே வைத்தியத்துக்கு வர வேண்டும் என்று ஆசைப்பட்டதாகச் சொல்ல முடியுமா? அந்த மாதிரிதான், அத்தையின் பழைய கற்பனைகளை யும் தப்பிதமாகச் சொல்ல முடியாது. ஆனால், அன்று அந்த ஆன்ட்டி சொன்னதை வைத்து, செலவுக் கணக்கெல்லாம் போட்டு வைத்தார்கள். இப்போது போய், நிபுணர் அபிப்பிராயம் வேண்டும் என்றால் எப்படி? அத்தோடு, அபிப்பிராயம் சொல்லப் போகும் அந்தக் கட்டடக் கலை நிபுணர் யார் என்று, எனக்குத் தெரியாது என்றா நினைத்தீர்கள்? உங்கள் நண்பரான அந்த நிபுணர், யார் விருப்பப்படி, யாருக்குச் சாதக மாக அபிப்பிராயம் சொல்லுவார் என்றுகூடத் தெரி யாத முட்டாளா, நான்?" என்று, கொட்டித் தீர்த்தாள் அவள்.

ஆனால், தலையை அலட்சியமாகத் திருப்பி, "அவன் தன் மனச் சாட்சிப்படி சொல்லுவான்!" என்றான்

மனோகரன். "எல்லாரையும் உங்களைப் போல எண்ண வேண்டாம். அவரவருக்குத் தொழில் நேர்மை என்று இராதா? என்னிடம் அப்பென்டிசிட்டிஸ் பிரச்சினை யோடு வருகிறவனை, இதய நோய், பைபாஸ் பண்ணு என்று சொல்வேனா? என்னைப் போலத்தான் வாசுவும். ஆனால், ஹோட்டல் தொழிலை, முதியோர் பணியோடு சமப்படுத்திப் பேசுகிற உனக்கு, இது போன்ற உயர்ந்த விஷயங்கள் புரிவது சிரமம்தான்!" என்று, அவளுக்கு ஒரு குட்டு வைத்துப் பேச்சை முடித்தான் மனோகரன்.

அவளுக்கு நல்ல வலிதான். ஆனால், பதிலுக்கு வலிக்க வைக்க, அவளுக்கு, இப்போது அவளிடம் ஆயுதம் இல்லையே!

எனவே, வலியைக் காட்டிக் கொள்ளாமல், "சிரமமோ, இல்லையோ? அப்பென்டிசிட்டிஸ் அப்படியே இருக் கிறதா, இதய நோய் ஆகிறதா என்று, நானும் பார்க்கத் தானே போகிறேன். அப்போது பார்ப்போம்!" என்று குத்தலாக மொழிந்து விட்டு, வந்த வழியே திரும்பி வேகமாக நடந்தாள் அவள்.

அடுத்த சில தினங்கள், சுந்தரி உள்ளூர ரொம்பவே குமைந்து போனாள்.

எவ்வளவு கடுமையாகப் பேசி விட்டான்? பதிலுக் குப் பதில் என்று அவளும்தான்.

இத்தனைக்கும், மற்றவரை இங்கே சந்திக்கலாம் என்று, இருவருக்குமே உள்ளுணர்வு தோன்றி, வந்திருக்கிறார்கள்.

கோபமோ, தாபமோ, அது வேறு விஷயம்! ஆனால், மனதில் எவ்வளவு ஒற்றுமை இருந்தால், இப்படி ஒரே எண்ணம், அதுவும் நூறு சத விகிதம் சரியானதாகத் தோன்றக் கூடும்?!

முதல் இரண்டு... இல்லை, முதல் மூன்று முறையுமே சந்தோஷமாகத்தான் கழிந்தது!

நினைத்து, நினைத்தே உள்ளூர மகிழ்ந்தாளே!

கடைசியில்...

எல்லாம் இந்த அத்தையால் வந்தது.

இருப்பது போதும் என்று சும்மா இருப்பதற்கென்ன என்று ரஞ்சிதத்தின் மேல் எரிச்சலுறும்போதுதான், மனோகரனுக்காக, அவளை அன்போடு வளர்த்த சொந்த அத்தையையே சாடுகிறோம் என்பதைச் சுந்தரி உணர்ந்தாள்.

மனோகரனின் நினைவு, அவளை நன்றி கெட வைத்துக் குடும்பத்தினுள் குழப்பத்தையும் உண்டு பண்ணி விடும்போல இருக்கிறதே!

கூடாது.. கூடாது! அவனை நினைக்கவே கூடாது என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டாள் அவள்.

ஆனால், மனதைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிது அன்றே!

அவன் எப்படி, இந்த அளவு கீழிறங்கலாம் என்ற ஆத்திரம் எப்போதும் சுந்தரியை உருட்டிப் புரட்டிக் கொண்டே இருந்தது!

அதிலும், செல்வநாயகி கூறியிருந்த ஒரு வாரக்கெடு முடிவடையும் நாள் நெருங்க நெருங்கச் சுந்தரிக்கு வேறு நினைவே இல்லாது போய் விட்டது எனலாம்.

பெரும்பாலும், முடிவு அவனுக்குச் சாதகமாகத்தான் அமையும் என்பது, அந்த வீட்டில் எல்லோருக்குமே நிச்சயம்தான்.

அதனால் வந்த ஏமாற்றமும், கோபமுமாக, எல்லோர் மனநிலையுமே மோசமாகவே இருந்தது. ரஞ்சிதம், தன் ஆத்திரத்தை வெளிப்படையாகக் காட்ட, சுந்தரி உள்ளூர நொந்தாள்.

கட்டடக் கலை நிபுணர் வாசுவின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் நாளன்று, ரஞ்சிதம், தன் அண்ணன் மகளோடு, அண்ணன், அண்ணன் மனைவியையும் சேர்த்து இழுத்துக் கொண்டு, செல்வநாயகியின் இருப்பிடத்துக்குச் சென்றாள்.

அந்த வாசுவின் அறிவிப்பு, அவர்களுக்குப் பாதகமாக இருந்தாலும், எல்லோருமாகச் சேர்ந்து, பல்வேறு விதமான வாதப் பிரதிவாதங்களால், செல்வ நாயகியின் மனதை மாற்றிவிட வேண்டும் என்பது ரஞ்சிதத்தின் கருத்து.

இடத்தின் உரிமையாளரான செல்வநாயகி ஒரு முடிவு செய்த பின், நாம் அதிகம் பேசுவது நன்றாக இராதென்று, கண்ணபிரான் சொன்னதை, அவருடைய தங்கை காதில் வாங்கிக் கொள்வதாகவே இல்லை.

கொக்குக்கு ஒன்றே மதி என்பது போல, அவள் ஒரே நோக்கோடு இருக்க, தங்கையின் பிடிவாதத்துக்கு எப்போதும் போலக் கண்ணபிரான் பணிந்துவிட, ரஞ்சிதம் கற்றுக் கொடுத்த பல வகையான வாதப் பிரதிவாதங்களைக் கேட்டு மனதில் பதித்தவாறே, எல்லோருமாக ஓடைக்கரை வீட்டை அடைந்தனர்.

ஆனால், அவர்கள் யாரும் எதிர்பார்க்காத ‘ஆன்டிகிளை மாக்சா’க, ஓடைக்கரை வீடு ஹோட்டலுக்குத்தான் ஒத்து வரும் என்று நிபுணர் சொன்னதாகச் செல்வநாயகி அம்மாள் அறிவிக்க, எல்லோருமே திகைத்து விழித்தனர்.

நிறைய அறைகள் இருந்தபோதும், படுக்கை அறை கள் பெரும்பாலும், மாடியில் இருந்தன. எண்பதை ஒட்டிய வயதை உடையவர்களுக்கு மாடிப்படிகளில் ஏறி இறங்குவது கடினம். விழுந்து விடக்கூடும் என்பதோடு, அதற்குப் பயந்து அறைக்குள்ளேயே இருந்து விட்டால், அந்த முதியவர்கள் இலகுவாகச் செய்யக் கூடிய நடைப்பயிற்சி நின்று போகும் என்பது வாசுவின் அபிப்பிராயம்! இந்த வீட்டுக்குள் லிஃப்ட் வைப்பதும் கடினம்.

அதே சமயம், ஹோட்டல் என்றால், இந்த அழகிய மர வேலைப்பாடமைந்த படிகளில் ஏறிச் செல்வதே நன்றாக இருக்கும்! கீழே பெரிய ஹாலும், ஹோட்டல் ‘லாபி’க்குத்தான் சரியாக இருக்கும்!

இதெல்லாம் கட்டக் கலை நிபுணர் வாசுவின் கருத்து.

தொடர்ந்து பேசிய செல்வநாயகி. சொன்ன சொல் மாறாமல், தன் வீட்டில் ஹோட்டல் நடத்துவதற்கு, அவர்களுக்கு அனுமதி அளிக்கப் போவதாகவும் கூறி முத்தாய்ப்பு வைக்க, ரஞ்சிதம்கூடச் சற்று நேரம் பேச்சிழந்து போனாள்.

விரைவிலேயே திகைப்பு மாறி, எல்லோரும் மகிழ்ச்சி யோடு உரையாடுகையில், அதில் கலந்து கொள்ள முடியாமல் சுந்தரி சும்மா நின்றாள்.

## 11



ரொம்ப காலமாகச் சுந்தரியுடைய அத்தை ரஞ்சிதம் ஆசைப்பட்டது, கைக்குக் கிட்டுவது போல இருந்து, எட்டிப் போனது, இப்போது மீண்டும் கிடைத்திருக்கிறது.

இதனால், அவர்களது ஹோட்டல் தொழில், குறைந்தது, ஐம்பது சதவிகிதம் அதிகமாகும்.

அதற்குத் தக வருமானமும் கூடும்.

இத்தனை நன்மைகளும் நடக்கப் போவதை எண்ணிச் சுந்தரி மிகவும் உற்சாகமும், மகிழ்ச்சியும் அடைந்திருக்க வேண்டும்.

ஆனால், உள்ளே எல்லாம் காலியாகி விட்டது போல, ஒரு வெற்று உணர்ச்சிதான் அவளுக்கு உண்டாயிற்று!

டாக்டர் மனோகரனின் வருத்தமும், ஏமாற்றமும் நிறைந்த முகம் திரும்பத் திரும்ப அவளது மனக் கண்ணின் முன் தோன்றிக் கழிவிரக்கம் கொள்ளச் செய்தது.

பாவம்! அவன் தன் சுகத்துக்காகக் கூடக் கேட்க வில்லை. எந்தவிதமான உறவும் இல்லாத, சில வயதான பெரியவர்களுக்காக...

"சுந்தரீ..." என்று யாரோ உரக்க அழைக்கும் சத்தம் கேட்டது!

எண்ணக் கோவை கலைந்து, சுந்தரி திரும்பிப் பார்த்தால், அந்தக் கட்டடக் கலை நிபுணர் வாசுவை அழைத்துக் கொண்டு, ரஞ்சிதம் பக்க வாட்டுக் கதவின் வழியே, வெளியே சென்று கொண்டிருந்தாள்.

சுந்தரியை அழைத்ததும் அவளேதான்.

பின்புறத் தோட்டப் பகுதியை என்ன செய்யலாம் என்று பார்க்கப் போவதாகவும், அவளும் கூட வந்தால்

நன்றாக இருக்கும் என்றவாறு, போய்க் கொண்டிருந் தாள் அவள்.

தளம் தளமாகப் பிரியும் மாடிப் படிகளின் அழகைக் கண்ணபிரானும், அவருடைய மனைவியும் ரசித்துக் கொண்டிருந்தனர்.

எனவே, இது ஒரு தருணம் என்று கண்டு, ''மிஸ்டர் வாசுவின் அபிப்பிராயத்தை, டாக்டர் மனோகரனுக்குத் தெரிவித்தீர்களா, ஆன்ட்டி?'' என்று, செல்வநாயகி யிடம், சுந்தரி விசாரித்தாள்.

அவளது கருத்துத் தெரியாமல், ''டாக்டராம்மா? ரொம்பத் தங்கமான பிள்ளை! நல்ல மனிதர்! முதல் ஆளாக அவரிடம்தான் சொன்னேன். ஆனால்...'' என்றாள் பெரியவள்.

''அவர்... அவர் இந்த முடிவை எப்படி ஏற்றுக் கொண் டார், ஆன்ட்டி?'' என்று, மீண்டும் துருவினாள் சின்னவள்.

அவளுக்குத் தெரிய வேண்டியிருந்தது. அவன் ரொம்ப வருத்தப்பட்டிருப்பானோ? அவனது லட்சியக் கனவு நிறைவேறப் போவதாக, அன்று ஓடையருகே எவ்வளவு மகிழ்ச்சியுடன் கூறினான்! இப்போது, இல்லாது போய் விட்டதே!

லேசாகப் புருவங்களைச் சுழித்து நினைவுபடுத்தி, ''எப்படி... அப்படியா, சரிதான் என்றதற்கு மேல், பெரி தாக வேறு ஒன்றும் சொல்லவில்லை. கொஞ்சம் ஏமாற் றம் போலத் தோன்றியது. ஆனால், நான் என்னம்மா செய்ய முடியும்? தனக்கு என்னதான் ஏமாற்றம் என்றாலும், டாக்டர் தம்பியுமே, அதை ஏற்றுக் கொள்ளாது!'' என்று செல்வநாயகி கூறியது, சுந்தரியைக் குத்தியது.

இந்தப் பெண்மணிக்குத் தெரிந்தது, அவளுக்குத் தெரியவில்லையே! மனோகரனை என்னவெல்லாம் சொல்லி விட்டாள்! இதற்கெல்லாம், அவனிடம் எப்படி மன்னிப்புக் கேட்பது? இனிமேல் எங்கேனும் பார்த்தால் கூட, நின்று அவளோடு பேசுவானோ, என்னவோ?

அவள் பேசின பேச்சுக்கு, நிச்சயமாக மாட்டான். அவன், அவனுடைய நண்பன் எல்லோரது நேர்மையை யும் அல்லவா இழித்துரைத்து விட்டாள்!

ஓடைப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்க மாட்டான்!

இனி, இவர்கள் நடமாட்டம் இருக்கக் கூடும் என்று, இங்கே வருவது கூடச் சந்தேகம்தான்.

சுந்தரியுடைய குடும்பத்தைச் சந்திக்க விருப்பம் இல்லாமல்தானே, இந்தப் பிரச்சினையின் முடிவை அறியக் கூட, மனோகரன் இங்கு வரவே இல்லை.

உள் மனது ஓசையற்றுப் புலம்பும்போது, சுந்தரிக்கு இன்னொன்று தோன்றியது.

தனிமைப் படுத்தப் பட்டுவிட்ட முதியவர்களிடம், மனோகரனுக்குத் தனிக் கனிவு! அப்படிப் பார்த்தால், செல்வநாயகியும் அதே போலத்தானே! எப்படி ஒதுக்குவான்?

''மிஸ்டர் வாசுவின் முடிவை அறியக்கூட வர வில்லையே! இனிமேல், இங்கே வருவாரா...'' என்று அசுவாரசியம் போல இழுத்தாள் அவள்.

அவளுக்குத்தான் ஒரே நினைவு! ஆனால், ரஞ்சிதத் துக்கு உதவுமாறு தோட்டக்காரனிடம் சொல்லிவிட்டுத் திரும்பிய செல்வநாயகிக்குச் சின்னவள் என்ன கேட் கிறாள் என்பதே புரியவில்லை.

''யாரையம்மா வருவாரா என்று கேட்கிறாய்?'' என்று விளக்கம் கேட்டாள் அந்தப் பெண்மணி.

மெலிதாக முகம் கன்ற, ''டாக்டரைச் சொன்னேன், ஆன்ட்டி! அவருக்கு இந்த இடம் கிடைக்காது என்று ஆகி விட்டது, இல்லையா? இனிமேல், இங்கே வருவாரோ, மாட்டாரோ என்று யோசித்தேன்!'' என்று ஒருவாறு சமாளித்தாள் அவள்.

வினாடிகூடத் தாமதியாமல், ''வருவாரே!'' என்ற பதில் வந்தது. ''அந்தத் தம்பி இங்கே வந்ததே, அந்த.. அந்த விபத்து தொடர்பாகத்தானே! நான் தனியே கிடப்பது தாங்காமல், அவருடைய தாயாரையே, ஒரு நாள் துணைக்கு அனுப்பி வைத்தார். வாராவாரம் உடல் நிலை பரிசோதனைக்காவது, எப்படியும் டாக்டர் கட்டாயம் வருவார், சுந்தரி!''

இன்று வருவாரா என்ற கேள்வி, சுந்தரியின் நுனி நாக்கு வரை வந்து அடங்கியது.

இன்னும் கேட்டால், டாக்டரிடம் அதிகக் கவனம் காட்டுவது போலத் தெரியும் என்பதோடு, மனோகரன் இன்று வந்தாலும்கூட, இத்தனை பேர் நடுவில், அவ னிடம் அவள் பேசுவது கடினம். அதிலும், அவள் விரும் பியதுபோல மன்னிப்புக் கேட்பதோ, நிச்சயமாக இயலாது.

அப்புறமாக, வீட்டு மனிதர்களுக்கு, முக்கியமாக ரஞ்சிதம் அத்தைக்குப் பதில் சொல்லி மாளவே மாளாது.

ரஞ்சிதத்தைப் பற்றி நினைப்பதற்குள், அவளது குரல், ''சுந்தரீ...'' என்று உரக்க அழைத்தது. ''எப்போ திருந்து கூப்பிடுகிறேன்! அங்கே என்னதான் செய்து கொண்டிருக்கிறாய்?''

செல்வநாயகியிடம் தலையசைத்துவிட்டு, அத்தையின் குரல் வந்த திசையை நோக்கிச் சுந்தரி விரைந்தாள்.

செல்வநாயகிக்காக அபிப்பிராயம் சொல்ல வந்த கட்டடக் கலை நிபுணன் வாசுவின் திறமையைத் .தன் வழக்கம் போலவே, முடிந்தவரை தன் வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள் ரஞ்சிதம்.

ஏற்கெனவே, அவள் போட்டு வைத்திருந்த திட்டங் களைச் சொல்லி, வாசுவிடம் அவை எந்த அளவு சாத் தியம், செலவு எவ்வளவு ஆகும் என்ற விவரங்களைச் செலவில்லாமலே கேட்டுக் கொண்டாள்.

அவற்றுள் ஒன்றாகச் செல்வநாயகிக்கான தங்கும் இடம்தான், சுந்தரி அங்கே சென்றபோது விவாதத்தில் இருந்தது!

வீட்டினுள் நிறைய வேலைகள் செய்ய வேண்டியிருந் தது. த்ச்சு வேலை, மின்சார இணைப்புகள், அமைப்பு கள், சில மாற்றங்கள், புதிய அமைப்புகளுக்கான கொல்லத்து வேலைகள் என்று நிறைய இருந்தன.

சத்தமும் சந்தடியும் அதிகம் இருக்கும் என்பதால், தோட்டப் பகுதியில் ஒரு சிறு தனி வீட்டை அமைப்பது பற்றிய திட்டங்கள்!

அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்குச் செல்வ நாயகியின் ஒப்புதலையும் பெற்ற பிறகே, வாசுவைக் கிளம்ப விட்டாள் ரஞ்சிதம்.

வழியனுப்புவதற்காகச் செல்வ நாயகியும் வாசுவோடு சென்று விட, "இப்படி, அவர்கள் ஆள் மாதிரி ஒருவரை யும் வைத்துக் கொண்டு, நாமும் இரண்டு பேர் அமுக்கினால்தான், இது போல வயதானதுகள் நாம்

சொல்வதை ஒத்துக் கொள்ளுங்கள்! அதற்காகத்தான் உன்னைக் கூப்பிட்டேன்!'' என்று ரஞ்சிதம் பெருமை யடித்தது. சுந்தரிக்குப் பிடிக்கவில்லை.

நண்பனுக்காகக் கூடப் பிறழாத வாசுவின் நேர்மை, செல்வநாயகியின் சொல் மாறாத பெருந்தன்மை - இரண்டையுமே அத்தைக்கு மதிக்கத் தெரியவில்லையே என்றிருந்தது, அவளுக்கு.

இந்தப் பேச்சை, மேலும் நின்று கேட்கப் பிரியம் இல்லாமல், ''எதற்கும் மிஸ்டர் வாசுவின் டெலிஃபோன் எண்ணை வாங்கி வைக்கிறேன், அத்தை. தேவைப்படக் கூடும்!'' என்று கூறி, வாயிற்புறம் சென்றாள் அவள்.

அங்கே, அவளுக்கு முன்பாகக் கண்ணபிரான் அதைச் செய்திருந்ததோடு, ஒரு முறை 'அமுதத்'துக்கு வந்து போகுமாறும் வாசுவை அழைத்திருந்தார்.

வாசுவும் விடைபெற்றுச் சென்றிருந்தான்.

இந்தப் பக்கமாக வாக்கிங் வரும்போதெல்லாம், அவள் பார்த்து ரசித்த வீடுதான். ரஞ்சிதம் திட்டமிடும் போது பொழுது போக்காகவும், சில சமயம் உண்மை யான உற்சாகத்தோடும் அதில் கலந்து கொண்டவளும் கூடத்தான்.

ஆனால், ஏனோ, அங்கே அதிக நேரம் நிற்கவோ, பேசவோ, இன்று அவளுக்கு மனமில்லை.

''நம்மில் ஒருவரும் இல்லாமல், அதிக நேரம், பாமினியால் சமாளிக்க முடியாது. அப்பா! கூட்டம் வந்தால் திணறிப் போவாள். நான் கிளம்புகிறேன். ஏதேனும் பேச வேண்டுமானால், நீங்கள் இருந்து பேசிவிட்டு வாருங்கள்,'' என்று, கிளம்புவதற்கு ஒரு

சாக்குச் சொன்னவள், ஓய்வாக உட்காரப் போய் விட்ட செல்வநாயகியிடம் உள்ளே சென்று விடைபெற்று வந்தாள்.

பெற்றோரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, அவள் கிளம்ப எத்தனித்த நேரம், ஒரு கார், அங்கே வழுக்கிக் கொண்டு வந்து நின்றது.

மனோகரனின் கார்தான்.

மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு, அவன் காரின் கதவைச் சாத்தவும், செல்வநாயகி கூறிய வாரப் பரிசோதனை நாள் அன்றேதான் என்பது சுந்தரிக்குப் புரிந்தது.

நாசூக்குப் பார்த்துத் தயங்காமல், அப்போதே இன் னும் கொஞ்சம் தெளிவாகக் கேட்டிருந்தால், முன்ன தாகவே ஒதுங்கி ஓடியிருக்கலாம்.

வேரூன்றி விட்டாற் போலக் கால்களை அசைக்க முடியாமல் சுந்தரி மலைத்து நிற்கையில், தன் இலகு நடையுடன், மனோகரன் அவளை நெருங்கினான்.

அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "என்ன, அப்பென்டிசைட்டிசேதானா? இதயநோய் ஆகவே இல்லை போல! ஆனாலும் வாழ்த்துக்கள்!" என்று உதட்டோரம் ஓர் ஏளன வளைவுடன் கூறியவன், கதவோரம் வந்து நின்ற வேலைக்காரியிடம், "ஆன்ட்டி உள்ளேயா, மாடத்தி?" என்று கேட்டவாறு, வேகமாக உள்ளே சென்று விட்டான்.

அவனைப் பார்த்ததுமே, அவனிடம் மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டுமோ?

அவளது குற்றச்சாட்டு, முழுக்க முழுக்கத் தப்பு என்று நிரூபிக்கப்பட்ட பிறகு, கட்டாயம் மன்னிப்புக் கேட்டுத் தான் இருக்க வேண்டும்.

ஆனால், பெற்றோர் முன்னிலையில் எப்படிக் கேட்பது என்றுதான், அவள் தயங்கியது.

அவனானால், என்னன்னவோ சொல்லிவிட்டுப் போய்விட்டானே!

சொல்லியும் நம்பாமல், அநியாயமாகக் குற்றம் சாட்டி னாளே என்ற கோபமாக இருக்கும். அப்படி இல்லை என்று நிரூபணம் ஆனதும், டக்கென்று கேட்டு விட்டான். நியாயம்தானே!

ஆனால், இப்போது, தாயும் தந்தையும் என்ன கேட்கப் போகிறார்களோ?

'என்ன?' என்றுதான் இருவரும் கேட்டார்கள்.

''வந்தவர் டாக்டர் மனோகரன் என்று தெரிகிறது. ஆனால், அவரது பேச்சின் பொருள் புரியவில்லையே!... என்ன சொன்னார்?'' என்று தந்தை கேட்டார்.

தாயின் முகமும், அதையே எதிரொலித்தது.

ஒரு கணம் யோசித்துவிட்டுச் சுந்தரி வேகமாகவும் சுருக்கமாகவும் நடந்ததைச் சொன்னாள்.

''அன்று, அத்தை சொன்னார்கள் இல்லையாப்பா? நான் நேரடியாக, டாக்டரைக் குற்றம் சாட்டினேன்! எங்களுக்குத் தொழில் நேர்மை உண்டு! அப்பெண்டி சைட்டிசை இதய நோய் என்று சொல்லி, பைபாஸ் செலவைத் தலையில் கட்ட மாட்டோம் என்றார். நம்பாமல், முடிவு தெரிகிறபோது, அதைப் பார்ப்போம்

என்று கத்திவிட்டு வந்தேன். அதுதான் சொல்லிக் கொட்டி விட்டுப் போகிறார்...'' என்று முடிக்கையில், குரல் நடுங்காதிருக்க, அவள் சிரமப்பட வேண்டியிருந்தது.

“என்னது? சிரியா நங்கையா? அப்படி ஒரு செடியா?” என்று ரஞ்சிதம் கேட்க,

''ஆமாம்மா! இது இருந்தாக்க, அந்தப் பக்கமே பாம்பு வராது!'' என்ற தோட்டக்காரனின் பதிலும், பக்க வாட்டில் கேட்டது!

பார்வை பக்கவாட்டில் சென்று மீள, ''நான் கிளம்பு கிறேம்பா!'' என்று விட்டு, வேகமாக நடக்கத் தொடங்கி னாள் அவள்.

ஓட்டமும் நடையுமாக விரைந்த மகளையும், ரஞ்சிதத்தின் குரல் கேட்ட திசையையும் யோசனையாகப் பார்த்துவிட்டு, மனைவியைக் கவலையுடன் நோக்கி னார், கண்ணபிரான்!

அவளிடமும் அதே பார்வை.

## 12



தொடர்ந்த சில பல நாட்கள், ரஞ்சிதம் எவ்வளவுக்கெவ்வளவு உற்சாகமாக இருந் தாளோ, அவ்வளவுக்குச் சுந்தரி சோர்வுற்றுத் தெரிந்தாள்.

இத்தனைக்கும், செல்வநாயகியின் வீட்டி லிருந்து வந்த மறுநாளே, தன் தவறான அவசரப் பேச்சுக்காக, மனோகரனிடம் அவள் வருத்தமும் தெரிவித்து விட்டாள்.

அவனை எங்கே சந்திப்பது என்ற குழப்பமும், அவன் முகத்தைத் திருப்பிக் கொள்வானோ என்ற

கலக்கமுமாக, மனோகரனை நேரில் பார்த்துப் பேசத் தயக்கமாக இருக்கவே, அவன் மருத்துவ மனைக்குச் செல்லும் நேரத்தைக் கணக்கிட்டு, மருத்துவ மனை எண்ணுக்கே போன் செய்து பேசினாள்.

ஆனால், ஏதோ அவசர அறுவைச் சிகிச்சையில் அவன் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லி, அவளிடம் யார், என்ன என்ற விவரத்தை வரவேற்பில் கேட்டார்கள்.

விவரம் டாக்டரிடம் தெரிவிப்பதற்காகத்தான்.

ஆனால், டாக்டர் ஒரு வேளை அவளுக்கு ஃபோன் செய்ய, அப்போது ரஞ்சிதம் அத்தை ஃபோனை எடுத்தால் என்ன ஆகும்?

தானே திரும்ப அழைப்பதாகக் கூறி வைத்தாள்.

ஆனால், வீட்டினர் யாரும் அருகில் இல்லாமல் தனித்திருக்கும் நேரத்துக்காக அவள் காத்திருக்கையில், மனோகரனே அவளுக்கு ஃபோன் செய்தான். ''என்ன விஷயமாய் ஃபோன் செய்தாய்?'' என்று கேட்டு.

காது கேட்கும் தொலைவிலேயே ரஞ்சிதம் நிற்பதையும் மறந்து, ''எப்படித் தெரியும்?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் சுந்தரி.

'''காலர் ஐடி'யில் வந்த எண்ணைப் பார்த்துக் குறித்து வைத்திருந்தார்கள். அது 'அமுதம்' எண் என்பதை உங்கள் விளம்பர போர்டுகளில் பார்த்திருக்கிறேன். ஆனால் இப்போது அது முக்கியம் அல்ல. நீ எதற்குக் கூப்பிட்டாய்?'' என்று, ஒருவித உணர்ச்சியற்ற குரலிலேயே கேட்டான் அவன்.

சுற்றுப்புறம் உறைக்கப் பதில் சொல்லத் திணறினாள் அவள்.

ஆனால், அவனுக்குப் பதில் சொல்லாதிருக்கவும் முடியாது.

அவசரமாக யோசித்து, ''வந்து.. அன்று தவறாகக் கணக்கிட்டுப் பேசிவிட்டேன். அதற்கு.. 'சாரி' சொல்லத்தான் கூப்பிட்டேன்!'' என்றவள், ரஞ்சிதம் அவளை நோக்கி வரவும், ''வேறு ஒன்றுமில்லை. வைத்து விடுகிறேன்!'' என்று, அவன் எதுவும் சொல்வதற்கு முன்பாகவே ரிசீவரைத் தாங்கியில் வைத்துவிட்டாள்.

அண்ணன் மகளின் பேச்சைக் கவனித்து, ''டெலிபோனில் யார் சுந்தரி? என்ன தப்புக் கணக்கு?'' என்று ரஞ்சிதம் விவரம் கேட்டாள்.

இந்தக் கேள்வியை எதிர்பார்த்தே இருந்ததால், ''பெரிதாக ஒன்றும் இல்லை, அத்தை. அன்று மொத்தச் சாமான் வாங்கப் போனபோது சிலதின் விலையைத் தப்பாகக் கணக்குப் போட்டுவிட்டு, அது பற்றிக் கேட்டிருந்தேன். அது பற்றித்தான் பேசினேன். பெரிதாக ஒன்றும் இல்லை. அடுத்த வாரத்து மெனு தயார்ப் பண்ணி விட்டீர்களா, அத்தை? காய்க் கூட்டுகளை மாற்ற வேண்டும் என்று பார்த்தோமே!'' என்று பேச்சைத் திசை மாற்றச் சுந்தரியால் முடிந்தது.

எப்படியோ மனோகரனிடம் ஒரு வகையாய் மன்னிப்புக் கேட்டாயிற்று என்றாலும், அத்தோடு முடியாமல், சுந்தரியின் மனதில் இருந்த அழுத்தம் மறைய மறுத்தது.

பேச்சின் கடுமைக்குச் சரியான அளவு ஈடு செய்யவில்லையோ, அதனால்தான் இப்படி இருக்கிறதோ என்று அவளே யோசித்துப் பார்த்தாள்.

ஆனால், பேச்சுத் தவறு என்று ஒத்துக்கொண்டு, வருத்தமும் தெரிவித்து விட்டாள். இரண்டு தலைமுறை

விரோதம் எனும்போது, இதற்கு மேல் பெரிய விளக்கம் எதுவும் தேவை இருப்பதாக, அவளுக்கே தோன்ற வில்லை!

ஏன், அவனும்தான் சுந்தரியிடம் கடுமையாக என் னென்னவோ கூறியிருக்கிறான். மன்னிப்பா கேட்டான்? விளக்கமே போதும் என்று விட்டு விடவில்லையா?

எனவே, சோர்வின் காரணம், மனோகரனிடம் மன்னிப்புக் கேட்கிற விஷயம் அல்ல என்று அவளுக்கே தெளிவுதான்.

ஆனாலும்...

தன் மன உளைச்சலை மறைத்துக் கொண்டு அன்றாட வேலைகளில் சுந்தரி ஈடுபட்டாலும், கூடவே இருக்கும் உறவினரின் கண்களில் அது படாமல் இல்லை.

கண்ணபிரானும், சுமதியும் திகைப்புடன் கூடிய அர்த்தமுள்ள பார்வைகளைப் பரிமாறிக் கொள்ள, ரஞ்சிதம் ஆத்திரப்பட்டாள்.

''என்ன மாதிரிக் கனவிலும் எதிர்பார்க்க இயலாத விதத்தில், காரியம் கைகூடி வந்திருக்கிறது, உற்சாகத்தில் துள்ளிக் கொண்டு மடமடவென்று வேலையைப் பாராமல், உம்மணாமூஞ்சியாக இருக்கிறாயே! உனக்கு என்னதான் வந்து விட்டது? உடம்பு கிடம்பு சரியில்லை என்றால், முதலில் டாக்டரைப் போய்ப் பார்! சின்னப் பிள்ளை மாதிரிப் 'பே' என்று விழிக்காதே!'' என்று அதட்டினாள்.

கணவனைப் பார்த்துவிட்டு, ''ஒரு நாலு நாள், அவள் போக்கில் விட்டுவிடுங்கள், அண்ணி. தானாகச் சரியாகி விடுவாள்!'' என்று மகளுக்காகப் பேசினாள் சுமதி.

ஆனால், "பாமி பிறந்து, உனக்கு உடம்புக்கு வந்ததில் இருந்து, முழுக்க முழுக்க நான் வளர்த்த பெண், சுந்தரி! அவளைப் பற்றி, எனக்கு நீ சொல்கிறாயா?" என்று நாத்தனார் அவள் மீது பாயவும், முகம் வாட ஒதுங்கிப் போனாள் அவள்.

நாத்தனாரின் இழப்புகளால், அவளுக்குக் கொடுக்கப் பட்டு வந்திருக்கும் தனிப்பட்ட உரிமைகளுக்குப் பணிந்து போய்த்தானே, அவளுக்குப் பழக்கம்!

அவள் மட்டுமல்ல, அந்த வீட்டில் எல்லோருமே!

உயிரோடு இருந்த காலத்தில், சிங்கம் போல வாழ்ந்த மாமனாரும்கூட, மகளிடம் மறுத்துப் பேசியது இல்லை.

பெரியவருக்குப் பிறகு, கண்ணபிரானும் அப்படித் தான்!

கணணபிரானுடைய மனைவி மட்டும் மாறி நடக்க முடியுமா?

ரஞ்சிதம் கெட்டவள் அல்ல என்பதால், இன்றுவரை பெரிதாகப் பிரச்சினை எழவில்லை.

ஆனால், இப்போது சுமதிக்குக் கவலையாக இருந்தது.

தாயின் வாட்டத்தைக் கவனித்த சுந்தரிக்கும் உறுத்தலாகிவிட்டது. தன்னால், இது வேறு துன்பமா என்று எண்ணியவள், ரஞ்சிதத்தின் முன்னிலையிலேனும், மகிழ்ச்சியோடு இருப்பது போல நடிக்கத் தொடங்கினாள்.

ஆனால், ஓடையோரத்து வீட்டை ஹோட்டலாக மாற்றும் வேலை மட்டும், அவளுக்குத் தலைவலி ஏற்படுத்துவதாக, வேண்டா வெறுப்புடன் செய்வதாக இருந்தது.

செல்வநாயகியின் தோட்ட வீடு, வேகமாகத் தயாராகிக் கொண்டு இருந்தது.

பெரிய வீட்டு வேலையைச் சீக்கிரமாகத் தொடங்கும் ஆர்வத்தில், இந்த வீட்டை ரஞ்சிதம் அவசரக் கோலத்தில் கட்டிவிடக் கூடாதே என்றெண்ணிச் சுந்தரி, அந்த வீட்டு வேலையை அடிக்கடி போய்ப் பார்த்தாள்.

அதன் மூலம், செல்வநாயகிக்கும், அவளுக்கும் இடையே அன்பு பெருகி வந்தபோதும், டாக்டர் மனோ கரனை அவள் சந்திக்குமாறு நேரவில்லை.

வேலை அதிகம் என்று, தனக்குப் பதிலாகத் தேர்ச்சி பெற்ற ஒரு நர்சை அனுப்பிச் செல்வ நாயகிக்கு வேண் டியதை அவன் குறைவின்றிச் செய்தபோதும், டாக்டரைக் காணாதது, அந்த முதிய பெண்மணிக்கு வருத்தமாகவே இருந்ததை அறிந்து, சுந்தரியின் மனமும் வருந்தியது.

ஆனால், அவன் ஏன் வரவில்லை?

அந்த வீடு கிடைக்காது என்று ஆன பிறகு, அங்கே வர, அவனுக்கு விருப்பமில்லையா என்று ஒரு தரம் தோன்றினாலும், அவன் அப்படிப்பட்டவன் அல்ல என்பது, ஏற்கெனவே தெளிவாக்கப்பட்ட விஷயம்.

அடுத்த காரணம், ஒரு வேளை சுந்தரியை அங்கே சந்திக்க நேருமோ என்ற பயமாகவும் இருக்கலாம்.

தடை நீங்கி விட்டதால், இப்போது ஹோட்டல் வேலை கள் தொடங்கியிருக்கும் என்று அவன் ஊகித்திருப்பான்.

வேலை தொடர்பாக, 'அமுதம்' குடும்பத்தினர் அங்கே அடிக்கடி வந்து போய்க்கொண்டு இருப்பார்கள். முக்கியமாகச் சுந்தரியும்! செல்வநாயகியைப் பார்க்கப் போனால், சுந்தரியையும் சந்திக்க நேரிடலாம் அல்லவா?

அவளைப் பார்க்கப் பிடிக்காமல்தான் மனோகரன் அங்கே வராதிருக்கிறான் என்ற முடிவுக்குத்தான் கடைசியாக வருத்தத்தோடு சுந்தரி வர நேர்ந்தது.

எனவே, அங்கிருந்து முன்னிலும் சோர்ந்தே அவள் திரும்பி வந்தது குறித்து, ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இந்த நிலையில், ஒரு பார்ட்டிக்காகக் கலந்த சாதங்கள் செய்யச் சொல்லி, ஹோட்டலுக்கு ஒருவர் முன் பணம் கொடுத்து ஆர்டர் செய்தார்.

ஆனால், வேண்டிய அளவு சோறு பொங்கி ஆற விட்டுக் கலவைச் சாதங்கள் செய்வதற்கான மற்றப் பொருட்களையும் கிட்டத்தட்டத் தயார் செய்து விட்ட நிலையில், நெருங்கிய உறவினருக்கு ஏதோ விபத்து ஏற்பட்டு, விழா இல்லை என்றாகி விட்டதால், ஆர்டரை ரத்து செய்யக் கேட்டார் அவர்.

அவர் அதிகாரமாகப் பேசியிருந்தால், சுந்தரி விட்டுக் கொடுத்திருக்க மாட்டாள்.

ஆனால், சந்தோஷமாகத் திட்டமிட்ட விழா தடைப் பட்ட வருத்தமும், அடிபட்ட உறவினர் பற்றிய கவலையு மாக, ''முன் பணத்தைக் கேட்கும் உரிமை கிடையாது. எனக்குத் தெரியும்! ஆனால் கடைசி நேரத்தில் சொல்லு வதால், வேறு பணம் கேட்டு விடாதீர்கள், மேடம். மருத்துவ மனைக்கே எவ்வளவு ஆகுமோ, தெரிய வில்லை...'' என்று அவர் கெஞ்சுதலாகக் கேட்டபோது, அவள் மனம் இளகிப் போயிற்று.

''இதைப் பற்றிக் கவலைப் படாமல், உங்கள் உறவினரைப் போய்ப் பாருங்கள், சார்!'' என்றுரைத்து, அவரை அனுப்பி வைத்தாள்.

''ஆனால், இந்த சாதம், மற்றதை என்ன செய்வது? கலவைச் சாமான்களை ஃப்ரிஜ்ஜில் வைத்துவிட்டு, கொஞ்சம் கொஞ்சமாகப் பயன்படுத்திக் கொள்ளலாமா?'' என்று கேட்டார் சமையல்காரர். எப்படியும், பொங்கி வைத்த சோறு, நிறைய வீணாகித்தான் போகும்!.

ரஞ்சிதம் பெரிய வீட்டுக்கும், சுந்தரியுடைய பெற்றோர் திருச்சிக்கும் சென்றிருந்தனர்.

சற்று யோசித்துவிட்டு, ''இந்தப் பக்கம் ஒரு அனாதை இல்லம் உண்டு, அல்லவா?'' என்று கேட்டு டைரக்டரி யில், இல்லத்தின் டெலிபோன் எண் கண்டுபிடித்தாள்.

ஃபோனில் பேசிவிட்டு, ''எல்லாச் சாதமும், ஆர்டர் பண்ணியது போலவே, தயாரியுங்கள். செய்து முடித்து, வேனில் ஏற்றிவிட்டு என்னிடம் சொல்லுங்கள்!'' என்று சமையல்காரரிடம் சொன்னபோது, பல நாட்களுக்குப் பிறகு, அவளது குரலில் ஓர் இலகுத் தன்மை தொனித்தது.

சாப்பாட்டைத் தயார் செய்யச் சொன்னது மட்டுமின்றி, அதைக் கொண்டு போய்க் கொடுப்பதற்கும் சுந்தரியே கிளம்பவும், 'அமுதம்' பணியாளர்கள் சற்றுத் திகைத்தனர்.

''பெரியம்மா வந்தால், என்னம்மா சொல்லட்டும்?'' என்று கவலையுடன் கேட்டார், கணக்காளர். ''அம்மா கோபப் படுவார்களே!''

''வீணாகப் போவதை, ஆசிரமத்துக்குக் கொடுத்து, நான் விளம்பரம் பெறப் போயிருப்பதாகச் சொல்லுங் கள், கோபம் மறைந்து விடும்!'' என்று புன்னகை செய்தாள் பெண்.

"சத்யா, இது கூட்டம் வருகிற நேரம் அல்ல! அத்தை வருகிறவரை, நீ சமாளித்துக் கொள்வாய், அல்லவா? உன்னால் முடியும்தானே?" என்று, அவளுக்குத் தட்டிக் கொடுக்கிற பாவனையில், சுந்தரி கேட்கவும், வர வேற்புப் பெண் சத்யாவின் முகம் பூவாய் மலர்ந்தது.

"கட்டாயம்க்கா!" என்று, பற்கள் அனைத்தையும் காட்டிச் சிரித்தாள் அவள்.

உணவை ஏற்றிக் கொண்டு, எதற்கும் இருக்கட்டும் என்று, இரண்டு பரிசாரகர்களையும் அழைத்துக் கொண்டு, வேனில் முன்புறமாக, டிரைவரின் அருகே அமர்ந்து சென்றபோது, சுமையெல்லாம் வடிந்து, காற்றில் பறக்கிற உணர்வு சுந்தரிக்கு.

திருச்சிக்கும், இந்திரபுரிக்கும் இடையே, நெடுஞ் சாலையிலிருந்து, இரண்டு கிலோ மீட்டர் உட்புறமாகத் தள்ளி இருந்தது, அந்த இல்லம்.

உணவு தேவைப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே இல்லத்தை அடைந்துவிட, மற்றவர்களை உணவோடு வேனில் இருக்கச் சொல்லிவிட்டுச் சுந்தரி இறங்க, இல்லத்துப் பணியாள் ஒருவன் வந்து, விவரம் கேட்டு, நிர்வாகியிடம் அழைத்துச் சென்றான்.

மூன்றிலிருந்து, பதினைந்து வயதுக்குள் இருக்கக் கூடும் என்று முப்பத்தைந்து, நாற்பது பிள்ளைகள் இல்லத்தில் இருப்பதாகச் சுந்தரி கேள்விப் பட்டிருந் தாள்.

ஐந்து வயதுக்கு உட்பட்ட பத்துப் பிள்ளைகள் மட்டும் ஓலை வேய்ந்த, பெரிய ஹாலில் இருந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

இல்லத்தோடு எந்தக் கணக்கிலும், சேர்க்க முடியாமல், நாகரீக உடையணிந்த அழகிய பெண் ஒருத்தி, ஹாலில் அந்தச் சிறு பிள்ளைகளோடு, ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

''ஐ, அக்காவைப் பிடிச்சாச்சி!'' என்று ஒரு பிள்ளைக் குரல் உரத்து ஒலிக்க, கிளுகிளுவென்ற சிரிப்புடன் எல்லோருமாக, சுத்தமாயிருந்த தரையில் ஒருவரோ டொருவர் முட்டி மோதிக் கொண்டு சரிந்தனர்.

பார்த்துக் கொண்டே உள்ளே வந்த சுந்தரியின் முகமும் புன்னகையைப் பூசிக் கொண்டது.

இலவசப் பணிபுரியும் நிர்வாகி அம்மாளின புகழ் பாடியபடி, வழி காட்டி வந்த பணியாள், ''அதோ இருக்கிறாங்க!'' என்று அந்த ஹாலின் ஓர் ஓரமாக அமர்ந்து ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம், சுந்தரியை அழைத்துச் சென்றான்.

அத்தை ரஞ்சிதத்தை ஒத்த மத்திய வயது. மற்றப்படி, அந்தப் பெண்மணியின் தீர்க்கமான முகமும், கம்பீர மாக அமர்ந்திருந்த விதமும், சுந்தரியை வெகுவாகக் கவர்ந்தன.

அவரது கம்பீரத்தைத் தூக்கிக் காட்டுவது போல, அந்த அம்மாவின் காதில் ஜொலித்த வைரத்தோடு, சுந்தரிக்கு வியப்பூட்டியது!

இந்த இடத்தில் வைரத் தோடா என்று எண்ண இய லாதவாறு, அந்த நகை வெகு இயல்பாக அந்தப் பெண் மணியோடு பொருந்தியிருப்பதைக் கவனித்தவாறே, சுந்தரி அந்தப் பெண்மணியை நெருங்கினாள்.

அறை நடுவே இன்னொரு சந்தோஷக் கூச்சல் எழ, அந்தப் பெண்மணியின் கவனம் அங்கே திரும்பியது. சுந்தரியின் பார்வையும்.

சிறுவர்களோடு திரும்பியபோது, அந்த மத்திய வயது அம்மாவின் முகபாவம், சுந்தரிக்கு மேலும் வியப்பூட்டியது.

என்னவோ, அந்த இளம் பெண்ணின் மனதில் இருப்பதைக் கண்டுபிடித்து, அவளை மதிப்பிட முயற்சிப்பது போன்ற தோற்றம்.

ஏன் என்று யோசிக்கும்போதே, அந்த அம்மாவின் பார்வை, நெருங்கி வந்து கொண்டிருந்த சுந்தரியிடம் திரும்பி, வியப்புற்று விரிந்தது.

கூட வந்த பணியாள் விவரம் கூறுமுன்பாகவே, அறிந்தாற் போலப் புன்னகைத்து, "ஹோட்டல் அமுதத்திலிருந்துதானே? சீக்கிரமாக வந்து விட்டாயே!" என்றவள் சுந்தரியை மலர்ந்த விழிகளால் நோக்கி, "என் பையன் சொன்னது சரியாக... நீ மிகவும் அழகாகத்தான் இருக்கிறாய்!" என்று மகிழ்ச்சியோடு கூறவும், சுந்தரி திகைத்தாள்.

மகன்? யாரது? இந்தப் பெண்மணியின் ஏதோ ஒன்று முன்பே தெரிந்தாற் போல...

கூட வந்த ஆள் விளக்குவதற்கு முன்பாகவே, அவளுக்குச் சட்டெனப் புரிந்தது.

இந்தப் பெண்மணி, டாக்டர் மனோகரனுடைய தாயார்.

அத்தை ரஞ்சிதத்தின் வாழ்வைக் கெடுத்த, அந்தச் சாந்தி மாதவன்.

இந்த வயதிலும் எவ்வளவு அழகு!

சுந்தரியின் மனதில் எண்ணற்ற பல எண்ணங்கள், புயலடிக்கும் நேரத்துக் கடல் அலைகள் போல ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொண்டு ஒழுங்கற்று எழுந்தன.

ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக உயரமாகத் தோன்றியது, அங்கிருந்த இன்னோர் இளம் பெண்ணை, மனோகரனுடைய தாயார் ஏன் மதிப்பிட முயன்றாள் என்ற கேள்விதான்.

மதிப்பீடு சிறப்பாக அமைந்தால், என்ன செய்வதாக உத்தேசம்?

## 13



திருமதி சாந்தி மாதவனைப் பற்றிச் சுந்தரி நிறையக் கேள்விப் பட்டிருந்தாள்.

ரஞ்சிதம் அத்தைக்கும், குடும்ப நண்பருடைய மகனான மாதவனுக்கும் நிச்சயிக்கப்பட்டிருந்த திருமணத்தை, சற்று வசதி உள்ள டாக்டர் என்பதால், மாதவனுக்கு வலை வீசிப் பிடித்துக் கெடுத்து நிறுத்தினாள். மாதவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் மனதை வருத்தவென்றே, அங்கேயே குடித்தனம் நடத்தினாள். அந்தப் பகுதி மக்களின் வீட்டு விழாக்களுக்கு, எப்படி ரதி மாதிரி அலங்கரித்துக் கொண்டு வந்து, ரஞ்சிதத்தைச் சிறுமைப்படுத்தினாள்!

இப்படி ரஞ்சிதம் பலது சொல்லுவாள்.

எப்போதும் சொல்லிச் சொல்லி அறுப்பதில்லை! ஆனால், ரஞ்சிதத்துக்கு ஏதேனும் கோபம், வருத்தம் என்றால், சுற்றி வளைத்து அந்தப் பழி, சாந்தி மாதவனின் மீதுதான் விழும்.

ஊர் உலகத்தைப் போலத் திருமணம் செய்துகொண்டு, குழந்தை, குடும்பம் என்று சந்தோஷமாக வாழ விடாமல், அவளைக் கெடுத்தது, அந்த ராட்சசிதானே!

கணவர் இறந்த பிறகும், தர்ம காரியம் என்கிற பெயரில், ஊர் சுற்றுவதாகவும் ரஞ்சிதம் சொல்லியிருக்கிறாள்.

இழி வேலைகளுக்குத் தாயாருக்கு நேரம் கிடையாது என்று மனோகரன் கூறியதைக் கூட, அப்போது சுந்தரி பெரிதாக எண்ணவில்லை! தாய்ப்பாசம் அவனைப் பேச வைத்ததாகத்தான் நினைத்தாள்.

ஆனால், திருமதி மாதவனின் நேரம் செலவிடப் படுவது இப்படி என்றால், அதைக் குறை கூறுவது தவறு அல்லவா?

இப்போதெல்லாம், அடிக்கடி, அத்தை தப்பு செய்வது போல, அவளுக்கு ஏன் தெரிகிறது?

மனோகரன் அப்படிக் குறிப்பிடுவதாலா?

எதிரிக் குடும்பத்தைச் சார்ந்த அவனது பேச்சை, மனதுள் ஏற்கலாமா?

இப்படிப் பலப் பல எண்ணங்கள் சுந்தரியுள் தோன்றிக் குழப்பியபோதும், அவைகளைப் பின்னே தள்ளிக் கொண்டு, அந்தப் பேர் தெரியாத பெண்ணை, இந்த அம்மாள் எதற்காக அந்தப் பார்வை பார்த்தாள் என்ற கேள்விதான், அவளை மிகவும் பாதித்தது.

அவள் அழகிதான்!

ஆனாலும், ஏன் அந்த ஆராய்ச்சிப் பார்வை?

மருமகளாக ஆக்கிக் கொள்ளப் போகிறாளா?

இத்தனைக்கும், சுந்தரியைத்தானே மனோகரன் அழகி யென்று சொன்னது?

சுந்தரியின் மனம் ஏனோ அதிர்ந்து, படபடத்து, அதிக மாகக் குழம்பியது. பழக்கமற்ற குழப்பம்! படபடப்பு!

இந்தக் குழப்பத்தை யாரிடமும் வெளிப்படையாகக் கேட்டுத் தெளிவடைய முடியாது என்பதை உணர்ந்து, சுந்தரி அதை ஒதுக்கி, வேறு பேச முயன்றாள்.

"நீங்கள் டாக்டர் மனோகரனுடைய தாயாரா?" என்று, சும்மாவானும் வினவினாள்.

"ஆமாம்மா! நீ வந்த அன்றே, அழகான வரவேற்புப் பெண் அமுதத்துக்கு வந்திருக்கிறாள், ஹோட்டலில் கூட்டம் பிய்த்துக் கொள்ளப் போகிறது என்றான். லேசில் யாரையும் இப்படிச் சொல்ல மாட்டானா, அன்றி லிருந்தே உன்னைச் சந்திக்க, எனக்குக் கொள்ளை ஆசை. கடைசியாக, இன்றுதான் என் ஆசை நிறைவேறி இருக்கிறது!" என்று சாந்தி மகிழ்ச்சியுடன் தெரிவிக்க, சுந்தரி இன்னொரு விதமாகக் குழம்பினாள்.

அதன் பிறகான சந்திப்புகளைச் சொல்லியிருப்பானா?

முக்கியமாக, அவள் யார் என்று?

சொல்லியிருந்தால், பேச்சில் இந்த இனிமை எப்படி இருக்க முடியும்?

ஆனால், "வீட்டில், அப்பா, அம்மா அத்தை எல் லோரும் சுகமா?" என்ற சாந்தியின் அடுத்த கேள்வி யில் சுந்தரிக்குத் தூக்கிவாரிப் போடாத குறைதான்.

தெரிந்திருக்கிறதே! தெரிந்திருக்கிறது! ஆனால், அவள் யார் என்று தெரிந்த பிறகும் பிரியமாகப் பேசுகிறாளே!

"எல்லோரும் சுகம்!" என்று தடுமாறியவளின் மூளை வேகமாக வேலை செய்தது.

இவர்கள் விஷயத்தில், அத்தை கண்ட விதம்தான் தவறா?

எண்ணியிருந்த வாழ்வு இல்லை என்று ஆனதும், எல்லாப் பழியையும், இடையில் வந்தவள் மேல் சுமத்தத் தோன்றி விட்டதோ?

இருக்கலாம்.

மற்றப்படி, அத்தை சொன்ன மாதிரிக் கெட்டவளாகச் சாந்தி மாதவன் இருந்திருந்தால், 'ஹோட்டல் அமுத'த்தி லிருந்து பேசுவதாகச் சொன்னதுமே, 'சீ போ! உன் பிச்சை ஒன்றும் வேண்டாம்!' என்று, முகத்தில் அடித்த மாதிரி மறுத்திருக்கலாமே!

"இந்தக் குழந்தைகளுக்கு, நாலு வகை நல் உணவு கிடைப்பது சந்தோஷம். இங்கே தயாரானதை இரவுக்கு வைத்துக் கொள்ளச் சொல்லுகிறேன்!" என்றுரைத்த குரலிலும் குறைப்பட எதுவும் கிடையாது.

அதற்கு மேல், சுந்தரியிடம் அன்பாகப் பேசியது வேறு.

அல்லது, இதெல்லாம் நடிப்பா?

வார்த்தைக்கு வார்த்தை, தான் ரொம்ப யோசிப்பது போலத் தோன்றவும், "இங்கே உணவு நேரம் எப்போது அம்மா? அதோ, அவர்களும், எங்களைப் போல வந்தவர் களோ, ஏதேனும் கொண்டு வந்திருந்தால், சேர்த்துப் பரி மாற வேண்டும் அல்லவா?" என்று வினவினாள் சுந்தரி.

அப்பா! ஒரு கல்லில் இரண்டு மாங்காயாக, எப்படியோ, அந்தப் பெண்ணையும் பேச்சில் கொணர்ந்தாயிற்று.

அவளைப் பற்றிய மர்மம், இப்போது தெரிந்து விடக் கூடும்!

சிறு பரபரப்புடன் எதிர்பார்த்தவளை ஏமாற்றாமல், மனோகரனுடைய தாய் முழு விவரமே தெரிவித்தாள்.

"அவள், நீ நினைக்கிற மாதிரி இல்லம்மா! மனோவுடைய நண்பருக்கு அண்ணன் மகள். நீனா என்று பெயர். ஒரு வகையில், அவனிடம் சிகிச்சை பெறும் நோயாளி என்றும் சொல்லலாம். பார்த்தால், நோயாளி போலத் தெரியவில்லை அல்லவா? உடம்புக்கு ஒன்றும் இல்லை. ஒரு நோயாளியைப் பற்றி, அடுத்தவரிடம் சொல்லக் கூடாதுதான்! ஆனால், உன்னிடம் சொல்வதற்கு என்னம்மா? இந்த உலகத்திலேயே, தன்னைப் போலக் கஷ்டப்படுகிறவள் யாரும் கிடையாது என்பது, அவளது அபிப்பிராயம்! அவளை யாருக்கும் பிடிக்கவில்லையாம்! ஒரு தரம், மணிக்கட்டில் கீறிக்கொண்டு, ரத்தம் கொட்ட விழுந்து விட்டாள். மனோவிடம் வந்து நின்றார்கள், சிகிச்சை செய்து அனுப்பினான். மனோதத்துவ நிபுணரிடம் போக மாட்டாளாம்! இவனிடம் பேசினால், கொஞ்சம் நன்றாக இருக்கிறாளாம். நண்பர் வந்து கெஞ்சுகிறார்! அவனுக்கு இருக்கும் வேலைக்கு... என்னிடம் கேட்டான். 'உன்னிலும் கேடு, நாட்டிலே கோடி' என்று காட்டலாம் என்று அழைத்து வந்தேன். அக்கா, அக்கா' என்று அந்தப் பிள்ளைகள் சுற்றி வரவும் எவ்வளவு உற்சாகமாக இருக்கிறாள், பார்!" என்று நீனாவைப் பார்த்தபோது, சாந்தியின் பார்வையில், மீண்டும் கூர்மை தெரிய, சுந்தரியின் மனமும் லேசாயிற்று.

இந்தக் கூர் பார்வை, அந்த நீனாவின மன ஆரோக்கியத்தை அறிவதற்காகத்தான்.

'உன்னிடம் சொல்வதற்கு என்ன?' என்றாளே என்று சந்தோஷம்கூட.

எதிரி வீட்டுப் பெண்ணாகக் கருதவில்லை. யாரோ வாகவும் எண்ணவில்லை.

வேண்டியவளாக நினைத்துச் சொன்னாள். மக னுடைய சிநேகிதியாக.

அந்தச் சிநேகிதத்தை வெறுக்காமல் வரவேற்பவளாக.

உற்சாகத்தோடு பார்த்தபோது, பள்ளியிலிருந்து வந்த பெரிய சிறுவர், சிறுமிகள் ஹாலுக்குள் வரிசையாக வரலாயினர்.

புன்னகையோடு நீனாவிடம் அனுமதி கேட்டுக் கொண்டு, சின்னப் பிள்ளைகளைக் கூட்டிப் போய்க் கைகால் சுத்தம் செய்து, அழைத்து வந்தனர்.

அவர்கள் எல்லோருமாக மகிழ்ச்சியோடு உணவருந் தியது, சுந்தரிக்கு மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது.

பல தினங்களுக்குப் பிறகு, அன்று அவள் அமைதி யாக உறங்கினாள்.

இத்தனைக்கும், ''எவ்வளவு பணத்தை வீணடித்து வைத்திருக்கிறாய்?'' என்று ரஞ்சிதம் திட்டியதுகூட, அவளைப் பாதிக்கவே இல்லை.

அன்றைய மகிழ்ச்சி, இது போல, இன்னும் என்ன செய்யலாம் என்று யோசிக்க வைத்தது.

அன்றாடம் மீதமாகும் உணவு வகைகளை, ஒவ் வொரு நாளுமே 'இல்ல'த்துக்குக் கொண்டு போய்க் கொடுக்கலாமா என்று யோசித்துவிட்டு, அந்த யோசனையை உடனே கைவிட்டாள்.

தினமும், இப்படி முப்பது நாற்பது பேருக்குத் தேவை யான அளவு உணவு மீதமாகாது. கொஞ்சம் கொஞ்ச மாகக் கொடுத்தால், தனக்கு, தனக்கு என்று அந்தப் பிள்ளைகளிடையே இருக்கும் ஒற்றுமை குறையக் கூடும்!

நல்லது செய்யாவிட்டாலும், பரவாயில்லை.. கெடு தலுக்கு வித்திடக் கூடாது.

அன்று பிள்ளைகள் உணவருந்தும் போது பேசிக் கொண்டிருந்தபோது, அதே தொண்டு நிறுவனம், வாழ்விழந்த பெண்களுக்காக நடத்தும் இல்லத்தில், மதியத்துக்கு மேல் சென்று, பாடம் நடத்துவதாகச் சாந்தி சொன்னது, அவளுக்கு நினைவு வந்தது.

ஆனால், மனோகரனுடைய அன்னையைப் போலத் தன்னால் தொடர்ந்து பொறுமையாகப் பாடம் நடத்த முடியும் என்று, சுந்தரிக்குத் தோன்றவில்லை.

அதைவிட.... சட்டென முடிவு செய்தாள் அவள்.

இதுதான் சிறந்தது. மனோகரனுக்கும் உதவியாக இருக்கும். மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

மறுநாள் ஹோட்டலுக்குச் சமையல் சாமான்கள் வாங்கப் பெற்றோர் இருவரும் கிளம்பியது, சுந்தரிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''என்ன அவ்வளவு அதிசயம்? நீ படித்துக் கொண் டிருந்தபோது, நாங்கள்தானே வாங்கிக் கொண்டிருந் தோம்?'' என்றாள் தாயார்.

''அம்மா சொல்வது சரிதான், சுந்தரிக் குட்டி. ஆனால் அப்போதெல்லாம், இருவரில் யாராவது ஒருவர் போய் வாங்கி வருவார்கள். இப்போது இளமை திரும்பி

யிருக்கிறதா? இரண்டு பேரும் ஜோடியாகக் கிளம்பு கிறார்கள்!'' என்று ரஞ்சிதம் கிண்டலாகச் சிரித்தாள்.

வியப்புடன் நோக்கி, ''இப்படிச் சிரித்துக்கொண்டே இருங்கள் அத்தை. பார்க்க அழகாக இருக்கிறது!'' என்று விட்டுப் பெற்றோரிடம் திரும்பி, ''இன்னைக்கு நான் பார்த்துக் கொள்கிறேன், அப்பா! அப்படியே, எனக்குச் சில சாமான்கள் வாங்க வேண்டியிருக்கிறது!'' என்றாள் அவள்.

''ஹூம்! எங்களுக்கு மட்டும் எதுவும் வாங்க வேண்டி இராதாக்கும்?'' என்று பதிலுக்குக் கேட்ட போதும், ''சரி சரி, நாங்கள் இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளு கிறோம்! இன்று நீ போய்வா!'' என்று இலகுவாகவே வழியனுப்பி வைத்தனர் பெற்றோர்.

சாமான்களுக்கான பில்லைப் போட்டுவிட்டு, ''எல்லாப் பொருளையும், சரி பார்த்து வாங்கி வேனில் ஏற்றுங்கள். நான், இதோ, அரை மணி நேரத்தில் வந்து விடுகிறேன்!'' என்று, டிரைவருக்கு வேலை கொடுத்துவிட்டுச் சுந்தரி கிளம்பி விட்டாள்.

எதிர்பாராத நேரத்தில் வாயில் மணி ஒலிக்கவும், பயந்து கொண்டே வந்து லென்ஸ் வழியே பார்த்த பாலு சாருக்கு மிகுந்த மகிழ்ச்சி.

அமெரிக்காவில் இருக்கும் பேரன், ஜெர்மனியில் இருக்கும் பேத்தி எல்லோரையும் ப்ற்றிப் பெருமை யாகப் பேசினார்.

''அந்த ஆங்கிலமே வேறும்மா! நான் அந்தக் காலத்து எம்.ஏ. எனக்கே பாதி புரியாது. தெரியுமா? அப்படித் தடதடவென்று பேசுவார்கள்!'' என்று பெருமைப்

பட்டவர், கூடவே, ''அதுங்க குரலைக் கேட்டே, மாசக் கணக்கா ஆகிப் போச்சு!'' பெருமூச்சும் விட்டார்.

அதாவது, பணத்தை அனுப்புவதோடு பொறுப்புத் தீர்ந்தது என்று, அருமை மக்கள் டெலிபோனில் கூடப் பேசுவது இல்லை.

உள்ளூர எழுந்த கோபம், பரிதாபத்தைக் காட்டிக் கொள்ளாமல், அவரோடு சேர்ந்து காபி குடித்து, புதிதாகக் கொஞ்சம் காபி போட்டு ப்ளாஸ்க்கை நிரப்பி வைத்துவிட்டு, அவரிடம் விடைபெற்றாள் அவள்.

டாக்டருக்குக் கிடைத்த பிரியாவிடை, தனக்கும் கிடைத்தது, அவளுக்கே ஆச்சரியம்தான்!

விரைவிலேயே, இன்னொரு முறை வருவதாகச் சொல்லி விட்டுக் கிளம்பினாள் அவள்.

உள்ளூர நெருடிக் கொண்டிருந்த உறுத்தல் மறைந்த விதத்தில், மறுநாளே, ஏதோ சாக்கை வைத்துக் கொண்டு கிளம்பிப் போய், அன்றைய தினம் மனோகரன் இரண் டாவதாக அழைத்துச் சென்ற முதிய பெண்மணியைப் போய்ப் பார்த்தாள்.

அவருக்கு உதவியாக, வீட்டைக் கொஞ்சம் தட்டிக் கொட்டிச் சுத்தம் செய்து, சந்தோஷப்படுத்தி விட்டு வந்தாள்.

ஏதோ, தன்னால் ஆன உதவியைச் செய்கிறோம் என்பதே மகிழ்ச்சியைத் தர, மனோகரனின் மனோ பாவம்கூட, நன்கு புரிந்து விட்டதாக எண்ணினாள்.

அவளது பணிகளை அறியும்போது, எவ்வளவு சந்தோஷப்படுவான் என்று எண்ணிப் பார்க்கும்போதே, அவளுக்குப் பூரிப்பாக இருந்தது.

ஆனால், மனோகரன் அப்படி ஒன்றும் பூரிப்படைய வில்லை என்பதே அவளுக்குச் சற்று அதிர்ச்சிதான். அதற்கு மேலாக, அவன் ஆத்திரப்பட்டது அநியாய மாகக் கூடத் தோன்றிற்று.

அநியாயமோ, நியாயமோ, அவள் மீது அவன் ஆத்திரப்பட்டது உண்மை.

## 14



இல்லத்துக்குச் சென்று, அங்குள்ள பிள்ளை களுக்கு உணவு கொடுத்தது, அவனது பரிவுக் குரிய பெரியவர்களைப் போய்ப் பார்த்து, உதவி செய்தது எல்லாமே, விரைவிலேயே மனோகரன் காதுக்குப் போகும் என்பது, சுந்தரிக்கு நிச்சயம்தான்.

அவனுடைய அன்னை நிச்சயமாகச் சொல்லியிருப்பார்.

அதே போலப் பாலுசாரும், சரசுவதி அம்மாளும்கூட, ஒரு சமயம் மறந்தாலும், இன்னொரு வேளையில், அவனிடம் சொல்லுவார்கள் என்று, அவள் நிச்சயமாக நம்பினாள்.

மனோகரனைச் சந்தோஷப்படுத்தும் நோக்கத்தோடு அவள் இந்தச் செயல்கள் எதையும் செய்யத் தொடங்க வில்லைதான். செய்ததால் கிடைத்த நிம்மதியே பெரி தாகத்தான் தெரிந்தது.

ஆனால், அது பற்றி யோசிக்கையில், அவன் மகிழக் கூடும் என்று சுந்தரி பெரிதும் எதிர்பார்த்தாள்.

இவர்களோடு, இன்னும் அதிகமாகச் செலவிட அவ காசம் இல்லையே என்று வருந்துகிறவன்தானே!

வருத்தத்தைக் குறைப்பது, ஒரு வகை உதவிதான் அல்லவா?

ஒரு நாள் சரஸ்வதி அம்மாளின் வீட்டுக்குப் போய் விட்டுத் திரும்புகிறபோது, திடுமென மனோகரன் எதிர்ப்பட, ஆனந்தமான அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு, புன்னகை செய்தாள்.

''என்ன டாக்டர், இன்றைக்குத் திடீர் வருகை? இந்த ஆன்ட்டி வீட்டுக்கு நீங்கள் பழக்கமாக வருகிற நாள், இது இல்லையே!'' என்றாள் முகத்தில் முறுவலோடு.

பதிலாக அவனது முகம் மலராததே, அவளுக்கு வியப்புதான்!

''அதைக் கணக்கிட்டுத்தான், நான் இல்லாத நேரம் பார்த்து, இங்கே வந்துவிட்டு ஓடுகிறாயா?'' என்று, அவன் கடுமையாக வேறு கேட்கவும், எதிர்பாராத இந்தத் தாக்குதலில் அவள் திகைத்துப் பின், சுள்ளென்று பொங்கிய ஆத்திரத்துடன் நிமிர்ந்தாள்.

இதென்ன? இவன் வைத்தியம் செய்வதால், இவன் மட்டும்தான் இங்கே வரலாம் என்று எண்ணினானா? அல்லது, இங்கே வருகிறவர்கள், இவனது அனுமதி கேட்டுத்தான் வர வேண்டுமா?

''இது, திருமதி சரசுவதி ஸ்ரீனிவாசனின் வீடு. இங்கே நான் வருவதும், போவதும் அவர்களுக்கும் எனக்கும் இடைப்பட்ட விஷயம்! இதற்கு நீங்கள் இங்கே இருக்கிற நேரம், இல்லாத நேரம் பார்க்க வேண்டிய அவசியமோ, கட்டாயமோ எனக்கு இல்லை!'' என்றாள் அவள் - பதிலுக்குச் சீற்றத்துடன்.

அவனுக்கும், கோபம் ஒன்றும் குறைச்சலாக இல்லை. "சட்டம் பேசுகிறாயா? ஆனால், நீ எதற்காக இதை யெல்லாம் செய்கிறாய் என்று எனக்குத் தெரியாது என்றா எண்ணுகிறாய்? உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு, உனக்கே இது நியாயமாகப் படுகிறதா?" என்று திருப்பிக் கேட்டான் மனோகரன்.

'இதையெல்லாம்' என்றால், சுந்தரி செய்து வருவன வற்றை அவன் அறிந்திருக்கிறான் என்றுதான் அர்த்தம். ஆனால், நியாயம் இல்லாததாக, இதில் அவள் என்ன செய்து விட்டாள்?

அவன் சந்தோஷப்படுவான் என்று எண்ணினால்...

"அப்படியென்ன உலக மகா அநியாயம் செய்து விட்டேன் என்கிறீர்கள்?" என்று எரிச்சலோடு கேட்டாள் அவள்.

"என்னவா? இவர்களுக்கு நடக்க இருந்த பெரிய நன்மை கெட்டுப் போயிற்று! அப்படிக் கெட்டுப் போகப் பெருமளவு காரணம் நீ! உறுத்துகிற மனச்சாட்சியை, இப்படிச் சின்னச் சின்ன இரை போட்டுச் சமாதானப் படுத்திக் கொள்கிறாய். அதுதானே? இந்த முதியவர் களுடைய பிள்ளைகள் செய்யும் அதே வேலை... பாசத்துக்காக ஏங்குகிறவர்களுக்குப் பணத்தை அனுப் பிக் குற்ற உணர்ச்சியை மழுங்கடித்துக் கொள்கிறார்கள், அந்தப் பாவத்தைத்தானே நீயும் இப்போது செய் கிறாய்?" என்று மனோகரன் கேட்கவும், சுந்தரி பெரிதும் அதிர்ந்து போனாள்.

கடவுளே! இப்படியெல்லாம் அவள் நினைக்கக் கூட இல்லையே என்று தவிப்புடன் எண்ணும்போதே, தன்

உள் மனதில் இப்படியொரு நோக்கம் இருந்திருக்குமோ, என்று அவளுக்கே தோன்றிவிட்டது.

மற்றப்படி, இந்த உதவிகளைச் செய்யச் செய்ய, சுமையும் உறுத்தலும் நீங்கி, ஆறுதலும் நிம்மதியும் கிடைப்பானேன்?

ஆனால், இவன் சொல்லுகிற மாதிரி, அவள் திட்டம் போட்டு எதையும் செய்யவில்லை என்பது, அவளுக்கு நிச்சயம்.

உண்மை அப்படியிருக்க, எவ்வளவு கொடூரமாகக் குற்றம் சாட்டிவிட்டான்.

ஒரு கணம், தன்னைத் தானே சந்தேகப்படுகிற நிலைக்கு, அவளைக் கொண்டு போய் விட்டானே!

அவளை இவ்வளவு மோசமாக நினைக்க, அவன் என்ன பெரிய மகாத்மா?

சுருசுருவென்று எழுந்த ஆத்திரத்துடன் யோசிக்கையில், செல்வநாயகி கூறியது நினைவு வந்து கை கொடுத்தது.

"'உன் கண்ணிலுள்ள உத்திரத்தை எடுத்துவிட்டு, அடுத்தவர் கண்ணிலுள்ள துரும்பைப் பார்!' என்று ஏசுநாதர் சொல்லி வைத்திருப்பது உங்களுக்காகத்தான் என்று நினைக்கிறேன். இல்லாததெல்லாம், என்னைச் சொல்லுகிறீர்களே, நீங்கள் எப்படியாம்? அந்த வீடு இல்லை என்று ஆனதும், செல்வநாயகி ஆன்ட்டியைப் போய்ப் பார்ப்பதைக்கூட நிறுத்தி விட்டீர்கள்தானே? அப்புறம், நீங்கள் என்ன மகா உத்தமர்?" என்றாள் அவள் ஏளனமாக.

''விட்டால், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சைப் போட்டு விடுவாய் போல! ஆன்ட்டியைப் பார்க்க நான் வரவில்லை என்றால், எனக்கு வேலை அதிகம் என்று அர்த்தம். அதைச் சொல்லியும் அனுப்பியிருந்தேனே!'' என்று, எரிச்சல் காட்டினான் அவன்.

''ஆகா! அச்சுப் பிசகாமல், அந்த நர்ஸ் சொன்னார்களே! உங்களிடம் சம்பளம் வாங்கும் நர்ஸ்! வேறு என்ன சொல்ல முடியும்?''

ஆத்திரத்துடன் அவளை முறைத்துவிட்டு, ''எதையும் முப்பரிமாணத்தில், கண் முன்னே காட்டா விட்டால், உன்னால் நம்ப முடியாதே! வா. என்னோடு வந்து நீயே பார்!'' என்று அவளைக் கையைப் பிடித்து இழுத்துப் போய்ச் சற்றுத் தள்ளி நிறுத்தியிருந்த காரில் ஏற்றினான்.

தானும் ஏறிக்கொண்டு, காரை வேகமாக ஓட்டத் தொடங்கினான்.

நேர் எதிரே வெறித்தபடி, ''மளிகைக் கடையில் எங்கள் வேனுடன் டிரைவர் எனக்காகக் காத்திருப்பார்!'' என்றாள் சுந்தரி - ஒருவித உணர்ச்சியும் காட்டாத குரலில்.

பையில் இருந்த செல்ஃபோனை, இடக்கரத்தால் எடுத்து, அவளிடம் நீட்டினான் அவன். ''அந்தக் கடை எண், உனக்குத் தெரியும்தானே? கடையில் சொல்லிக் காரோட்டியைக் கூப்பிட்டு, சாமானோடு வீட்டுக்குப் போகச் சொல்லிவிடு! உன்னை நான் இந்திரபுரியில் இறக்கி விட்டு விடுகிறேன்!'' என்றான்.

சுந்தரி மறுக்கவில்லை.

அவளுக்கு, அவனது வேலை என்ன என்று தெரிய வேண்டியிருந்தது.

அத்தோடு, தன்னைப் பற்றிய குழப்பமும் தெளிய வேண்டியிருந்தது.

கூடவே, அவனுக்கும் அதைப் புரிய வைக்க வேண்டியிருந்தது.

முக்கியமாக, அவன் இருக்கும் இடத்திலேயே இருக்க வேண்டியிருந்தது.

திருச்சியின் எல்லையை ஒட்டியே, அந்த மருத்துவ மனை இருந்தது.

'சாந்தி இலவச மருத்துவமனை' என்ற பெயர்ப் பலகை பெரிதாகத் தெரிந்தது.

முன்பு பார்த்திருந்தால், ஒன்றும் தோன்றியிருக்காது. ஆனால், இப்போது, தாயார் பெயரில் இவனே நடத்துகிறான் என்று புரிந்தது.

காரில் இருந்து இறங்கியதுமே, மருத்துவமனையின் உள்ளேயும், ஒட்டியும் ஆட்களின் நடமாட்டம் அதிகம் இருப்பது தெரிந்தது.

அவள் கேள்வியாய் நோக்க, மருத்துவன் விளக்கம் சொன்னான்.

‘‘இங்கே, இந்தப் பக்கம் இருக்கிற, வசதியற்ற மக்களுக்காக அமைக்கப்பட்ட மருத்துவமனை இது. மருத்துவம் செய்வதற்காக மட்டும் இல்லாமல், சுத்தம், சுகாதாரம் பற்றிக் கற்றுக் கொடுப்பதற்காகவும் இதை இரண்டு ஆண்டுகளுக்கு முன் தொடங்கினேன். வாரத்துக்கு ஒரு நாள் முழு நேரமும் இங்கேதான். மற்றப்படி

கவனித்துக் கொள்ள ஆட்கள் இருக்கிறார்கள். கிட்டத் தட்ட, சுகாதாரம் கற்றுக் கொடுத்து விட்டோம் என்று தோன்றும். திடுமெனக் குடும்பத்தில் ஏதாவது விழா வரும்! அவ்வளவு நாள் படித்தது, மறந்து போகும்.

"இப்போதும், அப்படித்தான். குடும்ப விழா ஒன்றில், என்னத்தையோ செய்து குடித்துவிட்டு, இழுத்துக் கொண்டார்கள். வாந்தி, ஜுரம் மயக்கம் என்றதும், பயந்து ஓடி வந்தார்கள். ஒரே கூட்டம். இரண்டு வாரங்கள். கிட்டத்தட்ட முழு நேரமும் கூடவே இருந்து, கவனித்து உயிர்ச் சேதம் இன்றிக் காப்பாற்றினோம்! திருச்சி மருத்துவமனையில் இருந்துகூட முடிந்த அளவு டாக்டர்கள், மற்றப் பணி செய்கிறவர்கள் எல்லோரும் இங்கே வந்திருந்து முழு மூச்சுடன் வேலை செய்ய வேண்டியிருந்தது.

"நீயானால், என்னைப் பொய்யன் என்கிறாய். வா, உள்ளே போய்ப் பார்த்தால்தானே, உண்மை முழுவ தாகத் தெரியும்!"

அதற்கு அவசியம் இருப்பதாகச் சுந்தரிக்குத் தோன்ற வில்லை. அவன் சொன்னதே போதும்தான்.

சொல்லப் போனால், அவளது குற்றச்சாட்டிற்குக் காரணம், அவனைக் காணவே முடியாமல் போனதுதானோ என்றுகூட, அவளுக்குத் தோன்றத் தொடங்கியிருந்தது.

வருத்தம் தெரிவித்த பிறகும், ஒதுங்கிப் போனானே என்ற வருத்தமும். ஆனால், இதில் எதையும் வெளிப் படையாகச் சொல்ல முடியாமல், மனோகரனோடு நடந்தாள்.

ஆனால், அவள் உள்ளே ஏதோ குழப்பம், விடை தேடித் தவித்தது.

பெரும் பகுதி ஓலைக் கூரையே என்றாலும், மருத்துவ மனை பரவி விரிந்திருந்தது. நட்ட நடுவில், அவனது அலுவல் அறை!

அலுவல் அறையில், அவன் பார்வைக்காக வைக்கப் பட்டிருந்த முக்கியக் குறிப்புகளை மனோகரன் வேக மாகப் பார்வையிட்டபோது, சுந்தரி யோசித்தாள்.

இந்த அளவில் இலவசமாக நடத்த வேண்டும் என் றால், என்ன செலவாகும்?

அதனால்தான், அவனது லட்சியக் கனவை, முழுவது மாகச் சொந்தச் செலவில் செய்ய முடியவில்லையோ?

செல்வநாயகியின் இடம் கிடைக்காமல் போனதில், அவனது வருத்தம் அவளுக்கு இப்போது நன்றாகப் புரிந்தது!

ஆனால்...

மேலோட்டமாகப் பார்த்து விட்ட மனோகரன் கிளம்பியபோது, செல் அழைத்தது.

அவன் தனிமை தேடுவது போலத் தோன்றவும், தானே சுற்றிப் பார்ப்பதாகச் சைகை செய்துவிட்டுச் சுந்தரி கிளம்பினாள்.

இப்போதுமே, இருபது பேருக்கு மேல், படுக்கையில் கிடக்க, இரு மடங்கு புதிய நாடாக் கட்டில்களைக் கழுவிச் சுத்தம் செய்து, வெய்யிலில் காய வைத்துக கொண்டிருந்தார்கள். இவை அனைத்தும், வெகு சமீபத்தில் நோயாளிகளுக்காகப் பயன்படுத்தப் பட்டவை என்பதன் அறிகுறி.

அவசரத்துக்கு புதிதாக வாங்கிப் பயன்படுத்தி இருக் கிறார்கள்.

அதே போல நிறையக் காலி சலைன் பாட்டில்கள், பாட்டில்களை மாட்டுவதற்கான புதிய தாங்கிகள்...

திடுமென, மோசமான நிலையில் உள்ள பல நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்ய நேர்ந்ததை எடுத்துச் சொல்லும் அடையாளங்கள்.

உயிர்ச் சேதம் இன்றிக் காப்பாற்றியதை, எவ்வளவு ஆறுதலோடு சொன்னான்.

இத்தனை பேருக்கு 'டிரிப்ஸ்' இறங்குவதானால், எத்தனை பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வந்திருப்பார்கள்?

இவர்களுக்காக, மனோகரன் எவ்வளவு கவலைப் பட்டிருப்பான்! அவர்களைக் குணப்படுத்த எவ்வளவு உழைத்திருப்பான்!

முன்பே தெரிந்திருந்தால், இங்கே வந்து, ஏதாவது உதவி செய்து, மனோகரனின் பாரத்தைக் குறைத்திருக்க லாமே என்று தோன்றவும், சுந்தரிக்குத் திகைப்பாக இருந்தது.

நோயாளிகளுக்கு உதவி செய்திருக்கலாமே என்று தோன்றினால், அது மனித இயல்பு. நல்ல மனிதர்களின் இயல்பான இரக்கம்.

அனாதை இல்லத்துக்கு உணவு கொடுத்ததைப் போல!

ஆனால், மனோகரனின் பாரத்தைக் குறைப்பதற்காக அல்லவா, அவளது மனம் துடிக்கிறது. இப்போது மட்டும் அல்ல.

அந்த இரு முதியவர்களைப் பார்க்கச் சென்றதன் அடிப்படைக் காரணம்கூட, இதுவாகவே இருந்திருக்

கலாம்! ஆம், இதுதான்! அவனுக்குப் பாரம் குறைப்பது. கூடவே, அவனுக்கு சந்தோஷமாக இருக்கும் என்பதும்.

அதற்கும் முன்பே, மனோகரன் வருத்தப்படுவானே என்றுதானே, ஹோட்டலுக்கு அந்த வீடு கிடைத்த வெற்றி கூட, இனிப்பற்றுப் போனது.

ஆனால், ஏன்?

இவள் ஏன் மனோகரனுக்கு இதம் நாட வேண்டும்?

இந்தக் கேள்விக்குக் கிடைத்த பதிலில், சுந்தரி அதிர்ந்தாள்!

ஆனந்தத்துடன் கூடிய அதிர்ச்சி.

பல நாட்களாக அவளை உருட்டிப் புரட்டிய குழப்பம் மறைந்தது.

இது சாத்தியப்படுமா, அல்லவா என்றெல்லாம் யோசிக்கத் தோன்றவில்லை.

ஏதோ ஓர் ஆனந்த மயக்கத்தில் மிதந்தாள் அவள்.

## 15



என்னவோ, அன்றுவரை இருந்த பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து போய்விட்ட மாதிரி மனம் லேசாகிவிட, உத்தியான வனத்தில் உலவும் ராஜகுமாரியைப் போல நடந்து கொண்டிருந்த சுந்தரியை, "அம்மா..." என்று வேதனைக் குரல் நனவுலகத்துக்குக் கொண்டு வந்தது.

அவசரமாகச் சுற்றும் முற்றும் பார்க்கையில், "இங்கே, அம்மா!" என்று பிளைவுட் தடுப்பின் உட்புறம் இருந்து, ஒருவன் அழைத்தான்.

மற்ற மூன்று படுக்கைகள் காலியாகக் கிடக்க, ஒன்றில் படுத்திருந்த மத்திய வயதுக்காரன்தான் அழைத்திருந்தான்.

உள்ளே சென்று, "என்னப்பா வேண்டும்? நர்சைக் கூப்பிடவா?" என்று, சுந்தரி பரிவுடன் வினவினாள்.

"என்னாத்துக்கும்மா, அவங்களைப் போட்டுக் கஷ்டப் படுத்திக்கிட்டு? தாகமா இருக்குது. ஒரு லோட்டா தண்ணி தந்தீங்கன்னா, போதும்!" என்றான் அவன் தீனமாக.

மனோகரனுடைய நோயாளிக்கு உதவி செய்தாக வேண்டாமா?

அறை ஓரமாக, மேஜைமீது இருந்த மூடி போட்ட ஜக்கில் இருந்த தண்ணீரைக் கவிழ்த்து, வைக்கப் பட்டிருந்த டம்ளரில் ஊற்றி எடுத்துக்கொண்டு, சுந்தரி அந்த நோயாளியை நெருங்குகையில், "பெரிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற எண்ணமாக்கும்! என்ன வேலை, இது? முதலில், டம்ளரைக் கீழே வை!" என்று அதட்டியவாறு, மனோகரன் உள்ளே வந்தான்.

"அவருக்குத் தாகம் என்று..."

"தாகம் என்றால், யாராவது நர்சைக் கூப்பிடுவது தானே? என்ன கன்னியப்பன்?" என்று அதட்டலாகக் கேட்டபடியே, படுக்கையின் ஓரமாக இருந்த மணியை மனோகரன் அழுத்த, வெள்ளைச் சீருடை அணிந்த ஓர் இளைஞன் ஓடி வந்தான்.

"கன்னியப்பனுக்குத் தண்ணீர் வேண்டுமாம். கொடு!" என்று பணித்துவிட்டு, ஒரு கையசைவால், சுந்தரியை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

மனோகரனின் அதட்டல், சுந்தரிக்கு வருத்தம் அளித்திருந்தது.

நியாயமாகவும் தெரியவில்லை.

ஆனால், அவனிடம் பணி புரிவோர் முன்னிலையில், அவனது தவறைச் சுட்டிக் காட்ட மனமின்றிப் பேசாமலே, அவனோடு நடந்தாள் அவள். வாயைத் திறந்தால் கத்தி விடுவோமோ என்ற பயம் வேறு.

''இது ஓபி பகுதி. புற நோயாளிகளைப் பார்க்கிற நேரம் முடிந்துவிட்டது!'' என்று காலியாகக் கிடந்த வராந்தா மாதிரியான பகுதியைக் காட்டியவன், தணிந்த குரலில், ''கோபமா?'' என்று கேட்டான்.

உள்ளே இருந்த கோபமும், தாபமும், அந்தக் குரலிலும், முகத்திலும் மறைந்துவிட, ''நான் உதவிதானே செய்யப் போனேன்!'' என்றாள் சின்னக் குரலில், அவள்.

''தெரியும்.. ஆனால், அது யாருக்கு உதவி...''

''தாகம் என்றால் தண்ணீர் கொடுப்பது உதவி ஆகாதா? புது விதி சொல்லுகிறீர்களே!''

''யோசிம்மா! நீ வெளியே இருந்து வந்திருக்கிறாய். உன் கைகளில் எத்தனை கிருமிகள் இருக்கக் கூடுமோ? அத்தோடு, அவன் இப்போதுதான் நோயிலிருந்து மீண்டவன்! இந்தக் கிருமிகளை, அவன் தாங்குவானா என்பது ஒரு புறம் இருக்க, அவன் மீது எத்தனை கிருமிகள்? அவை உன்னைத் தொற்றினால்...?''

''நான் தண்ணீர்த் தம்ளரைத்தானே...''

''தம்ளரைத்தான் கொடுக்க எண்ணியிருப்பாய். ஆனால், கன்னியப்பன் மோசமானவன், சுந்தரி. அசைய

முடியாதது போல நடித்து, தூக்கிச் சாய்த்து வைத்துத் தண்ணீரைக் கொடு என்பான். அவன் அறைக்குள் நான் பெண் நர்சுகளைக்கூட விடுவதே இல்லை. அத்தோடு, அவனது கைப் பக்கத்தில் மணி இருக்கிறது. அவனுக்குத் தெரியும். அதை அடித்து, அவன் நர்சை அழைத்திருக் கலாமே! உன்னிடம் ஏன் தண்ணீர் கேட்டான்?''

''ஓ!''

''ஆமாம். மீன் குஞ்சு போல, இப்போது வாயைத் திற!'' என்று மெல்லக் கடிந்தான் மனோகரன்.

''நான்... நான் உங்களுக்கு உதவி செய்வதாகத் தான்...'' என்று மெல்லிய குரலில் தொடங்கி, முடிக் காமல் இழுத்தாள் சுந்தரி.

''தெரியும்!'' என்றுரைத்து, அவளைத் திடுக்கிட வைத்தான் அவன் -

அவள் யோசனையாக நோக்கவும், ''எனக்கு உதவி செய்யத்தான் உனக்கு எப்போதுமே விருப்பம் என்று எனக்குத் தெரியும். திருச்சியில், பாலு சாரையும் சரஸ்வதி ஆன்ட்டியையும் பார்த்துச் சின்னச் சின்னச் சகாயங்கள் செய்ததன் அடிப்படை நோக்கம்கூட அதுதான் என்பது என் ஊகம். சரிதானா? சரியாகத்தான் இருக்க வேண்டும். மீன் குஞ்சு வாயைத் திறக்கிறதே!'' என்று சிரித்தவாறு, நீயும் செய் என்பது போலச் சைகை செய்துவிட்டு, அலுவல் அறையில் இருந்த வாஷ் பேசினில், கைகளை சோப் போட்டுக் கழுவிக் கொண்டு நகர்ந்தான் மனோகரன்.

மருத்துவத் தொழிலுக்குச் சுத்தம் ரொம்பவே முக் கியம்தான்.

அவன் சொன்னபடியே செய்கிற பாவனையில், முகத்தை அவனுக்குக் காட்டாமல் மறைத்து நின்றபடி சுந்தரி யோசித்தாள்.

இவன் இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறானே, அவளது உள் அந்தரங்கத்தையும் அறிந்து வைத்திருப் பானோ என்று எண்ணுகையில், அவளையும் மீறி அவளது கன்னங்களில் கதகதப்பு பரவிற்று.

ஆனால்...

கால் பெருவிரலை அழுந்த ஊன்றி முகச் சிவப்பைச் சமன் செய்தவாறு, "எப்படித் தெரியும்?" என்று வின வினாள்.

"செல்வநாயகி ஆன்ட்டி! அந்த ஆன்ட்டிக்கு உலக அனுபவம் அதிகம் இல்லாத போதும், அறிவுக் கூர்மை அதிகம். உன் வீட்டாரிடம் இது பற்றி வாயைத் திறக் காதவர்கள். வாசுவின் முடிவை நான் ஏற்றுக்கொண்ட விதம் பற்றி, என்னென்ன விதமாகத் திரும்பத் திரும்பக் கேட்டாய் என்று என்னிடம் சொன்னார்கள்."

"எப்போது?" என்று, அவன் பேச்சில் குறுக்கிட்டுக் கேட் டாள் அவள். அவளாக மன்னிப்புக் கேட்ட பிறகும், அவன் ஒன்றும், அவளிடம் பேச முயற்சிக்கவில்லைதானே!

"நீங்கள்தான் அதற்குப் பிறகு ஆன்ட்டியைப் போய்ப் பார்க்கவே இல்லையே! இதை மூட்டை கட்டிக் கொண்டு வந்து, உங்களிடம் எப்போது சொன்னார்களாம்?"

கிண்டலாக நோக்கிவிட்டு, மனோகரன் கேட்டான். "நேரில் பார்க்க முடியாவிட்டால், ஒருவரோடு பேச முடியாதா? இது என்னம்மா?" என்று மேஜை மீதிருந்த டெலிஃபோனைக் காட்டிப் புன்னகை செய்தான்.

இதை மறந்தேனே என்று அசடு வழிந்தபோதும், அதைக் காட்டிக் கொள்ளாமல், ''வரவில்லை என்று வருத்தப்பட்டார்களே தவிர ஃபோனில் பேசியதாக ஆன்ட்டி என்னிடம் சொன்னதே இல்லையா? அதனால், பேசவும் இல்லையாக்கும் என்று எண்ணிவிட்டேன்!'' என்று சமாளித்தான் சுந்தரி.

''அதுதான் சொன்னேனே. ஆன்ட்டி கெட்டிக்காரர்கள் என்று. குறைந்த பட்சமாக வாரம் ஒரு தரம் அவர் களோடு பேசுவேன். அவர்கள் என்னை நேரில் பார்க்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டதுகூட. உனக் காகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். உன் முகம் எப்படி மாறுகிறது என்று கவனித்திருப்பார்கள்.''

கவனித்து, இவனிடம் அறிக்கை தாக்கல் செய்தார் களா?

பழைய கேள்வி மீண்டும் தோன்ற, ''ஆனால், நீங்கள் என்னிடம் பேசவே இல்லையே!'' என்று வருத்தத்தை மறைத் துக் கொண்டு, சாதாரணம் போல வினவினாள் அவள்.

''எப்படிம்மா, எப்படி? அன்றைக்கு ஹோட்டலுக்கு ஃபோன் செய்தபோது, எப்படிக் கத்தரித்தாய்? அங்கே சூழ்நிலை எப்படியோ என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொண்டு காத்திருந்தேன். நீயாக ஏதாவது செய்வாய் என்று. அதற்குள், இங்கே வேலை நெட்டி முறித்து விட்டது!'' என்று தோளைக் குலுக்கினான் மனோகரன். ''எப்படியும் ஒரு சைகை உன்னிடமிருந்து தானே வந்தாக வேண்டும்?''

அவன் சொல்வதும் சரி என்றுதான் தோன்றிற்று. அதில் முரண்பாடும் தெரிந்தது.

''ஆனால், இன்று அவ்வளவு கோபப்பட்டீர்கள்?'' என்று விளக்கம் கேட்டாள் அவள்.

''மனித இயல்பு பற்றி, ஓரளவு தெரிந்து வைத் திருப்பதால்! நீ, எனக்கு உதவி செய்ய விரும்பினாய். சரிதான். அது அடியோடு வேறு விஷயம்!

''ஆனால், அந்தப் பெரியவர்களுக்கு, அது உண்மை யான நன்மை ஆகுமா? அவர்களுக்கு நேர்ந்தது பெரிய இழப்பு என்று உனக்கு நன்றாகவே தெரியும். அதைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இப்படிச் சின்னச் சின்ன வேலைகளைச் செய்து, இதை யெல்லாம் செய்திருக் கிறேன், போதாதா என்று அதிலேயே திருப்தி அடைந்து, முடித்து விடுவது, மனித இயற்கை. அதையே நீயும் செய்யலாமா என்று எண்ணினேன். அதனால்தான், ஆத்திரப்பட்டேன்!''

அவனது விளக்கம், ஒரு விதமாய்த் திருப்தி அளித் தாலும், மற்றொரு விதத்தில், அவளைக் கடுமையாகத் தாக்கியது.

மனோகரன் சொன்னது போல, அந்தப் பெரியவர் களுக்கு நன்மை நடக்கவில்லைதான்.

அவர்களுக்கு அவள் செய்த உதவிகள், அவர்களே அறியாத அவர்களது இழப்போடு ஒத்து நோக்கினால், ஒன்றுமே இல்லைதான். அத்தோடு, இதில் ஒரு பாதகமும் இருக்கிறது. என்றேனும் நிறுத்தப்பட்டால் முன்னிலும் நோவார்கள்.

'கண்ணிழந்தான், பெற்றிழந்தான்' என்பது போல ஆகிவிடும்!

இதற்கு ஏதாவது செய்ய வேண்டும். செய்யாதவரை, மனோகரனுக்கு நிம்மதி இராது.

அவனது நிம்மதிக்காகவாவது, அவள் ஏதேனும் செய்தே ஆக வேண்டும்!

ஆதரவற்ற அந்த மாதிரிப் பெரியவர்களுக்கு, மனோ கரன் விரும்புகிற விதமாய் என்ன, எப்படிச் செய்வது என்று சுந்தரி தீவிரமாக யோசிக்கத் தொடங்கினாள்.

அந்த ஹோட்டல் அமைக்கும் உரிமை மட்டும் அவள் கையில் இருந்தால், அந்த வேலையை அடியோடு நிறுத்தி விடுவாள். ஆனால், அந்த அதிகாரம் பெரும் பாலும், ரஞ்சிதத்திடம் இருந்தது.

அந்த உரிமையை அவள் விட்டுக் கொடுக்கப்போவது இல்லை என்பதோடு, கட்டடக் கலை நிபுணர் கருத்தும், எதிராக அல்லவா இருக்கிறது!

சுந்தரியின் கண் முன்னே சொடக்குப் போட்டு, அவளது கவனத்தைக் கவர முயன்று கொண்டிருந்தான், மனோகரன்.

யோசனை கலைந்து, அவள் ஏறிட்டுப் பார்க்கவும், "என்ன, உண்மையான பகல் கனவா? போதும். விழித் துக் கொள். கிளம்ப வேண்டும்!" என்று அவசரப்படுத் தினான் அவன்.

கார் கிளம்பியதும், "இன்று, உன்னை உங்கள் ஹோட் டலிலேயே இறக்கி விடப் போகிறேன்!" என்று அறி வித்தான்.

அவள் குள்ளிக் குதிக்காத குறைதான். "ஐயோ, ஏன்?"

பக்கவாட்டில் ஒருபார்வையைச் செலுத்திவிட்டு, "இந்தக் கேள்விக்கு, இன்னமும் பதில் தெரியவில்லை என்றால், இந்த அழகான மண்டைக்குள் ஒன்றுமே இல்லை என்றுதான் அர்த்தம்!" என்று தோளைக் குலுக்கினான் மனோகரன்.

''எங்கள் அத்தையைப் பற்றி, உங்களுக்குத் தெரியாது என்றும் சொல்லலாம்!'' என்றாள் சுந்தரி. ''ப்ளீஸ் வேண்டாம்பா!''

''எல்லோரும் பெற்றோருக்கு மட்டும்தான், ஏதோ ஒரு மரியாதைக்காகப் பயப்படுவார்கள். நீயானால், அத்தை, ஆட்டுக்குட்டி என்று நடுங்குகிறாயே! ஊகூம். இது சரிப்படாது. வேறே வழிதான் பார்த்தாக வேண்டும். அம்மாகூடச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்...''

''என்ன சொன்னார்கள்?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் சுந்தரி.

ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு, ''உன்னைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை!'' என்று உதட்டைப் பிதுக்கினான் அவன். ''ஆனால், ஒரு நாள் அவர்கள், உன் ரஞ்சிதம் அத்தையை நேரில் பார்த்துப் பேசப் போகிறார்களாம். அந்த ரஞ்சிதம்மாவுடைய மருமகளைப் பாராமல் தூக்கம் வரமாட்டேன் என்று வேலை நிறுத்தம் செய்கிறதாம். அவளைப் பார்க்க அனுமதி கேட்டுத் திடீரென்று ஒரு நாள் வந்து நிற்பார்கள் பார்!''என்று மிரட்டுவது போலச் சொன்னான்.

சுந்தரிக்குச் சிரிப்பும் வந்தது. பயமாகவும் இருந்தது.

கோபம் வந்தால், அத்தை என்ன செய்வாள் என்று சொல்வதற்கில்லை.

ஆனால் திருமதி சாந்தி மாதவன் சமாளித்துக் கொள்வார் என்றும் அவளுக்குத் தோன்றியது. ஆனாலும்... அத்தை ஏதாவது நோகச் சொல்லிவிட்டால்...!

நாவினால் சுட்ட புண் ஆறாதே!

## 16



வீட்டுப் பெரியவர்களை - முக்கியமாக ரஞ்சிதத்தைக் கொஞ்சமேனும் தயார்ப் பண்ணு முன், மனோகரனோ, அவனுடைய அன்னையோ தன் இடத்துக்கு வருவது, அவ்வளவு சரியென்று சுந்தரிக்குப் படவில்லை.

எனவே, "இப்போது வேண்டாமே..." என்று, அவள் கேட்டுக் கொண்டிருந்தபோதே, திடுமென, அவனது செல் ஒலித்தது.

பேசி முடித்தவனின் முகம் இறுகியிருந்தது.

"இதோ உடனே வருகிறேன்!" என்று கூறி மனோகரன் செல்லை அணைக்கவும், சுந்தரி கைப்பையை எடுத்துக் கொண்டு இறங்கத் தயாரானாள்.

"என்னை, இங்கே எங்கேயாவது பஸ் நிறுத்தத்தில் இறக்கி விட்டுவிடுங்கள். ம்... மனோகர், பஸ் பிடித்துப் போய்விடுவேன்!" என்றாள், எந்தவித பந்தாவும் இல்லாமல் அவள்.

பார்வை கனிய, "உன்னை வேனில் போக விடாமல் கெடுத்ததும் இல்லாமல், இங்கே தனியாக இறக்கி விடுவதா? வேண்டாம். திருச்சிக்குப் போய்விடலாம். அங்கே தெரிந்தவர் டாக்சியில் உன்னை அனுப்பி விடுகிறேன்!" என்று காரைத் திருப்பினான் மனோகரன்.

சிறு அமைதியின் பின், "யாருக்கேனும், ஆபத்தான நிலைமையா?" என்று விசாரித்தாள் அவள்.

"ஆபத்து... இல்லை. பிழைத்துக் கொண்டாள். ஆனால், அவளது உயிருக்கு உத்தரவாதம். அவளாகத் தந்தால்தான் உண்டு என்று சொல்லலாம்!" என்று அவன் சொன்னதுமே, "நீனா!" என்றாள் சுந்தரி.

''ஆமாம். அவள்தான்! அன்று இல்லத்தில் அம்மா வோடு பார்த்தாயல்லவா. அந்தப் பெண் நீனாவே தான்... தற்கொலை மனோபாவம்! கையில் கத்தியால் கீறி, சரியான நேரத்தில் கண்டுபிடித்ததால், அந்த முறை காப்பாற்ற முடிந்தது. அன்றைக்கு அம்மாவோடு இல்லத்துக்குப் போய்வந்த பிறகு, நன்றாக இருப்பதாக, நண்பன் வந்து, நிம்மதியோடு சொன்னான். இப்போது, திரும்பவும் இப்படி! இத்தனைக்கும், அவளைக் கடிந்து கூட யாரும் பேச வில்லையாம்.''

''இப்போது என்ன செய்தாளாம்?''

''ப்ளக் ஒயரைக் கையில் சுற்றிக் கொண்டு ஸ்விட்சைப் போட்டிருக்கிறாள்! நல்ல வேளையாக, இதுபோல ஏதாவது என்றால், தானாக டிரிப் ஆகிற மாதிரி, வீட்டில் செய்து வைத்திருந்தார்களாம்! ஒரு ஷாக்கோடு, மின் சாரம் போய்விட, பிழைத்துக் கொண்டாள். இப்போது 'ஹா' என்று கிடக்கிறாளாம்! பயந்துபோய்க் கூப்பிட் டார்கள்!'' என்றான் அவன் எரிச்சலை உள்ளடக்கிய குரலில்.

''அவளுக்கு என்ன குறையாம்?''

''குறை இல்லாததுதான் குறை. அழகு இருக்கிறது. பணம் இருக்கிறது. ஆரோக்கியம் இருக்கிறது. அலங் காரம் பண்ணிக் கொள்ளத் தெரிகிறது. சின்ன வயது! ஆனால், புத்தி போகிற போக்கைப் பார்! ஆனால்...'' என்று யோசனையில் மூழ்கினான் அவன்.

யோசித்துவிட்டு, ''இப்படி டிரிப் ஆகிற மாதிரி, வீட்டில் எப்போது செய்தார்களாம்?'' என்று கேட்டாள் சுந்தரி.

முகம் மலர, "தேசிகன் சார் எலெக்ட்ரிகல் இன்ஜினீயர், சென்ற ஆண்டு இந்த வீட்டைக் கட்டும்போதே, அது போல அவர் செய்து வைத்ததை எல்லோரும் புகழ்ந்த தாக நினைவு. ஏன் கேட்டாய்?" என்று அவன், அவளைக் கேட்டான்.

"அப்படியானால், டிரிப் ஆகிற விஷயம் அவளுக் கும் தெரிந்துதானே இருக்கும். வந்து... இது தப்பாகவும் இருக்கலாம். ஆனால், உயிருக்கு உண்மையான அபாயம் இல்லாத விதத்திலேயே, நீனாவின் தற்கொலை முயற்சி கள் இருப்பதாகத் தோன்றவில்லையா? கையைக் கீறிக் கொண்டது. ஆபத்துதான்! ஆனால், கண்டுபிடிக்கக் கூடிய படிதானே, செய்திருக்கிறாள்?" என்று தயக்கத்துட னேயே சுந்தரி கேட்க, "பிரமாதம்!" என்று பாராட்டி னான் அவன்.

பெருமையுடன் அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, "என் அபிப்பிராயமும் அதுதான். கிட்டத்தட்ட என்னைப் போலவே, எண்ணத் தொடங்கியிருக்கிறாய். இதில் மட்டு மல்ல, எல்லா விஷயங்களிலும். ஒத்த மனம் என்பார் களே, இதுதான் போல! எனக்குச் சரியான உதவி யாளராக இருப்பாய் என்று தோன்றுகிறது. முழு நேர வேலை தர ஆசை! பெரீய்ய ஹோட்டல்காரம்மா! ஏற் பாயோ, மாட்டாயோ என்று தெரியாமல், கேட்கப் பயம் மாக இருக்கிறது!" என்று மனோகரன் கூறிய விதத்தில், சுந்தரிக்குச் சிரிப்பு வந்தது.

ஹோட்டலுக்கு வந்து, அவளை இறக்கி விடப் போகி றேன் என்றவன், இவனா பயப்படுகிறவன்?

அவன் 'ஒத்த மனம்' என்றது, மனதைக் குளிர்வித்தது.

இதை, இன்னமும், என்னென்ன வகையில் நிரூபிப் பது?

திருச்சியை அடைந்ததும், அவளை வாடகைக் காரில் அனுப்பும் விஷயம், ஒத்த மனமாய் இருவருக்குமே நினைவு வர மறுத்தது.

நீனாவுடன், நர்சை உட்கார வைத்துவிட்டு, அண் ணனும் தம்பியும் முன்னறையில் இருந்தனர். நீனாவுடைய தாய், இன்னோர் அறையில் அழுது கொண்டு இருப்ப தாகச் சொன்னார்கள்.

''முன்னைப் போல, நீனா இப்போது அழவில்லை, டாக்டர், ஆனால், இந்த ஷாக் அவள் மூளையை என்னவும் செய்து விட்டதோ என்று எங்களுக்குப் பயமாக இருக்கிறது. ஒரு மாதிரி வெறித்துப் பார்த்துக் கொண்டு படுத்திருக்கிறாள்!'' என்றார் பெற்றவர்.

''பார்க்கிறேன்!'' என்று நீனாவின் அறையினுள் சென்றான் மனோகரன்.

சில சோதனைகளின் பின், சுந்தரியை அழைத்து, ''அவளுக்கு ஒன்றும் இல்லை. மின்சார அதிர்ச்சி எப்படி இருக்கும் என்று தெரியாமல், செய்துவிட்டுப் பயந்து போய்க் கிடக்கிறாள். நீ பேசிப்பார்!'' என்றான்.

''நானா? நான் என்ன சொல்லட்டும்?'' என்று திகைத் தாள் அவள்.

குனிந்து, ''டாக்டருக்கு முழு நேர உதவியாள் என்றால், சும்மாவா? ஒத்த மனம் சொல்லும். செய்து பார்!'' என்று தணிந்த குரலில் கூறியவன். அவளது கன்னத்தை லேசாக வருடிவிட்டு, நண்பன் இருந்த முன்னறைக்குப் போய்விட்டான்.

எவ்வளவு நம்பிக்கையோடு சொல்கிறான்!

அதற்கு மேல் சுந்தரி தயங்கவில்லை.

"சில சமயம் இதுபோல மின்சார சாதனங்கள் சரியாக வேலை செய்வதில்லை. அது தெரியாமல், அசட்டுத் தனமாய், நிஜமாகவே உயிரை விடப் பார்த்தாயே!" என்று, நீனாவின் காதருகில் குனிந்து, சுந்தரி கூறவும், நீனாவின் உடலில் ஒரு நடுக்கம் நன்றாகவே தெரிந்தது.

ஜில்வென்று உலுக்கும் மின் அதிர்ச்சி, எளிதில் மறக்கக் கூடியது அல்ல!

"அடுத்த முறை, இன்னமும் ஜாக்கிரதையாக வழியைத் தேர்ந்து எடு. ஆறு, கிணறைக் கூட நம்ப முடியாது. ஏதாவது காரணத்தால், திடுமெனத் தண்ணீர் அளவு உயர்ந்துவிடக் கூடும்! அப்புறம், தூக்க மாத்திரையை உன் உடம்பு தாங்குமோ, என்னவோ..."

ஆத்திரத்துடன் எழுந்து அமர்ந்தாள் நீனா.

சற்றுப் பொறுத்து, "வீட்டினர் ஒருவருக்கொருவர் கலந்து பேசட்டும்! அதிலேயே சரியாகிப் போகும்! நாம் போகலாம்!" என்று சுந்தரி வர, மனோகரனும் கிளம்பி விட்டான்.

திரும்பி வரும் வழியில், "நாம் நினைத்த மாதிரி நீனா போட்டது, நாடகம்தான். அவளுக்குத் தாய் தந்தை தன்னை அதிகம் கவனிக்க வேண்டும் என்று ஆசை. அவர்கள் இருவருக்கும், வேலைதான் பெரிது. தனக்கும் கணவருக்குமாக, இருபதும், முப்பத்தைந்தும் வருகிறதே என்கிறாள், அந்தம்மா. இவ்வளவு நாள் ஹாஸ்டல், தாத்தா வீடு என்றுதான் நீனா கழித்திருக்கிறாள் - படிப்பு முடிந்து, தாத்தாவும் மறைந்து, ஆவலாகப் பெற்றோரிடம் வந்தால், நீனாவுக்குப் பெரிய அதிர்ச்சி.

அவளுடைய பெற்றோர், குயில் இனம் போல. இருபது ஆண்டுகள் பொறுப்பை அடுத்தவரிடம் தள்ளிவிட்டு வாழ்ந்தது. இப்போதும் ஏற்கப் பிடிக்கவில்லை. இவர்களிடம் கெஞ்ச மனம் இன்றிப் பெண் கெட்டிக் காரியாக, இப்படி மிரட்டி இருக்கிறாள்.

''இப்போதும், வேலையை விட்டுவிட்டு, வீட்டில் இருந்தால், தனக்கு உயிர் போய்விடும் என்கிறாள், பெற்றவள்! அவருக்கு முப்பத்தைந்தாயிரம் வருவதால், அவரும் வேலையை விடக் கூடாதாம். சரி, அம்மா பெண் ணில், யார் தொடர்ந்து உயிரோடு இருப்பது என்று, நீங்களே முடிவு செய்யுங்கள், என்று விட்டு வந்தேன்! சரிதானா இல்லையா என்று நீங்கள்தான் சொல்ல வேண் டும். ஏனென்றால், நான் மருந்துக்குக்கூட, மனோதத் துவம் படித்ததில்லை!'' என்று முடித்தாள் சுந்தரி.

''இந்தப் பிசாத்துக் காரை ஓட்ட வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், என் பாராட்டே வேறு மாதிரி இருந் திருக்கும்!'' என்று பெருமூச்சு விட்டான் அவன்.

''எனக்கு, இதுவே போதும்பா!'' என்றாள் அவள் சாதுவாக.

''ஒத்த மனம், இவ்வளவு வித்தியாசப்படக் கூடா துப்பா!'' என்றுரைத்துச் சிரித்தான் அவன்.

அவளும் முறுவலிக்கையில், அவன் மேலும் சொன் னான். ''என்னைப் போல, ஒரு மருத்துவனாகக்கூட நினைக்கத் தொடங்கிவிட்டாய்! பொதுவாக, இந்த நிலை யில், யார் சாவது என்று நீங்கள் முடிவு செய்யுங்கள், என்றுதான் சொல்லியிருப்பார்கள். வைத்தியர்கள் மட்டும்தான் கடைசி வரை இறப்பை ஏற்காமல், என்ன சிகிச்சை செய்வது என்று அதே முயற்சியில்

இருப்பவர்கள்! நீயும், 'யார் உயிரோடு இருப்பது' என்றுதானே முடிவு செய்யச் சொல்லியிருக்கிறாய்? எண்ணமிடுவதில்கூட, நம் இருவருக்கும் ஒரே மனம், பார்த்தாயா!'' என்றான் பெருமிதத்தோடு.

ஒரே மனம்! ஒத்த மனம்!

இவனது எண்ணத்தை ஒத்ததாக, இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமே!

இந்திரபுரிக்குள் கார் நுழைகையில், பிடிவாதமாக முன் தெருவிலேயே இறங்கிக் கொண்டாள் சுந்தரி.

''இன்றைக்கு உங்களை ஆளாளுக்கு ஏதாவது சொன்னால், எனக்குத் தாங்காது, மனோகர்!'' என்று அவள் சொன்ன பிறகு அதற்கு மேல், அவன் வலியுறுத்த வில்லை.

''அப்படி, அத்தனை பேரும் வருந்தப் பேசமாட்டார் கள் என்பது என் கருத்து! ஆனால், நீ சொன்னபடி நான் செய்வதற்குக் காரணம், நீ அழகாக 'மனோகர்' என்று, என்னை அழைத்ததுதான் என்பது, எப்போதும் நினை விருக்கட்டும்!'' என்று குரலில் நகையுடன் கூறியவன், அவள் ஹோட்டல் தெருவில் திரும்பும்வரை பார்த் திருந்துவிட்டு, காரைத் தன் வீட்டுப் பக்கமாகச் செலுத்தி னான்.

மனோகர் என்று அழைத்தது அழகாக இருந்ததாமா?

மனோகர்!

அழகாகத்தான் இருக்கிறது!

சுந்தரி மனோகர் என்றால், இன்னமும்கூட நன்றாகத் தான் இருக்கிறது.

உள்ளூர ரசித்தவாறே, மலர்ந்த முகத்துடன் ஹோட்டலை அடுத்திருந்த வீட்டுக்குள் சென்றால், சீற்றத்துடன் அவளுக்காகக் காத்திருந்தாள் ரஞ்சிதம்.

''தன்னந்தனியாக வரும்போது, முகத்தில் என்னடி இளிப்பு? பார்க்கிறவர்கள், உன்னைப் பைத்தியம் என்று கருதமாட்டார்கள்? முட்டாள்!'' என்று அதட்டினாள் அவள்!

கற்பனை கலையச் சுந்தரி திகைத்து நின்றாள்.

பெற்றவள் இருந்தும், சுந்தரி தன் தாயாகக் கருதி வந்தது, ரஞ்சிதத்தைத்தான்.

இரண்டாவது பிரசவத்தில் சுமதி சிரமப்பட்டதால், சுந்தரியின் பொறுப்பை, ரஞ்சிதம் ஏற்றுக் கொண்டாள் என்று சொல்வதுண்டு!

ஆனால், இயல்பு நிலைக்குத் திரும்பாமல், இழப்பையே நினைத்துப் பொருமிக் கொண்டிருந்த ரஞ்சிதத்துக்கு, அவளுக்கென்று வாழ்வில் ஒரு பிடிமானத்தைத் தருவதற்காகத் தன்னுடைய பெற்றோர், இந்தத் தியாகத்தைச் செய்திருக்கிறார்கள் என்று, பிற்பாடு சுந்தரி கண்டுபிடித்திருந்தாள்.

ஆனால், ரஞ்சிதத்தின் மீதுள்ள பற்றுதலும், அவளுக்குக் குறைந்ததில்லை.

அவளது முற்காலம் அறிந்து, மேலும் பரிதாபம்தான்.

மனோகரனின் காரணமாக, அத்தையிடம் இருந்த சில குறைகள் அவளது கண்ணுக்குத் தென்பட்டபோதும், அதற்காக, அவளை வெறுத்து ஒதுக்கியது இல்லை.

இந்தச் சண்டை சச்சரவுகளை மறந்து, ஒன்றுபட்டு வாழக் கூடாதா என்ற ஏக்கம்தான் ஏற்பட்டது.

வாழ்க்கை இனிமையாக இருக்கக் கூடுமே!

சாந்தி மாதவனைப் பார்த்த பிறகு, அந்த ஏக்கம் அதி கரித்திருந்தது.

ஆனால், எப்போதும் ரொம்பப் பெரிய பிரச்சினை யாக, வாழ்வையே பிடிக்காத திசைக்குத் திருப்பி விடக் கூடியவளாக ரஞ்சிதத்தை அவள் நினைத்தது இல்லை.

புரிய வைப்பது சிரமம்தான் ஆனால், தன்னிடம் அன்புள்ளவள் என்பதால், எடுத்துச் சொன்னால், இளகி விடுவாள் என்றுதான் சுந்தரி எண்ணினாள்.

எடுத்துச் சொல்வதற்கான அவகாசம்தான் அவள் மனோகரனிடம் கேட்டதும்.

ஆனால், கண்களில் கனல் பறக்க ரஞ்சிதம் நின்ற கோலம், சுந்தரியைத் திகைக்க வைத்துவிட்டது.

'டி'ப் போட்டுப் பேசியதும், முட்டாள் என்றதும்... இவளுக்கு எந்த அளவு தெரியும்?

சுற்றுமுற்றும் பார்க்கையில், மன்னிப்புக் கோரும் பாவனையில் கும்பிடு போட்டுவிட்டு, வேன் டிரைவர் வேகமாகப் போவது தெரிந்தது.

பொதுவாக, வீட்டுப் பிள்ளைகளைப் பெரியவர் களிடம் பணியாளர்கள் காட்டிக் கொடுப்பது இல்லை. ஒரு வேளை, வயதுப் பெண்ணான சுந்தரியை, அவளிட மிருந்தே காப்பதாக, பல்லாண்டுகளாகப் பணி புரியும். அந்தக் காரோட்டிக் கருதியிருக்கலாம்.

ஆனால், மனோகரனோடு எங்கு சென்றதையும், அவரும்கூட நேரில் பார்க்கவில்லையே!

பல நாட்களுக்கு முன்பாகப் பலசரக்கு மொத்தக் கடையில் சாமான் போடச் சொல்லிவிட்டு, அவன் காரில் சென்றது மட்டும்தான் அவருக்கும் தெரியும்!

ஒரு வேளை, இந்த இரண்டு வாரங்களாக, அந்த முதியவர்களைப் பார்த்துவிட்டு வர, அவள் சென்றதைக் கூட, மனோகரனைச் சந்திக்கச் சென்றதாகவே, டிரைவர் எண்ணியிருக்கலாம்.

இப்போது, அவள் இல்லாமல் வேன் வர, அத்தை குடைந்திருப்பாள், தன் ஊகத்தை டிரைவரும் சொல்லி யிருப்பார்.

எப்படியோ? இப்போது விஷயம் வெளிப்பட்டு விட்டது.

முழுசாக எல்லாமே தெரியாது என்றாலும், சுந்தரி மனோ கரனோடு சுற்றினாள் என்பது, ரஞ்சிதத்துக்குத் தெளிவு.

இதைச் சமாளித்தாக வேண்டும்.

'சரச, சாம, தான, பேத, தண்ட சதுரா' என்று தியாக ராஜர் கீர்த்தனை ஒன்று உண்டு! ஸ்ரீராமன் இத்தனை வழிகளைக் கையாண்டு, பிறரை வென்றார் என்று வரும்.

இவற்றுள் எதை அத்தையிடம் கையாள முடியும்? முன்னது மட்டும்தான்! ஆனால், அதற்கும், இன்று பயன் இருக்கும் போலத் தோன்றவில்லை.

சுந்தரி இம்மென்றால் எகிறுகிறவள்தான். ஆனால், இப்போது பதிலுக்குக் கோபத்தைக் காட்டக் கூடாது என்று முடிவு செய்து, "என்ன அத்தை, என்னைத் தேடி னீர்களா?"என்று முயன்று, குரலை இயல்பாக வைத்துக் கொண்டு கேட்டாள் அவள்.

ஆனால், "என்ன? என்னிடமே நடிக்கிறாயா?" என்று சீறினாள் ரஞ்சிதம். "மூன்று மணி நேரம், கண்ட நாயோடு சுற்றியலைந்துவிட்டு, ஒன்றும் தெரியாத மாதிரித் 'தேடி னீர்களா' என்று கேள்வி வேறா? ஏன் கேட்கமாட்டாய்? பன்றியோடு சேர்ந்த கன்று, கண்டதையும்தான் தின்னும்!" என்று, கட்டுப்பாடின்றிக் கத்தினாள் ரஞ்சிதம்.

நாயா? பன்றியா? மனோகரனை என்னவெல்லாம் சொல்லுகிறாள்!

சுர்ரென்று பொங்கிய சினத்துடன், "கொஞ்சம் தரத்தோடு பேசுங்கள், அத்தை!" என்று அதட்டினாள் சுந்தரி.

"தரம் பற்றி என்னிடம், நீ பேசுகிறாயா? கண்டதரம் கெட்டதுகளோடு, இவ்வளவு நேரம் கூத்தடித்துவிட்டு, ...அந்த நாய் யாரென்று, உனக்குத் தெரியாது? ஏமாற்றுக் கார அப்பனுக்கும், ஆள் மயக்கி அம்மாவுக்கும் பிறந்த திருட்டுப் பயல்!"

"அத்..." என்று ரஞ்சிதத்துக்கும் மேலாகக் கத்தத் தொடங்கிய சுந்தரி, "போதும் ரஞ்சிதம்!" என்று அதட்டிய தந்தையின் அழுத்தமான குரலில், திகைத்துத் திரும்பினாள்.

அங்கிருந்த எல்லோருக்குமே திகைப்புதான்.

'போதும், ரஞ்சிதம்!' என்றா அவர் சொன்னார்? மெய்யாகவா?

ஆனால், தங்கையையாவது, கண்ணபிரான் அதட்டுவதாவது?

நம்ப முடியாமல் எல்லோரும், முக்கியமாக ரஞ்சிதம் வாயடைத்து நிற்க, "எப்போதுமே, அளவு மீறிப் பேசக் கூடாது, ரஞ்சி. அப்புறம், வாயை விட்டோமே என்று வருத்தப்படும்படி ஆகிவிடும்!" என்றார் அவர்.

"என்ன அண்ணா, நீ என்னை அதட்டுகிறாய்? இந்தக் கழுதை யாரோடு சுற்றப் போனாள் என்று உனக்கும் தெரியும்தானே?" என்று, இப்போது அண்ணனிடம் கத்தினாள் ரஞ்சிதம்.

"ரஞ்சீ..."

"அந்த ஏமாற்றுக்காரன் பையனோடு! அப்பன் என்னை ஏமாற்றினான். மகன் இவளை இன்னும் மோசமாக..."

"போதும், ரஞ்சிதம்!" என்று அதட்டியபோது கண்ணபிரானின் குரல் மிகவும் கனத்திருந்தது.

ஆனால், ரஞ்சிதம், "நிச்சயமாக, அந்த டாக்டரும், இவளை ஏமாற்றத்தான் போகிறான். இவளை நடுத் தெருவில்..." என்று நிறுத்தாமல் சொல்லிக் கொண்டே போகவும், இழுத்துப் பிடித்திருந்த அவரது பொறுமை யும் அடியோடு மறைந்தது!

"வாயை மூடு!" என்று அதட்டித் தங்கையின் பேச்சை நிறுத்தியவர், தொடர்ந்து, "இவ்வளவு காலம், நீ வருத்தப்படுவாயே என்று பேசாதிருந்தது, பெரிய தப்பு என்று இப்போது தோன்றுகிறது. சொன்னதையே, திருப்பித் திருப்பிச் சொல்லுகிறாயே! ஒரு தரமேனும் யோசித்துப் பார்த்தாயா? மாது அண்ணன், உன்னை ஒரு கணமேனும் விரும்பியிருந்தால், அந்த அண் ணியை அவ்வளவு பிடிவாதமாக மணந்திருப்பாரா? ஏன், ஒரு தரமேனும், உன்னை விரும்பியதாக, அவர் சொன்னதுண்டா? குறிப்பாக, அவர் ஒரு பார்வைகூட உன்னைப் பார்த்தாக எனக்கு நினைவில்லையே! படிப்பு, படிப்பு என்று அதிலேயேதானே கவனமாக இருந்தார்! பெரியவர்கள் ஏதோ ஆசையில் பேசியதை வைத்து, நீ உன் மனதில் கண்ட கனவுகளை வளர்த்துக் கொண்டால், அதற்கு அவரா பொறுப்பு?" என்று சரமாரியாகக் கேட்க, ரஞ்சிதம் வாயடைத்து நின்றாள்.

## 17



ஆனால், அதிர்ச்சி, ரஞ்சிதத்துக்கு மட்டும் அல்ல, அந்தக் குடும்பத்தினர் எல்லோருக் குமேதான்.

கண்ணபிரானைப் பொறுத்த வரையில் ரஞ்சிதம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அதற்கு மறு வார்த்தையே கிடையாது என்றுதான் இதுவரை எல்லோரும் நினைத்தது.

ரஞ்சிதம் ஒன்றை நினைத்தால், கண்ணபிரானும் அதையேதான் நினைப்பார், என்றுதான் எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அதன் முக்கியமான காரணம், முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன், ரஞ்சிதத்துக்கு நேர்ந்தது மாபெரும் அநியாயம் என்று அவரும் அறிந்திருந்ததால், என்றும் நினைத்தார்கள்.

குடும்பத் தலைவரான அவரது கருத்தை ஏற்று, அதைச் சார்ந்தே, தங்களுடைய சொல், செயல்களையும் அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது, கண்ணபிரானின் மனதில் இருந்தது வேறு. தங்கையின் வருத்தம் தாளாமலே இப்படி நடந்தார் என்று முதல் முறையாகத் தெரியவும், திகைத்தும் போனார்கள்.

பெரிய அதிர்ச்சி, ரஞ்சிதத்துக்குத்தான்.

சிலையாக அவள் நின்ற விதம் தாக்க, "ரஞ்சிம்மா!" என்று தங்கையின் அருகில் சென்றார் கண்ணபிரான்.

"பாரம்மா, உன்னை வருத்தப்படுத்த இப்போதும் எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனால், நீ விட மாட்டேன் என்கிறாயே!"

"ஆனால், நீ விட்டுவிட்டாய். உன் சுயநலத்துக்காக. உன் மகளுக்கு நல்ல மாப்பிள்ளை இலகுவாகக் கிடைப்பான் 'என்று..."

"மறுபடியும், வாய்க்கு வந்தபடி பேசுகிறாயே, ரஞ்சி! மாது அண்ணனிடம் எனக்கு எவ்வளவு பிரியம் என்று உனக்குத் தெரியும்தானே! அவர் பேரில் தப்பு இல்லை என்று தெரிந்தும்கூட, இவ்வளவு காலம், நான் உன் பக்கம் நிற்கவில்லையா? சொந்த அண்ணனாக எண்ணினேன். அவரது சாவுக்குக்கூடப் போகவில்லையே! என் மனதைத் தெரிவியாமலே, எல்லாம் முடிந்து விட்டதே என்று, எப்படித் தவித்தேன் தெரியுமா? அந்தத் தவிப்பில், ஒரு சின்ன இணுக்கு, உன்னிடம் காட்டியிருப்பனோ? என்னைப் போய்ச் சுயநலம் பிடித்தவன் என்று விட்டாயே!

"இத்தனை ஆண்டுகள் இந்த வீட்டில் உன் விருப் பத்துக்கு மாறாக, ஒன்று நடந்திருக்குமா? பெற்றோமே தவிர, இந்தப் பிள்ளைகளுக்குப் பெயர் வைத்ததில் இருந்து, என்ன உடை, என்ன படிப்பு - எல்லாமே உன் முடிவுதானே! என்னைவிடு! பத்து மாசம் சுமந்து பெற்ற வள், அவள் ஒரு வார்த்தை மறுத்துப் பேசியிருப்பாளா?

"போம்மா! போய்த் தனியாக இருந்து, நான் சொன் னதை யெல்லாம் யோசி. கோபதாபம் இல்லாமல் யோசி! முப்பத்தைந்து ஆண்டுகளை இந்த வெறுப்பி லேயே கழித்து விட்டோமே, நியாயம்தானா என்று யோசி. இனி என்ன செய்வது என்றும் யோசி. ஒரு வகையில்... அது இருக்கட்டும். பிறகு பார்ப்போம். ஆனால், எதையுமே, கோபதாபம் இல்லாமல் யோசி!" என்றவர் திரும்பி மனைவியைப் பார்த்து, "நான் கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வருகிறேன். ஹோட்டலில் சின்னதுகளை வைத்துவிட்டு வந்தேன். பார்த்துக் கொள்!" என்று விட்டு, வெளியே சென்றார்.

ரஞ்சிதம் தனியே நின்ற விதம் பொறுக்காமல் அருகில் சென்று, "அத்தை" என்று மெல்ல அழைத்தாள் சுந்தரி.

ஆனால், அவள் அழைத்ததே காதில் விழாத மாதிரி, ரஞ்சிதம் அங்கிருந்து போய்விட்டாள்.

நாத்தனார் காது கேளாத தூரம் செல்லும்வரை காத்திருந்துவிட்டு, "சுந்தரிம்மா, இங்கே வா!" என்று அழைத்தாள் சுமதி.

மகள் அருகில் வந்ததும், உட்கார வைத்து, "இன்றைக்கு டாக்டரைப் பார்த்தாயா?" என்று மெல்லிய குரலில் ஆவலோடு வினவினாள்.

ஆச்சரியத்துடன் தாயைப் பார்த்தவளுக்கு ஏதோ புரிந்தது.

'அத்தனை பேரும் வருந்தப் பேச மாட்டார்கள் என்பது நிச்சயம்!' என்று மனோகர் சொன்னானே! அப்படியானால்...

இன்றைக்கு அதிசயங்கள் முடியப் போவதே இல்லையா?

"உங்களுக்குத் தெரியுமா, அம்மா?" என்று தாயிடம் வியப்புடன் வினவினாள் மகள்.

"இம்! அன்றைக்கு இதயநோய், அப்பெண்டிசிட்டிஸ் பற்றி, அந்தத் தம்பி பேசியதிலிருந்து உன் அப்பாவுக்கும், எனக்கும் ஒரே குழப்பம். குறுகுறுப்பு! உன்னைக் கவனித்தோம். அப்புறம், டாக்டர் தம்பியையும் அங்கே, இங்கே அவர் இருக்கக் கூடிய இடங்களுக்குப் போய்க் கண்காணித்தோம்."

"ஓ! அதுதான். அப்பாவும் நீங்களுமாக அவ்வப்போது சாமான் வாங்கத் திருச்சிக்குக் கிளம்பியதா?" என்று கேட்டாள் பெண்.

''ஆமாம்மா! நீயும் பிடிவாதமாகக் கிளம்பவே, நாங்கள் வேறு சமயங்களில் போய்ப் பார்த்தோம். அப்பா, ஓரிரு முறை, அவரிடம் பேசிக்கூட இருக்கிறார். சும்மா பொதுப்படையாக. எங்கள் இருவருக்குமே, டாக்டரைப் பிடித்துப் போயிற்று. ஆனால், உன் அத்தையின் மனப் போக்குதான். உனக்கே தெரியும்! அதை நினைத்துத்தான் நான் ரொம்பவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், உன் அப்பா இவ்வளவு பேசுவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை, கண்ணு. எப்படியும், இனி மேல் உன் அத்தை எதிர்த்தாலும், அப்பா உன்னை விட்டுத் தர மாட்டார் என்பது நிச்சயம். இப்போதுதான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது!'' என்றாள் மகிழ்ச்சியோடு சுமதி.

ஆனால், சுந்தரியின் முகத்தில் அவ்வளவு உற்சாகம் இல்லை.

''என்னடா?'' என்று வினவிய தாயிடம், ''அத்தையை என்னால் அவ்வளவு இலகுவாக ஒதுக்க முடியாதும்மா. என்னதான் பேசினாலும், உண்மையான பிரியம் உள்ளவர்கள், அவர்கள் ஒரேயடியாக வெறுத்தால், என்னால் எப்படி... இருக்கட்டும் அம்மா. கொஞ்சகாலம் பொறுத்திருப்போம். அப்பா பேசியதை அத்தை யோசியாமலா இருப்பார்கள்? அத்தை மாறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறதும்மா. பார்ப்போம்!'' என்று மெல்லச் சொன்னாள் சுந்தரி.

என்னதான் கணவன் தங்கையிடம் பேசியபோதும், மகளின் திருமணம், அப்படியொன்றும் உடனே நடந்துவிடாது என்று சுமதிக்கும் இப்போது தெளிவாகவே புரிந்தது.

ஆனால், அன்று மதியம்வரை இருந்த கலக்கம், பெரிதும் குறைந்துபோனதால், அவள் நிம்மதியுடனேயே எழுந்து போனாள்.

சுந்தரியின் மனநிலை சற்று வேறு விதமாக இருந்தது.

ரஞ்சிதத்தை வழிக்குக் கொண்டு வருவதில் சிக்கல் இருக்கும் என்று அவள் அறிந்தே இருந்தாள்.

மெல்லப் பேசி, அவளை ஒத்துக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்ததுதான். விஷயம் இப் படித் திடுமென வெளியான விதத்தில், குளறுபடியாகி விட்டது.

ரஞ்சிதத்தின் பிடிவாத குணம் அவள் அறியாதது அல்ல.. மற்றப்படி முப்பத்தைந்து ஆண்டுகள், ஒரு வெறுப்பை இழுத்துப் பிடித்துக் கொண்டு, யாராலும் இருக்க முடியாது.

இப்போது, அருமை அண்ணனின் அறிவுரை என்று ஏற்று, அவள் இளகவும் செய்யலாம்.

அல்லது, சுந்தரியுடைய தகப்பனாக, தங்கையை மாற்ற எண்ணி ஏதேதோ சொல்கிறார் என்று ஒரேயடியாக இறுகியும் போகலாம்.

ஆனால், தன்னிடம் ரஞ்சிதத்துக்கு உள்ள அன்பில், சுந்தரிக்கு உறுதி இருந்தது.

ஏதோ ஒரு சில நாட்கள் முன்னே பின்னே ஆன போதும், அந்த அன்பு கட்டாயமாக ஒரு நாள் அத்தையை மாற்றும் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது.

எனவே, இதைப் பற்றி எண்ணிக் குழம்பிக் கொண் டிராமல், அவள் செய்ய எண்ணியவற்றைத் தொடர்ந்து

தொய்வின்றிச் செய்யலானாள். அதற்காகப் பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து, பேச வேண்டியதைப் பேசி, அந்த வேலை வேகமாக நடந்தது.

இந்த வேலை எவ்வளவு வேகமாக நடந்ததோ, அவ்வளவுக்கு, ரஞ்சிதத்தின் மன மாற்றம், மாறுவதற் கான அறிகுறியே இல்லாமல் மந்தித்து நின்றது.

எந்நேரமும், எங்கிருந்தேனும் உரத்து ஒலிக்கும், அவளது குரல், இப்போது கேட்கவே இல்லை. ஹோட் டலில் வீட்டில் இங்கென்ன நடக்கிறது, நடக்காமல் இருக்கிறது என்று ஓயாது சுற்றி அலைந்து கண்காணிப் பதும், விரட்டுவதும் நின்று போயிற்று.

அதற்காக ஒதுங்கி, அறைக்குள் பதுங்கிக் கொண்டாள் என்று சொல்வதற்கு இல்லை.

மெதுவாக, இங்குமங்கும் நடமாடத்தான் செய்தாள்.

ஆனால், அதிகாரம், அலட்டல் இருக்கவில்லை.

முடிந்தவரை யாரிடமும் பேசுவது இல்லை.

நல்லவிதமாக அவள் மனதினுள் யோசனை ஓடுகிறது என்று நம்பத்தான் எல்லோருக்கும் ஆசை.

ஆனால், கண்ணபிரான் சுந்தரி இருவரிடமும், ரஞ் சிதம் அடியோடு பேச்சை நிறுத்திக் கொண்டது மட்டும், எல்லோருக்கும் கவலையை அளித்தது.

இந்த இருவரும் இருக்கும் இடத்தில்கூட இருப்ப தில்லை என்று விலகி விலகிப் போய்க் கொண்டிருந்தாள் அவள்.

ஒரு வாரம் இப்படியே செல்லவும் சுமதிக்குப் பயம் வந்துவிட்டது.

மகளைத் தனியே பார்த்து, "என்னம்மா, இப்படியே இருந்து விடுவார்களா? உன் அப்பாவிடம் பேச்சை எடுத்தாலே முறைத்துவிட்டுப் போய்விடுகிறார். துணிந்து, நானாவது உன் அத்தையிடம் பேசிப் பார்க்கட்டுமா?" என்று கேட்டாள்.

"வேண்டாம், அம்மா. அத்தை கோபப் பட்டால், அப்புறம், அப்பா உங்களைத் திட்டுவார்கள். இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். முப்பத்தைந்து வருஷமாக இப்படித்தான் என்று நினைத்து வந்ததைத் தப்பு என்று ஒத்துக் கொள்வது, யாருக்குமே அவ்வளவு எளிதில்லை. அதுவும், அத்தை... இருக்கட்டும் அம்மா. இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டும். அதற்குப் பிறகும், நிலைமை மாறவில்லை என்றால், என்ன செய்வது என்று யோசிப்போம்!" என்றாள் பெண்.

"அதில்லையம்மா! நம் வீட்டுப் பிரச்னையெல்லாம் முடிகிறவரை, மாப்பிள்ளை வீட்டில் காத்திருப்பார் களா? அதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது!" என்று சுமதி அப்பாவியாய்த் தன் கவலையை வெளிப் படுத்தவும் சுந்தரிக்குச் சிரிப்பு வந்தது.

"அச்சோ, என்னம்மா நீங்கள்? இப்படி ஓரிரு மாதங்கள் பொறுத்திருக்க முடியாதவர்களை, வாழ்நாள் பூராவுக்குமாக நம்ப முடியுமா? மனோகர் குடும்பம் அப்படிப்பட்டது அல்ல! வீணே கவலைப்படாதீர்கள்!" என்று தாயைத் தேற்றி அனுப்பி வைத்தாள் அவள்.

மனோகரன், அவனுடைய தாயார் பற்றிச் சுமதியிடம் சொன்னது போலவே - சுந்தரிக்கு முழு நம்பிக்கை இருந்தபோதும், சிறு துணுக்கமும் இருந்தது.

அன்று வீட்டில் நடந்தது பற்றி, மறுநாளே மனோகர னிடம் சுந்தரி பேசியிருந்தாள்.

பேச்சின் ஒரு பகுதி அவனுக்குச் சிரிப்பு மூட்டியது. "ஆக மகளுக்கு ஏற்றவன் தானா என்று தெரிந்து கொள்ள வந்தார்களாமா? எதிர் கொள்ளக் கூடுமோ என்ற எண்ணத்திலேயே இரண்டு தெரு தள்ளிப் போகிற வர்கள், அவ்வப்போது கண்ணில் பட்ட காரணம் இது தானா? ஆனால், திடீர் திடீர் என்று கண்ணில் படுகிறார் கள் என்று, நான் உஷாராகி விட்டது அவர்களுக்கு என்ன தெரியுமாம்?"என்று நகைத்தான் அவன்.

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, மற்ற விவரமும் கூறி, "அத்தையின் மன மாற்றத்துக்காகக் காத்திருக்கிறோம்!" என்றாள் அவள்.

"ஓகோ!" என்றான் அவன். "காத்திருக்கலாம். ஆனால், அதற்கும் ஓர் அளவு இருக்கிறது என்பது உனக்கு நினை விருக்கட்டும்!" என்று பேச்சை முடித்திருந்தான் மனோ கரன்.

அவன் சொன்ன 'அளவு' என்பது எத்தனை நாள்?

இந்த அளவுக் காலம் முடிந்த பிறகு, என்ன செய்யப் போகிறான்?

இதுபற்றி, மனோகரனிடம் தெளிவாகக் கேட்கவும், அவளுக்குப் பிடிக்கவில்லை.

பதிலாக, இத்தனாம் தேதி, வெற்றிலை பாக்குத் தட் டோடு வரப்போகிறேன் என்று விட்டால், அதை மாற்ற, அவனோடு வாதாட வேண்டும்.

அதுபாட்டில், மர்மமாகவே இருந்துவிட்டுப் போகட்டுமே! எப்படியும், ஒரு சில நாட்களேனும் அவகாசம் கொடுக்காமல், அது போல நல்ல காரியமெல்லாம் செய்ய மாட்டார்கள்.

அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

இதற்கிடையே, ரஞ்சிதத்தை இளக வைக்கவும் பயனற்று முயன்றாள் அவள்.

அவளுக்குப் பிடித்த மெனு. அவளது துணிகளை அயர்ன் பண்ணி வைப்பது, பிடித்த பாட்டுகளைப் போடுவது என்று பல பேசவும் முயற்சித்தாள்.

ஆனால், பலன் ஏதும் இருப்பதற்கான அறிகுறிதான் எதுவும் தெரியவில்லை.

ஒருநாள், பணப் பொறுப்பில் சுந்தரி அமர்ந்திருந்த போது, பரபரப்பாய்ப் பேசியபடி, இருவர் உள்ளே வந்தனர்!

"குண்டு வெடித்த மாதிரிப் புகைப்பா! நல்ல தீ! ஓசி வேலைதானே, இந்த மருத்துவ மனைக்கு, ஓலைக் கூரை போதும்னு டாக்டர் இருந்து விட்டாப்போல! எத்தனை உயிர் போச்சோ? அந்தாளே, பிழைச்சானோ, என்னவோ?" என்று சொல்லிக் கொண்டிருந்தார் ஒருவர்.

ஓசி வேலை! ஓலைக் கூரை! டாக்டர்!

சுந்தரி பதைப்புடன் நிமிர்கையில், அடுத்த ஆள் பேசினார்.

"சேச்சே! டாக்டர் நல்ல மனுசன். வேறே யாரு இப்படி இலவசமாக மருந்து வரைக்கும் கொடுத்து சிகிச்சை பண்ணுகிறாங்க? அவருக்கு ஒன்றும் ஆகாது!"

அதற்குமேல் சுந்தரியால் தாள முடியவில்லை.

சரக்கை இறக்கிவிட்டு, அப்போதுதான் டிரைவர் கொண்டு வந்து தந்திருந்த வேன் சாவி, அவள் முன்னே இருந்தது. அதை எடுத்துக் கொண்டு வேகமாக வெளி யேறினாள் அவள்.

படு வேகமாகச் சுந்தரி ஓட்டிய வேன் இந்திரபுரியின் எல்லையைத் தாண்டும்போது, அமுதம் ஹோட்டலுக் குள், ஒரு மாருதி கார் வந்து நின்றது.

காரில் இருந்து இறங்கியது, மனோகரனுடைய தாயார் திருமதி சாந்தி மாதவன்!

## 18



தன் சமீப காலத்திய நிதான நடையுடன் சுற்றிக் கொண்டிருந்த ரஞ்சிதத்துக்குக் கல்லா வில் யாரும் இல்லை என்று கண்டதும், ஒரே அதிர்ச்சி.

பத்து நாள் முன்னதாக என்றால், 'பணப் பொறுப்பில், யாரும் இல்லாமல் விட்டுவிட்டு, எல் லோரும் எங்கே சுற்றுப் போனீர்கள்?' என்று ஓர் ஆட்டம் ஆடியிருப்பாள்.

ஆனால், தன்னை அடக்குவதில் முனைந்திருந்த அவள், யாரையும், எதுவும் கேளாமல், பணம் வாங்கும் இடத்தில் அமர்ந்து, வேலையைக் கவனிக்கலானாள்.

காலைக் காபி பலகாரம் முடிகிற நேரம் என்பதால், நல்ல வேளையாகக் கூட்டம் குறைந்துவிட்ட சமயமாக இருந்தது. இதுவே, அரை மணி நேரம் முன்னதாக இருந்தால்...?

யார் இப்படிப் பொறுப்பற்று விட்டுவிட்டுப் போனது என்று நினைத்தாலும், அது பற்றி யாரிடமும் கேட்க, ரஞ்சிதத்துக்கு மனம் வரவில்லை.

பிறகு, கத்தவும் தோன்றிவிட்டால்...? கத்தியது தப்பு என்று தெரிய நேர்ந்தால், ரொம்பக் கஷ்டமாகிவிடும்.

அதனால், இந்தப் பத்து நாட்களாக மிகவும் சிரமப் பட்டுப் பயின்று வைத்திருக்கும் மனக் கட்டுப்பாட்டை விட்டுவிடக் கூடாது.

அந்த விஷயத்தில், அவளை வெகுவாகச் சோதிப்பது போல, திருமதி சாந்தி மாதவன் அவள் முன்னே வந்து நின்றாள்.

''நீங்கள்தான் ரஞ்சிதம் என்று நினைக்கிறேன். ஓர் ஐந்து நிமிஷம், உங்களோடு பேச முடியுமா? என் பெயர் சாந்தி!'' என்றாள் ஒரு மெல்லிய முறுவலுடன்.

ஒரு கணம் ரஞ்சிதத்தின் உடல் பதறிப் போயிற்று.

என்ன திமிர் இருந்தால், இவள் இங்கே வருவாள்.

இதில், புன்னகை வேறு.

இப்படிச் சிரித்துத்தானே...

இல்லை. அப்படியில்லை என்று, அண்ணன் சொல்லி யிருக்கிறான்.

யோசித்துப் பார்த்தபோது, அவன் சொன்னது சரியாகத் தானே தோன்றியது.

''முன்னதாகவே, கேட்டுக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், ஒரு வேளை, சந்திக்க முடியாது என்று சொல்லி விடுவீர்களோ என்று கொஞ்சம் பயம்.

அதனால்தான் சும்மா கிளம்பி வந்துவிட்டேன்... சாரி! உங்களுக்கு, இப்போது வசதிப்படா விட்டால், போய் விட்டுப் பிறகு வரட்டுமா?'' என்று பணிவாகக் கேட்டாள் சாந்தி.

சட்டெனா எழுந்து விட்டாள், ரஞ்சிதம்.

வெளியே வந்து, சற்றுத் தூரத்தில் கிடந்த நாற்காலி களில் ஒன்றைக் காட்டிச் சாந்தியை உட்காரச் சொன்னாள்.

கல்லாவைப் பார்க்கும்படியாக ஒரு நாற்காலியில் தானும் அமர்ந்து கொண்டு, "சொல்லுங்கள்,'' என்றாள்.

சிறு தயக்கம் காட்டிவிட்டு, "நான் வந்திருக்கும் விஷயம், உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். சின்னப் பிள்ளைகள்! எப்படியோ, ஆசைப்பட்டு விட் டார்கள். மற்றப் பிள்ளைகள், எப்படியெப்படியோ நடந்து கொள்கிறார்கள். ஆனால், சுந்தரி உறுதியாகச் சொல்லி விட்டாள். அவளைப் பெற்றவர்கள் வேறு என்றாலும், அத்தை தான் அவளுக்கு அம்மா என்கிறாள்.

"உங்கள் ஆசியில்லாமல், ஒன்றுமே கூடாதாம். இதை...நான் வந்து கேட்பது, உங்களுக்குக் கொஞ்சம் ஆத்திரமாகக்கூட இருக்கும்! ஆனால், ஒரே வீட்டுப் பிள்ளைகளாய், உடன் பிறந்தவர்கள் மாதிரி வளர்ந்து விட்டு, உங்களை வேறு விதமாய் நினைத்ததே இல்லை என்று சொல்லியிருக்கிறார்!'' என்றவள், மெல்லக் கைவிரித்து, "நான் வேறே என்ன சொல்லட்டும்?'' என்று முடித்தாள்.

ஒரு சிறு அமைதியின் பின், சுற்றுமுற்றும் பார்த்து, "சத்யா, போய்ச் சுந்தரியைக் கூட்டிவா!'' என்று வரவேற்பில் இருந்த பெண்ணை, ரஞ்சிதம் பணித்தாள்.

"அக்கா, இப்போதானே, வெளியே போனார்கள்!" என்றாள் அந்த சத்யா.

"அப்படியானால், வெளியே போய்ப் பார்த்துக் கூட்டிவா!"

"அது... சாவியோட....." என்று இழுத்துவிட்டு மேலே நின்று சொல்ல அஞ்சி வெளியே சென்ற சத்யா, வேன் டிரைவருடன் திரும்பி வந்தாள்.

"சுந்தரிம்மா வேனை ஓட்டிக்கிட்டு வேகமாகப் போனாங்கம்மா!" என்று அவன் சொல்லவும், ரஞ்சிதம் துள்ளி எழுந்தாள்.

"வேனை ஓட்டிக் கொண்டா? அவளுக்கு வேன் ஓட்டத் தெரியுமா? ஓட்டினதே இல்லையே! ஏன், என்னிடம் முன்பே சொல்லவில்லை?" என்று டிரைவரை அதட்டினாள்.

தலையைச் சொறிந்துவிட்டு, "இப்பல்லாம், அவங்களைப் பற்றி உங்ககிட்டே பேசப் பயமாக இருக்குதும்மா!" என்று அவன் கூறவும், ரஞ்சிதம் வாயடைத்து நின்றாள்.

அவளது தோளில் கைவைத்து, "கவலைப்படாதீர்கள், ரஞ்சிதம். சுந்தரிக்கு ஒன்றும் ஆகாது. வேன், கார் எல்லாமே கியர் அமைப்பு ஒரே மாதிரிதானே? சமாளித்துக் கொள்வாள். ஆனால், இவ்வளவு அவசரமாக, அவள் எங்கே போயிருக்கக் கூடும்? யாருக்கு, என்ன ஆபத்தோ, அது தெரியவில்லையே!" என்றாள் சாந்தி, யோசனையோடு.

"என்ன? அதுவாவது உங்களில் யாருக்கேனும் தெரியுமா?" என்று ரஞ்சிதம் கோபமாக வினவ, அதற்குக் கிடைத்த பதிலில், இரு பெண்களுமே அதிர்ந்து போயினர்.

“ஏதோ இலவச மருத்துவ மனையில் தீப்பிடித்து விட்டதாக, இரண்டு பேர் பேசிக் கொண்டு இருந் தார்கள். அதைக் கேட்டதும்தான் சுந்தரியக்கா, வேன் சாவியை எடுத்துக் கொண்டு ஓடினார்கள்!” என்று சத்யா சொல்லவும், இரு பெண்களின் முகத்திலும் ஈயாட வில்லை.

இருவருக்குமே தவிப்புதான் என்றாலும், ஓடிக் களைத் தவன் போன்று, பெரிய பெரிய மூச்சுகளைத் தவிப் புடன் எடுத்து விட்டுக் கொண்டிருந்த சாந்தியின் தோளில் கையை வைத்து, “பயப்படாதீர்கள்! யாருக்கும் எதுவும் இராது!” என்று அவளைத் தேற்ற முயன்றாள் ரஞ்சிதம்.

அவளது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு நின்ற சாந்திக்கு, மெல்லச் சுரணை வந்தது.

ஹோட்டலில் படியிறங்கி வந்த யாரோ செல்லில் பேசிக் கொண்டு வரவும், நினைவு வந்தவளாய், கைப்பையைத் திறந்து, உள்ளிருந்த செல்லை எடுத்து எண்களைத் தட்டினாள்.

அடுத்த முனையில் மகனின் குரலைக் கேட்டதும், அவளுக்கு அப்படியே வியர்த்து ஊற்றிவிட்டது. “உனக்கு ஒன்றுமில்லையேப்பா?”என்று நடுங்கும் குரலில் கேட்டாள்.

“எனக்கும் ஒன்றுமில்லை. மருத்துவமனைக்கும் பெரிய சேதம் எதுவும் இல்லை! வீட்டுக்கு வந்து சொல் லிக் கொள்ளலாம் என்று நினைத்தேன்! அதற்குள், எந்த முந்திரிக் கொட்டை உங்களைக் காபுராப் படுத் தியது?”

மகனின் குரலில் முகம் தெளிய, ''சுந்தரிக்கும் ஒன்று மில்லையேப்பா?'' என்று சாந்தி கேட்க, ''சுந்தரியா? இங்கேயா?'' என்று கேட்டு, இரு பெண்களுக்கும் ஒரு தரம் வயிறு கலங்க வைத்தான் மனோகரன்.

''விபத்து பற்றி யாரோ பேசவும், வேனை எடுத்துக் கொண்டு வந்தாளாம். அவளுக்கு வேன் ஓட்டத் தெரியாதே என்று, இங்கே ரஞ்சிதம் தவிக்கிறார்கள்.''

வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, ''வேன் நிற்கிறது, அம்மா! இங்கே, ஒவ்வோர் இடமாகச் சுத்தம் செய்து கொண்டு இருக்கிறோம். அந்தப் பக்கம் இருக்கிறாளா, பார்க்கிறேன். லைனிலேயே இருங்கள்,'' என்று சொல்லி, அரை நிமிஷத்துக்குப் பிறகு, ''இருக்கிறாள் அம்மா! ஓலைச் சருகுச் சாம்பலும் கரியும் ஈரமுமாகச் சுத்தம் செய்வதில், மும்முரமாக உதவி பண்ணிக் கொண்டு இருக்கிறாள். எனக்கும் வேலை இருக்கிறது. வைக்கட்டுமா?'' என்று கேட்டான் மனோகரன்.

''உதவிக்கு நானும் வரட்டுமா?''

''ம்ம்ம்... இங்கே நாங்கள் பார்த்துக் கொள்வோம். முடிந்தால், ஓர் இருபது பேருக்கு டீ போட்டுக் கொண்டு வாருங்களேன்!'' என்றான் மகன்.

விவரம் அறிந்ததும், தேவையானதை ஹோட்டலிலேயே தயாரித்து எடுத்துப் போகலாம் என்றாள் ரஞ்சிதம்.

பெருமளவு துப்புரவுப் பணி முடிவடைந்து, எல்லோருமாகச் சற்று ஓய்வெடுக்கையில், சுந்தரியைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று பேசினான் மனோகரன்.

"வந்தவள் நேரே என்னிடம் வருவதற்கென்ன?" என்று வினவினான்.

"நீங்கள், இந்தப் பக்கம் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தீர்கள். இங்கே வந்து, என்ன ஏது என்று கேட்டு, வேலையைக் கெடுப்பதைவிட, இன்னோர் ஆளாய் வேலை செய்வதுதான் உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று தோன்றியது!" என்றாள் அவள் சற்றே களைத்த குரலில்.

"நீ செய்தது சரிதான்.. ஆனால், உன்னைப் பற்றி அம்மா கேட்டதும், அதிர்ந்து போனேன். வேனை வேறு எடுத்து வந்தாயாமே!" என்றவன் சட்டெனச் சிரித்தான்.

"என்ன?"

"ஒரு திரைப்படத்தில், காதலனைக் காப்பதற்காகக் கதாநாயகி, ஒரு பெரிய கண்டெயினர் லாரியை ஓட்டுவ தாக வரும். அம்மையார், வேன் ஓட்டினாயாக்கும்!" என்று பெருமிதப் பட்டவன், சட்டென, அவளை அருகிழுத்து அணைத்தான்.

கரித் தூசியும், ஓலைச் சாம்பலுமாக, அந்த அணைப்பு, அவர்கள் இருவராலும், ஒரு போதும் மறக்க முடி யாதது.

அதைப் போலவே, டீயையும், பக்கோடாவையும் தயார்ப் பண்ணி எடுத்துக் கொண்டு, சாந்தியும் ரஞ்சிதமும் சேர்ந்து வந்து, அவர்களை அதிசயத்தில் ஆழ்த்தியதை யும், அவர்கள் ஒரு போதும் மறக்கவே இல்லை.

உண்டு அருந்தி உற்சாகம் காட்டிப் பேசியபோதும், எல்லோர் மனதிலும் இருந்த கவலையை ஊகித்து, மனோகரன் விளக்கம் சொன்னான்.

"நம் மருத்துவ மனை, இந்த சிமென்ட் கட்டடம் மட்டும்தான். இரண்டு ஜன்னல் திரைகள் எரிந்தது தவிர, அதற்கு ஒரு சேதமும் இல்லை. இந்த ஓலைக்கூரை, சமீபத்தில் அந்தக் குடிசை வாழ் ஏழை மக்கள், அதிக அளவில் தீவிர நோயுற்று வந்ததால், அவர்களுக்காகப் போடப்பட்டது. இந்த மாதிரித் தீ அபாயம் கருதியே, தேவை தீர்ந்ததும், அதைப் பிரித்துவிடச் சொன்னேன். ஆனால், பிரித்து அடுக்கியதன் மேலேயே, யாரோ புத்திசாலி, சிகரட்டை அணைக்காமல் போட்டிருக் கிறான். நல்ல வேளையாகப் பிரித்துத் தள்ளி, அடுக்கி வைத்து விட்டதால், சாம்பலும், கரியும், காற்றில் உள்ளே வந்து விழுந்து தூசு நிரப்பி, பயங்கரமாகத் துப்புரவுப் பணியை நம் தலையில் கட்டியது தவிர, நமக்குச் சேதம் இல்லை. அதனால், யாரும் எதற்காகவும் கவலைப் படாதீர்கள்!" என்று அவன் முடித்தபோது, உடனே பணி புரிந்த பலர் கை தட்டினர்.

ரஞ்சிதத்தின் மனமாற்றத்தை அடுத்து, இரு குடும்பத் தினர் முகங்களுமே, எப்போதும் மலர்ந்து காணப் பட்டன.

இதற்கிடையில், செல்வநாயகியின் தோட்ட வீடு முடிவடைய, பெரியவள், இவர்கள் எல்லோருக்கும் விருந்து கொடுத்தாள்.

செல்வநாயகியின் வீட்டில், அங்கங்கே குழுக்களாக நின்று பேசுகையில், "எனக்குத் தெரியாமல், எல்லோரும், முக்கியமாக, என் அம்மாவும் நீயும் ரகசியமாக, ஏதோ

பண்ணுகிறீர்கள்! என்ன அது?'' என்று, சுந்தரியைத் தனியே கூட்டி வந்து, மனோகரன் கேட்டான்.

சுந்தரி புன்னகையோடு தோளைக் குலுக்கவும், அரைக் கண்ணால் அவளைப் பார்த்து, ''ஊ... ம்! ஒருவேளை, எனக்குப் பெண் பார்க்கிறார்களோ, என்னவோ?'' என்று அவளைச் சீண்ட முயன்றான் அவன்.

அவனைப் புரிந்து கொண்டு, ''அதுதான் எப்போதோ பார்த்து விட்டீர்களே!'' என்று, அசட்டையாகப் பதில் சொன்னாள் சுந்தரி.

''அது யார் சுந்தரி? உனக்குத் தெரியுமா?'' என்று ஆர்வம் காட்டித் தன் சீண்டலைத் தொடர்ந்தான் மனோ கரன்.

''ஆகா! என்ன ஆசையடா! அப்படியானால், அம்மா பார்க்கிற பெண் யாராக இருந்தாலும், அவளை மணந்து கொள்வீர்கள் போல!'' என்றாள் அவள் நமுட்டுச் சிரிப் புடன்

''அப்படியானால்தான், எனக்கு நாலைந்து ஆண்டு கள் முன்னதாகவே மணமாகியிருக்குமே! இப்போது, ஏதோ அவதாரம் போலப் பெண் பார்த்து, என்ன பயன்?'' என்றான் அவன் பதிலுக்கு.

இருவரும் இப்படிச் சிரிப்பும் கேலியுமாகப் பேசிக் கொண்டிருக்கையில், எல்லோரையும் அறை நடுவுக்கு அழைத்து, மனோகரனின் கையில், ஒரு நீண்ட குழல் போன்ற டப்பாவைக் கொடுத்தார் வாசு.

''ஏ... ஏ... வாசு, இதை என்ன செய்வது?''

"பிரித்துப் பார்ப்பது, இப்படி!" என்று, அந்தக் குழலைத் திறந்து, சுருட்டி வைக்கப் பட்டிருந்த ஒரு தடித்த காகிதத்தை, மனோகரனிடம் கொடுத்தார் வாசு.

"பிரித்து, விரித்துப் பாரப்பா!"

பிரிக்கும்போதே, அது என்ன என்று, மனோகரனுக்குத் தெரிந்து போயிற்று.

அவனது லட்சியக் கனவு, அடுத்தடுத்து, சின்னச் சின்ன காட்டேஜ்கள், வசதி குறைந்தவர்கள் சேர்ந்து தங்க வசதியாகப் பெரிய டார்மிட்டரி.

வரைபடம் பிரமாதமாகத்தான் இருந்தது. ஆனால், அதற்கான நிலம்?

"இதை எங்கே கட்டுவதாக உத்தேசம்?"

"ஓகோ!" என்றார் வாசு! "இந்த சர்வே நம்பர் போன்றதுகள், உனக்கு ரொம்பப் பழக்கம் கிடையாதில்லையா? இதோ, இந்தப் பக்கவாட்டு எல்லையும், இந்த வீட்டு எல்லையும் ஒன்றேதான். நிலமும், இந்தச் செல்வநாயகி அம்மாவுடையதேதான். உன் நோக்கத்துக்காகத் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு, அடிப்படைப் பணம்கூட, ரஞ்சிதம்மா பாங்க்கில் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்கள். கட்டடங்களைக் கட்டி முடித்தபின், வாடகை மூலமே, கடனைக் கட்டிக் கொள்ளலாம்! உன் பெரியவர்கள் வாடகை கொடுக்கக் கூடியவர்கள்தானே!"

நண்பனின் கையைப் பற்றி, "நன்றி, நன்றி!" என்றவன், செல்வநாயகி, ரஞ்சிதம், எல்லோரையும் பார்வையால் அணுகி, "மனமார்ந்த நன்றி!" என்று நன்றி தெரிவித்தான்.

''நன்றியை, நீ எங்களுக்குத் தெரிவிக்காதே! அதற்கு உரியவர்கள் இவர்கள்தான்!'' என்று சுந்தரியைக் காட்டினான் வாசு.

''உன் ஆசை புரிந்து, நிலத்துக்கார அம்மாவிடம் கேட்டு, என்னையும் பிடித்து, எல்லாமே செய்தது, உன் ஆள்தான். உன் நன்றியை, அவர்களிடம் சொல்லு!'' என்றான் சினேகிதன்.

சுந்தரியைப் பார்வையால் விழுங்கினான் மனோகரன்.

''அவளிடம் நன்றி சொல்லத்தான் போகிறேன், நண்பா! ஆனால், இத்தனை பேர் மத்தியில் அல்ல!'' என்று அவன் சொன்ன விதத்தில், சுந்தரியின் கன்னங்கள் சூடேறிச் சிவந்தன.

# ஒன்றுபட்ட உள்ளங்கள்

ரமணிசந்திரன்

